இவ்வேளையில், இன்றும் ஹாட்லிக் கல்லூரி என்ற உணர்ச்சிக் காவியம் என்னுள்ளத்தில் பசுமையாகவும் உறுதியாகவும் சுடர்விட்டு எரிவதற்கு காரணமான நிகழ்ச்சியையும் குறிப்பிட விரும்புகின்றேன். ஹாட்லிக்கல்லூரி நூலக புனரமைப்புக்கென எனது நண்பர்கள் சிலரும் நானும் சேர்த்த ரூபா. 40 ஆயிரம் ரூபாவை, ஹாட்லிக் கல்லூரி அதிபரிடமிருந்து திருப்பி பெற்று வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவிடம் ஒப்படைக்குமாறு இளைஞர் குழுவொன்றினால் துப்பாக்கி முனையில் எனது தந்தையாரும் நானும் மிரட்டப்பட்டோம். அவர்களின் கோரிக்கைக்கு இணங்காததையடுத்து 1985-ம் ஆண்டு முற்பகுதியில் ஆயுதம் தரித்த இளைஞர் குழுவினரால் எனது இல்லம் சூறையாடப்பட்டதுடன் எனது தாயாரும் சகோதரரும் மிருகத்தனமாக தாக்கப்பட்டார்கள்.

கல்லூரிக்கு அருகிலிருந்த இராணுவ முகாம் அகற்றப்படாததையடுத்து, கல்லூரியை புட்டளை மகாவித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கல்லூரி தீக்கிரையாக்கப்பட்டு எட்டு மாதங்களின் பின்னர் மீண்டும் பாடசாலை புட்டளையில் இயங்கத்தொடங்கியது. கொட்டில்களும் அருகில் இருந்த வீடுகளும் பாடசாலை வகுப்பறைகளாக மாற்றப்பட்டன. நான் உயர்தர வகுப்பில் இருந்த போதிலும் முதல் இரு வாரங்களும் நிலத்தில் இருந்து எழுதிப் படித்ததை இன்றும் நான் மறக்கமுடியாது. சிறிது சிறிதாக மாணவர்கள் கல்லூரிக்கு வரத்தொடங்கினர்.

போதுமான வகுப்பறைகள், கதிரை மேசைகள், எந்தவித ஆய்வுகூட வசதிகள் விளையாட்டு உபகரணங்கள் இல்லாது, சிறகொடிந்த பறவை இரை தேட முனைவது பான்ற அனுதாப நிலையில் கல்லூரி இருந்தது. கல்லூரியை மீண்டும் கட்டுக்கோப்பான கலைவிளக்காக ஒளியெற்றும் கடமை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோரிடம் இருந்தது.

1985-ம் ஆண்டு பிற்பகுதியில் கல்லூரியின் தலைமை மாணவன் (Head Prefect), விஞ்ஞான பொது அறிவுப்போட்டிக் குழுவின் தலைவன், யாழ்மாவட்ட இளைய விஞ்ஞான சங்கத்தின் தலைவன், கல்லூரி சாரணிய அணியின் தலைவன் போன்ற தலைமைத்துவ பொறுப்புக்கள் எனது தோள்களில் இருந்தன. கல்லூரியின் வரலாற்றில் 'மிக இக்கட்டான வேளையில், எரிந்த சாம்பலில் இருந்து உயிர்த்தெழும் பறவையின் வரலாறு போல், எமது கல்லூரியை மீள புனரமைக்கும் பணி எமது முன் என்றுமே நிலைத்திருந்தது. கல்லூரியின் நடவடிக்கைகள் (கல்வி தொடர்பான) மீண்டும் சிறிது சிறிதாக வழமைக்குத் திரும்பின. மாணவர்களின் தொகை (குறிப்பாக உயர்தர வகுப்பில்) குறைவாக இருந்த போதிலும் கல்வியில் ஆர்வம் செலுத்தப்பட்டது. 1985-ம் ஆண்டு நடைபெற்ற உயர்தர வகுப்பு பரீட்சையில் எமது கல்லூரி

மாணவர்கள் யாழ்மாவட்டத்தில் முதலிடம் பெற்றனர். சர்வதேச இளைஞர் ஆண்டை முன்னிட்டு நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் நான்முதலிடம் பெற்றுக்கொண்டேன்.

1986ம் ஆண்டு கல்லூரியின் பெறுபேறுகள் திறமையாக இருந்தன. 3 மாணவர்கள் யாழ்ப்பாண மருத்துவ பீடத்துக்கும் எனது நண்பன் மணிவண்ணனும் நானும் கொழும்பு மருத்துவ கல்லூரிக்கும் ஏறத்தாழ 18 மாணவர்கள் பேராதனை, மொறட்டுவை பொறியியல் பீடங்களுக்கும் தெரிவானார்கள்.

கல்லூரியின்குழு யாழ்மாவட்ட விஞ்ஞான அறிவுப்போட்டியின் யாழ்ப்பாண வேம்படி மகளிர் கல்லூரியை தோற்கடித்து முதலிடத்தையும் விஞ்ஞான ஆராய்ச்சி பேச்சுப்போட்டியில் எனக்கு இரண்டாவது இடமும் கிடைத்தன. கல்லூரியின் பொது அறிவுப் போட்டிக் குழு கொழும்புக்கு இலங்கை விஞ்ஞான முன்னேற்றக் கழகத்தின் 42 வது வருடாந்த விழாவில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டது. கல்லூரிக் குழுவின் தலைவன் என்ற தகுதியில் கல்லூரிக்குரிய வெற்றிக் கேடத்தையும் சான்றிதழ்களையும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவிடமிருந்து 1986 ம் ஆண்டு மார்கழி மாதம் 8ம் நாள் BMICH இல் நடைபெற்ற விழாவில் பெற்றுக்கொண்டேன். 1986ம் ஆண்டு இறுதியில் இலங்கை திட்டமிடல் அமைச்சினால் நடாத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியிலும் யாழ்ப்பாண சென். ஜோன்ஸ் கல்லூரி யாழ்ப்பாணக் கல்லூரி, சாவச்சேரி இந்துக் கல்லூரி ஆகியவற்றை தோற்கடித்து மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டோம்.

க. பொ. த (உயர்தர) பரீட்சைக்கு பின்னர், கல்லூரியின் ஆசிரியர் பற்றாக் குறையை தவிர்க்குமுகமாக, எனது நண்பர்கள் சிலரும் நானும் க. பொ. த. சாதாரண தர, உயர்தர வகுப்புகளுக்கு கல்வி கற்பித்தோம். கல்வி கற்பித்தலில் நாட்டமும் இளைய சமுதாயத்தினர் மத்தியில் அறிவும் கட்டுப்பாடும் திறமையாக நிலவவேண்டுமென்ற அவாவும், கல்வி கற்பிக்கும் பணியை 6 மாதங்களுக்குத் தொடர உந்து சக்தியாக இருந்தன. கல்லூரியின் புனரமைக்கப்பட்ட நூலக பொறுப்பாளராகவும் சாரணீய அணியின் பயிற்சியாளராகவும் கடமையாற்றும் பொறுப்புக்களும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டன.

1987ம் ஆண்டு எனது விருப்பத்திற்கு மாறாக இருந்த பொழுதும், எனது எதிர் காலத்தை முன்னிட்டு கல்லூரியிலிருந்து விலகி Computer Course இதற்காக யாழ் நகர் சென்றேன். 1987 May மாதம் நடைபெற்ற 'Operation Liberation' என்ற இராணுவ நடவடிக்கையின் போது புட்டளையில் அகதிகளாகவும், எமது கல்லூரியில் அமைந்திருந்த இராணுவ முகாமில் இரு தினங்கள் இருக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஏறத்தாழ 3 வருடங்களின் பின்னர் இடிவடைந்த நிலையில், இராணுவ முகாமாக எமது கல்லூரியை பார்த்தபோது உள்ளம் விறைத்து நின்றது.

இச் சம்பவத்தையடுத்து, கொழும்பு மருத்துவக் கல்லூரியை நோக்கிய எனது பயணம் ஆரம்பமானது. 1990ம் ஆண்டு இறுதிப்பகுதியில் அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் புலமைப் பரிசில் கிடைத்து மெல்போன் பல்கலைக்கழகத்திற்கு வருவதற்கு முன்னர், கல்லூரியை பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அன்று தற்போதைய கல்லூரி அதிபர் திரு. நடராஜா ஆசிரியருக்கு கொடுத்த உறுதி மொழிக்கேற்ப, இன்றுமல்ல, என்றும் எவ்விடத்தில் இருந்த போதும் ஹாட்லிக் கல்லூரி என்ற ஞான தீபம் சுடர்விட்டு பிரகாசமாக ஒளிபரப்புவதற்கு எமது பணி தொடரும்...

ஓய்வுபெறும் அதிபர்

திரு. டபிள்யு என். எஸ். சாமுவேல் அவர்களின் பிரியாவிடை வைபவத்தின்போது

கல்லூரியின் அதிபராக 1975-ம் ஆண்டு தொடக்கம் 1985-ம் ஆண்டு வரை கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள அதிபர் திரு. டபிள்யு. என். எஸ். சாமுவேல் அவர்களுக்கு கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்களால் வழங்கப்பட்ட பிரியாவிடை வைபவ நிகழ்ச்சிகளை கீழே தொகுத்துத் தருகிறோம்.

அதிபர் திரு. பொ. பாலசிங்கம் அவர்களின் உரையிலிருந்து.

நாவன்மையாலும், பரந்த மனப்பான்மையாலும் பரந்த சமூகத் தொடர்பாலும், ஆழ்ந்த சமயப்பற்றாலும், ஆக்க பூர்வமான சாதனைகளாலும் வாழ்வாங்கு வாழ்ந்த ஒருசில ஆசிரியருள் திரு. சாமுவேலும் ஒருவராவர்.

ஒரு அதிபர் நான்கு பகுதியினருடன் தொடர்புடையவராக இருக்கிறார். மாணவர், ஆசிரியர், பெற்றோரும் நலன் விரும்பிகளும், அரசாங்கம், ஆகிய நான்கு பிரிவினருடன் திறம்பட பணியாற்றி ஹாட்லிக் கல்லூரியின் நாமத்தை கூறும் போது இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே என்ற மனப்பாங்குடன் அந் நான்கு துறையினருடனும் நன்றாகப்பழகித் தன் பணியைப் புரிந்தார்.

இவருடைய காலத்தில்தான் இங்கிலாந்திலும் ஒரு பழைய மாணவர் சங்கம் அமைக்கப்பட்டது.

கல்லூரிக்கு ஒரு கீதத்தை முதலில் ஆங்கிலத்திலும் பின் தமிழில் மொழி பெயர்த்தும் அளித்தார். அதனால் இக் கல்லூரி நிலைத்திருக்கும் வரை அந்தக் கீதமும் நிலைத்திருப்பதுடன் அந்தக் கீதத்தில் அவரது இதயமும் ஒலித்துக் கொண்டிருக்கும்.

எங்களது கல்லூரி நூலகத்தை எரித்தவர்களுக்கு சங்கு சுட்டாலும் வெண்மை தரும் என்ற உண்மையைக் கற்றுக்கொள்ளச் செய்தார். Phoenix (பீனிக்ஸ்) என்ற பறவை எரிந்து எரிந்து மிகச்சிறப்பான உத்வேகத்துடன் வளருமாம். அது போன்றதே எமது கல்லூரி. அது ஒரு கட்டிடத்துக்குள் மட்டும் அமைந்த ஒன்றல்ல. அது ஓர் பாரம்பரியம் என்று உலகறியச் செய்த பெருமைக்குரியவர் திரு. சாமுவேல் அவர்கள். அவர் எங்களை விட்டு பிரிந்தாலும் அவரது சேவை மனப்பாங்கு அவரை விட்டு நீங்கவில்லை. அதனாலே தனது கிறிஸ்தவ சமய தாபனம் ஒன்றில் ஆராய்ச்சியாளராக பணிபுரிகின்றார்.

கீழ்ப்பிரிவு மாணவன் செல்வன் என். எஸ் பிரபாகரனின் உரையிலிருந்து

எமது கல்லூரி சாதாரண மக்களின் ஒரு கலைக்கூடம். குறிப்பாக விஞ்ஞானத் துறையிலே ஈட்டிய புகழ் என்றைக்கும் சளைத்ததில்லை. இந்த உண்மையை ஸ்ரீலங்காவில் தெரியாதோர் இல்லை. இதற்கு யார் பொறுப்பு. இங்கு வளர்க்கப்பட்ட கல்லூரிப் பாரம்பரியத்தை மேலோங்கச் செய்த பெருமையில் அதிபர் திரு. டபிள்யு. என். எஸ். சாமுவேலுக்கும் பெரும் பங்குண்டு. ஆசிரியராகவே பிறக்கும் சிலரில் ஒருவரான எமது அதிபர் எதிர்காலத்தில் அதிபர் என்ற கோணத்திலே புகழ் தாங்கி நிற்பார்.

ஆண்டு 8 ஏ மாணவன் செல்வன் கு. குகரட்சனது உரையின்போது

புன்னகை தவழும் முகம், பல விடையங்களை ஒரே நேரத்தில் அவதானிக்கும் ஆற்றல், கருணை உள்ளங்கொண்ட கடைக்

கனிவு பார்வை, தெளிவான பேச்சு தூய்மை யான உடை, ஏறுபோன்ற பீடுநடை இவை யாவற்றையும் ஒருங்கே கொண்ட அமைதி யான தோற்றந்தான் எமது அதிபர் திரு. டபிள்யு. என் எஸ். சாமுவேல் அவர்கள்.

இவரது முப்பத்தேழு வருட கல்விச் சேவையில் இருபத்தேழுவருடம் ஆசிரியரா யும் ஏழு வருடம் பதில் அதிபராகவும், மூன்று வருடம் நிரந்தர அதிபராகவும் எமது கல்லூரிக்கு அரும்பெரும் சேவையாற்றிய வர்.

நல்லாசிரியராயும் ஊக்கமுடையவரா யும் இருந்த இவர் ஆங்கிலத்தில் அதிக பற் றுள்ளவர். ஆசிரியர், வகுப்புகளுக்கு சமூக மளிக்க முடியாத நேரங்களில் வகுப்புக ளுக்குச் சென்று ஆங்கிலப் பாடங்களைக் கற்பிப்பார். தமிழ் விழாக்கள், விளையாட் டுப் போட்டிகள், சாரணியம் போன்றவற் றிலும். அதிக கவனம் செலுத்தி கல்லூரியின் புகழை மேலும் உயர்த்தியவர். நன்றி என் னும் சொல்லுக்கு மதிப்பளிப்பவர்.

செல்வன் க. இரமணேஸ் 8 பி ஆற்றிய உரையின் ஒருபகுதி

நான் 1981ம் ஆண்டு ஆறாம் வகுப்பில் சேர்ந்தபின் எமது பாடசாலை நிர்வாகத் திறனும் கட்டுக்கோப்பும் உடையதென்பதை உணர்ந்து கொள்ள வைத்தவர் திரு சாமுவேல் என்பதை தனது அனுபவம் ஒன்றை குறிப்பிட்டு உணர்த்தினார். அத்து டன் மாணவரால் தெரிவு செய்யப்படும் வகுப்புத் தலைவர் மீதும் அதிபருக்கு நம் பிக்கையிருந்தது என்பதை விளக்க ஒரு சம் பவத்தையும் குறிப்பிட்டார். ஆசிரியரற்ற வேளையில் ஆங்கிலக் கவிதை கட்டுரைகளை மாணவரிடம் கொடுத்து அவற்றை மனனம் செய்விப்பார். அவர் எமது வகுப்பில் கொடுத்த ஆங்கிலக் கவிதையின் இரு வரி கள் இவை "Life is real, Life is earnest And grave is not its goal."

"அதாவது வாழ்வு உண்மையானது, வாழ்வு உழைக்கத்தக்கது. புதைகுழி வாழ் வின் முடிவல்ல."

செல்வன் எம். சண்முகலிங்கம் (12 பி)வகுப்பி லிருந்து வழங்கிய கவிதையிலிருந்து. சில வரிகள்,

"பேராதனையென்றாலென்ன
பெரும்பதவிதான் என்றாலென்ன
நாலுக்குள் மூன்று ஹாட்லி என்ற
பெயர் சேர்த்தபெருமை
யாருக்கையா சேரும்
நேருக்கு நேர் வீற்றிருக்கும் எமது
நேற்றைய அதிபர் சாமுவேலைச் சேரும்"

(பெரும் இடங்களில் ஹாட்லி மாணவர் பெரும் பங்கினராக இருப்பர் என்ற பொருளில்)

ஆசிரியை திருமதி. இ. செல்வராஜாவின் உரையிலிருந்து.

சாமுவேல் என்பவர் எமது சமயத்தின் ஓர் தீர்க்கதரிசி. அப்பெயரைத் தாங்கிய எமது அதிபரும் அப்பெயருக்கேற்ப கல்லூ ரியின் எதிர்காலத்தை எண்ணிச் செயற்பட் டவர்.

யேசுநாதரது மலைப்பிரசங்கத்தில் "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாகி இருக் கிறீர்கள். விளக்கினை மரக்காலினால் மூடிவைக்காது மரக்காலின் மேல் வைத்து மற்றவர்களுக்கு பயன்படச் செய்ய வேண்டும்." எனக் கூறியுள்ளார். இவ்வாச கத்திற்கேற்ப அன்புடனும் பண்புடனும் பழகி, ஒழுக்கம், பொது அறிவு ஆங்கிலம் போன்றவற்றைப் புகட்டி ஒளிபரவச் செய்த வர். சுருங்கக் கூறின் இவர் ஒரு unassuming kindhearted gentleman எனக் கூறலாம்.

ஆசிரியர் திரு. ந. குணசீலன் ஆற்றிய உரையிலிருந்து.

கல்லூரியின் பாரம்பரியத்தைக் கட்டிக் காத்த அதிபரைப்பற்றி குறுகிய நேரத்தில் கூறிவிட முடியாது.

கல்லூரி நூலகம் எரிக்கப்பட்டபோது அதிலிருந்த சில நூல்களையாவது காப்பாற்ற வேண்டும் என்ற நோக்குடன் தன்னுயிரையே துச்சமாக மதித்து செயற்பட்டவிதம் அவர் கல்லூரியில் தன் உயிரையே வைத்திருந் தார் என்பதைக் காட்டுகிறது.

அன்பினால் மாணவர்களிடம் கட்டுப்பாட்டை வளர்த்து தலைமைத்துவத்திற்கு கட்டுப்பட்டு நடக்கும் ஒரு மாணவ சமுதாயத்தை உருவாக்கினார். ஆசிரியருக்கு நண்பனாகவும் மாணவருக்கு ஆசானாகவும் விளங்கினார். கல்லூரி விளையாட்டுப் போட்டிகளில், ஆசிரியர்க்கிடையிலான போட்டியில் தானும் பங்குபற்றி உற்சாகம் ஊட்டுவார். மெதடிஸ்த திருச்சபை விழாக்களில் தவறாது பங்கு பற்றுபவர். அகில இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் உப தலைவராக இருந்தபோது இங்கிலாந்து செல்லும் சந்தர்ப்பத்தைப் பெற்றார். அங்கு பழையமாணவர்களை ஒன்று கூட்டி ஓர் பழைய மாணவர் சங்கத்தை அமைத்தார். கொழும்பு பழைய மாணவர் சங்கத்தையும் புனரமைத்தார். பல பெரும் பிரமுகர்களை சந்தித்து கல்லூரியின் வளர்ச்சிக்கான பணிகளை ஆற்றினார். லயனெஸ் கிளப்பிலும் செயல்திறன் மிக்க அங்கத்தவராக திகழ்ந்தார்.

தற்போதைய அதிபர் திரு. க. நடராசா அவர்களின் உரையிலிருந்து

ஒரு பெரிய தலை முறையைச் சேர்ந்த அதிபர் திரு. டபிள்யு. என். எஸ். சாமுவேலைப் பற்றி ஏறத்தாழ பதினாறு ஆண்டுகள் இங்கு கடமையாற்றி வருகின்றேன் என்ற வகையில் நான் அறிந்தவற்றைக் கூறுகிறேன்.

திரு டபிள்யு. என். எஸ். சாமுவேலுக்கு முன்னிருந்த அதிபர் இராசதுரை அவர்கள் திரு. சாமுவேலைப் பற்றிக் குறிப்பிடும் போது "Keeper of Hartley's conscience" என்று குறிப்பிட்டதுபோல ஹாட்லியின் மரபுகளை நன்கு அறிந்தவராயும் அதைப் பேணும் ஆர்வம் உடையவராயும் உள்ளார்.

இவரது காலத்தில் பல நிகழ்ச்சிகள் ஒழுங்காக நடைபெற்றன. கல்லூரிச் சஞ்சிகை, உயர் வகுப்பு மாணவர் சங்கமும் அதன் இராப்போசன நிகழ்வும், நாடகங்கள் போன்ற யாவற்றையும் பேணி கல்லூரியை முழுமை பெறச் செய்ததுடன் அவை தனது காலத்திலும் அதன் பின்னரும் பேணப்பட வேண்டும் என்ற பெருவிருப்புடையவராக விளங்கினார்.

இவருக்கு ஒரு கொள்கைப் பிடிவாதம் இருந்தது. அதாவது இக்கல்லூரி ஏனைய கல்லூரிகளை விட முன்னுக்கு நிற்கவேண்டும் என்ற ஆவேசம் இருந்தது.

நேரு இங்கிலாந்துக்குப் போனபோது தான் கற்ற Harrow பல்கலைக்கழகத்திற் சென்று நிலத்தில் வீழ்ந்து வணங்குவாராம். அது அவருக்கு தெய்வமாக, தாயாக இருந்தது. திரு. டபிள்யு. என். எஸ் சாமுவேலுக்கும் அதேபோன்று ஹாட்லிக் கல்லூரி இரண்டாந் தாயாகி விட்டதால் படையினர் விரட்டிய போதும் அதனை விட்டுப்பிரிய மனமின்றி இருந்தார். தன்னை வளர்த்த, தான் வளர்த்த கல்லூரியின் வளாகத்தை விட்டுவர விரும்பாவிடினும் கல்வியைப் பாழாக்கவிரும்பாததால், புற்றளைக்கு வந்து சேர்ந்தார்.

திரு. ஆர். எம். குணரட்ணம் அவர்கள் தனது பிரியாவிடையின்போது "ஹாட்லிக் கல்லூரி ஒரு பாரமான வண்டி, அதைப் பலர் சேர்ந்து தள்ளவேண்டும். அதை நான் தள்ள முயற்சித்தேனே தவிர அதைத் தள்ளவில்லை" என்று பணிவாகச் சொல்லி விட்டார். இப்படியான பெரியார்கள் சேர்ந்து தள்ளியதனால்த்தான் ஹாட்லிக் கல்லூரி இந்த உன்னத நிலைக்கு வந்திருக்கிறது.

Where there is Faith, there is Love
Where there is Love there is Peace
Where there is Peace there is Truth
Where there is Truth, there is God.

— **Bhagavan Satya Saibaba**

Speech delivered by Rathan Markandan Subramaniam,

the Head Prefect of the College.

Our Former Principal Mr. W. N. S. Samuel, Mr. P. Balasingam Principal Sir, Mr. C. Tharmalingam, Our beloved Teachers and my Friends.

I consider it a great privilege to be called upon to offer you the gratitude goodwill and bestwishes of your grateful pupils. This privilege would have been immensely pleasant had this memorable occasion been held in the hall of our hallowed institution,. But cruel circumstances have denied all of us the simple legitimate pleasure. These circumstances made us suffer from arson, theft, murder and eventually heart-rending abandonment of our sacred buildings and premises. Yet, Sir, thanks to your stewardship we have remained and will continue to remain undaunted and indomitable in this new home presided by a magnanimous principal, Mr. C. Tharmalingam and the generous people of this area. Sir, let me hasten to declare this spirit that keeps us steady and steadfast facing all challenges has been your precious gift to Hartley college over the past 10 years of your exemplary and dedicated service.

While constantly instilling in to us the virtues in an all round education, the values of English Language, the importance of sports and games and the indispensibility of discipline you have equipped each one of us with all the qualities essential to a successful Life. Following the footprints of a long line of illustrious principals you made Hartley College not merely a mightly institution but a great tradition famous not only in Sri Lanka but in the outside world too. You have added another mighty chapter to the history of your Alma Mater, a history replete with Hartleyites entering the halls of learning and the fields of service with its distinction and credit. We feel happy in reminding ourselves that during your period of service more than ever before Hartleyites have swelled the ranks and banks of men all over the globe thereby creating an empire of fame and influence for us. Though we are sad that difficult circumstances have torn you from us, we assure you Sir, we do not get you, your well earned retirement. You have served us well and truly. We remember you with gratitude and pride. It is from the bottom of our hearts we say farewell to you. May God bless you and your noble children with happy, healthy long life.

Thank you.

திரு. டபிள்யு. என். எஸ். சாமுவேல் அவர்களின் பதிலுரை

அதிபர் திரு. பொ. பாலசிங்கம் அவர்களே எங்களுக்கு புகலிடம் தந்து காட்லிக் கல்லூரி சிதறிப் போகாது பாதுகாத்துத் தந்த திரு தர்மலிங்கம் அவர்களே ஆசிரிய நண்பர்களே என்பிரிய மாணவர்களே அனைவருக்கும் அன்பான வணக்கங்கள்.

பல்வேறு இடங்களில் இருந்து சுண்டிப் பார்த்து தராசில் போட்டு நிறுத்தெடுத்து சேர்த்த மாணவர் நீங்கள், உங்களிடம் நான் முதலில் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு வகுப்பிற்கும் வந்து "போய் வருகிறேன்" என்று விடை பெற்று கொள்ள முடியாத நிலையால்தான் இருந்து விட்டேன். எனது அன்பு மாணவர்களே நான் 42 வருடங்களாக தொடர்புற்றிருந்த பாடசாலையை விட்டுப் பிரிந்து சென்று 2 மாத மாகியும் இன்று உங்கள் முன்பேச முடியாத நிலையில் இருக்கிறேன்.

எனக்கு ஹாட்லிக் கல்லூரி ஒரு Magnificent obsession [மகோன்னத பிடிவாதம்] இந்தப் பாடசாலையை அதி உயர்ந்த நிலையில் வைத்திருக்க வேண்டும். இந்தப் பாடசாலையில் உள்ள மாணவர்கள் கொழும்பு, பேராதனை என்று இலங்கையில் மட்டுமல்ல உலகின் மூலை முடுக்கில் இருக்கும் எந்த பல்கலைக் கழகத்துக்குச் சென்றாலும் அங்கெல்லாம் எல்லோராலும் மெச்சப்படக் கூடிய மாணவர்களை உருவாக்கக் கூடிய முறையில் காட்லியை நடத்திச் செல்ல வேண்டும் என்பதே எனது பிடிவாதமாக இருந்தது. கடவுளின் கிருபையினாலும் ஆசிரியர்களின் திறமையான சேவையினாலும் கடந்த 10 வருடங்களும் பாடசாலை மேம்பட்டுக் கொண்டுதான் வந்தது. 1982ல் - பொறியியல் துறைக்கு எமது பாடசாலையில் இருந்தே ஆகக்கூடுதலான மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். எமது பாடசாலை மாணவனே அதி கூடிய புள்ளியாக 361 ஐ பெற்றிருந்தார்.

1983 ஐ விசேடமாகக் கூற வேண்டும். கல்வி அமைச்சரின் செயலாளருக்குக் கூட எமது பாடசாலையைப் பற்றி கொழும்பில் நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டது, எமது பாடசாலையை 'Control School' ஆக்கினார்கள். பரீட்சையில் குற்றம் குறைகளை அறிந்து கொள்வதற்கு காட்லிக் கல்லூரி மாணவர்கள் அந்தப் பரீட்சையில் எப்படிச் செய்தார்கள் என்பதை கவனித்து அதற்கேற்ப பரீட்சையின் தன்மையினைத் தீர்மானித்தார்கள்.

1982 ல் கிரிக்கட் போட்டிகளில் எந்தவொரு பாடசாலையுடனும் தோல்வியடைய வில்லை, மேலும் இவ்வாண்டில் Public School களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் 2ம் இடத்தினையும் எமது கல்லூரி பெற்றுக் கொண்டது. யாழ் மாவட்டத்தில் விளையாட்டுப் போட்டியில் எமது மாணவர்கள் சிறப்பான முறையில் திறமைகளை வெளிப்படுத்தி பல வெற்றிகளைப் பெற்றனர். அப்போதைய சென்ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திரு. ஆனந்தராஜா அவர்கள் உரையாற்றுகையில் "Today Hartley College is the best all round College in Jaffna எனக் குறிப்பிட்டார். அகில இலங்கைரீதியிலும் பல போட்டிகளில் வெற்றிகளை பெற்றுக் கொண்டார்கள்.

கட்டிட வசதிகள் இல்லாமையும் நீண்டகால குறைபாடாக விளங்கியது. எனது காலத்தில் அழகான இரண்டுமாடி விஞ்ஞான ஆய்வு கூடமும், பூரணம்பிள்ளை மண்டபமும் கட்டக் கூடியதாக இருந்தது. இதனால் எமக்கு கட்டிடம் இல்லாத குறையும் நீங்கியுள்ளது என்றே கூறவேண்டும்.

1984ம் ஆண்டு புரட்டாதி மாதம், நூலகமும் ஏனைய சில கட்டிடங்களும் எரியூட்டப்பட்டன. ஐப்பசியில் 1000 மீற்றர் தடைச்சட்டம் வந்தது. அத்துடன் எனக்கு இருந்த Zest of work இல்லாமல் போய் விட்டது. வேலை செய்யும் உத்வேகம் சடுதியாய் மறைந்தது. லண்டன் பழைய மாணவர் சங்கம் எதையும் தரக்கூடிய நிலையில் இருந்தார்கள். ஆனால் நாம் எதையும் பாதுகாக்க முடியாத நிலையில் இருந்தோம். கல்லூரி குழம்பப் போகின்றது என்ற பயம் என்னை பீடித்தது. பின் ஒழுங்குபடுத்த எத்தனையோ முயற்சிகள் எடுத்தோம், அத்தனையும் பயனற்றுப் போயின.

புட்டன மகாவித்தியாலய அதிபர் திரு. தர்மலிங்கம் எமது பாடசாலையின் பழைய மாணவர். நம்பிக்கையுடன் அவரை அணுகினோம். அவரின் தயவாலும், ஏனையவர்களின் தயவினாலும் இன்று பாடசாலையை இங்கு நடத்தக் கூடியதாக இருக்கின்றது.

ஒருமாணவனுக்கு, வகுப்பறை ஆய்வு கூடம், நூலகம், விளையாட்டுமைதானம் என ஒரு allround Education ஐ கொடுக்க வேண்டும். இவை இல்லாது வேலை செய்யும் வேதனை என்னை பலவீனப் படுத்தியது. எதிர்கால சந்ததிக்கு கொடுக்க வேண்டியவற்றை இழந்துவிட்டோமே என்ற திகில் என்னை வாட்டியது.

இந்நிலையில்தான் முடிவொன்றை எடுக்க வேண்டியிருந்தது. அதிபர் பதவியை தகுதியானவரிடம் ஒப்படைப்பது என முடிவு எடுத்தேன். ஒரு பாடசாலையின் அதிபராக இருப்பதற்கு 5 தகுதிகள் இருக்க வேண்டும்.

நல்ல ஆசிரியராக இருக்க வேண்டும்.
மாணவர்களில் அக்கறையுள்ளவராக இருக்கவேண்டும்.

மாணவர்களை நன்கு கவனிக்கும் ஒருவராக அதாவது ஒரு good pastor ஆக இருக்க வேண்டும்.

நல்ல கல்விமானாக இருக்க வேண்டும்,
சிறந்த நிர்வாகியாக இருக்க வேண்டும்.

திரு பாலசிங்கம் அவர்களிடம் இந்தத் தகுதிகளுடன் வேறும் பல நல்ல தகுதிகள் விசேடமாக இயல்பாக அமைந்திருந்ததால் அவரிடம் அதிபர் பதவியை ஒப்படைத்து தலைவணங்கி வெளியேற வேண்டும் என்று தீர்மானித்தேன்.

திரு. பாலசிங்கம் அவர்களுக்கு பகிரங்கமாக நன்றியை கூறுகின்ற அதேவேளையில் எமது கல்லூரியின் புகழ் ஒரு போதும் குன்றாது என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன். அன்பான மாணவர்களே, ஆசிரியர்களே, கல்லூரி உங்களுக்கு ஒரு பெயரைத் தந்திருக்கின்றது. ஹாட்லிக் கல்லூரியில் இருப்பதென்பது ஒரு Royal family யில் (ஒரு அரச குடும்பத்தில்) இருப்பது போன்றது. அண்மையில் இருக்கும்போது அதன் அருமைபுரியாது. கல்லூரியை விட்டுப்பிரிந்து நீங்கள் எங்கிருந்தாலும் அது ஒரு light house ஆக நின்று உங்களுக்கு வழிகாட்டிக் கொண்டே இருக்கும்.

எவ்வளவோ இலட்சியங்களுடன் கட்டப்பட்ட பாடசாலை இது. அதன் பெருமையை காப்பாற்ற வேண்டியது ஒவ்வொரு மாணவனினதும் கடமையாகும். 1988ம் ஆண்டு திரு. பாலசிங்கம் அவர்களின் வழி நடத்துகையின் கீழ் எமது கல்லூரியின் உன்னதமான 150 வது வருடத்தை கொண்டாட வேண்டும்.

இங்கு பேசியவர்களுக்கும் உங்கள் ஒவ்வொருவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறுதியாக ஒரு வேண்டுகோள். எல்லோருமாகச் சேர்ந்து ஒற்றுமையாக கல்லூரியின் இலட்சியம் கெடாமல் உழைக்க வேண்டும். மீண்டும் அதே இடத்தில் ஹாட்லி இயங்கி phenix (பீனிக்ஸ்) பறவை போன்று மீண்டும் தளைத்தோங்க எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று உங்கள் அனைவரையும் தயவோடு வேண்டி விடைபெறுகின்றேன்.

முன்னைய அதிபர் திரு. பொ. பாலசிங்கம் அவர்களுக்கு அளித்த பிரியாவிடை வைபவம் பற்றிய தொகுப்பு

கல்லூரி அதிபர் திரு. பொ. பாலசிங்கம் அவர்களின் பிரியாவிடை வைபவம் 19.10.93 அன்று வை. எம். சி. ஏ. மண்டபத்தில் ஆசிரியர், மாணவர், ஊழியர் என்போரால் சிறப்புற நடத்தப்பட்டது. காலை 9 மணிக்கு கல்லூரி முன்றலில் ஆசிரியர், மாணவர் தலைவர், சாரணர் ஆகியோரின் அணி வகுப்பு மரியாதைகள் சகிதம் மண்டபத்திற்கு திரு. பாலசிங்கம் அவர்களும் அவர் தம் துணைவியாரும் அழைத்துச் செல்லப் பட்டனர்.

புதிய அதிபர் திரு. க. நடராஜா அவர்கள் இந்த வைபவத்துக்கு தலைமை தாங்கி வரவேற்புரையும் வழங்கினார். ஆசிரியர், மாணவர், சாரணர், ஊழியர் என்போர் சார்பில் பலர் பாராட்டுரை வழங்கினர். பேச்சு, கவிதை, பாடல் என்பவற்றுனூடாக திரு. பாலசிங்கம் அவர்களின் சேவைத்திறன், குண இயல்புகள் அவருடனான ஊடாட்டங்கள் என்பவற்றை உணர்ச்சி பூர்வமாக வெளிப்படுத்தினர்.

பிரியாவிடை கீதம்

இந்து மாணவர்களும், கிறிஸ்தவ மாணவர்களும் வாழ்த்துப்பாவினை திறம் பட இசைத்தனர். பாடலோடு அவர்தம் பெருமை கூறியும், வாழ்த்தியும் புதுப்பெலன் பெற வேண்டுதலும் செய்தனர். கிறிஸ்தவ மாணவர்கள் ஆங்கிலத்திலும் வாழ்த்துக் கீதம் இசைத்தனர்.

மாணவர் உரையின் சாரம்

உயர் வகுப்பு மாணவர் சார்பில் செல்வன் பிரதீபன் பேசுகையில் வசதிகள் ஏதுமற்று அகதியாக அலைந்த கல்லூரியை திறம்பட நடத்தி, வெற்றி காண்பது எளிதான விசயமல்ல. இக்கட்டான வேளையிலும் அன்பினையே தவறுக்கு தண்டனையாகக் கொடுக்கும் அவர் அன்பெனும் பெரு நெருப்பு என்றும், அந்த நெருப்பில் எங்கள் குறைகளை பொசுக்கிய பெருந்தகை எனவும் குறிப்பிட்டார்.

10 பி மாணவன் செல்வன் தி ஜோதிவேல் தனது உரையில் 150 ஆவது ஆண்டு விழாவை கல்லூரியின் சொந்த இடத்தில் நிகழ்த்துவதற்கு அவரின் பங்களிப்புப் பற்றியும் பரபரப்பான சூழ்நிலையிலும் பதட்டப் படாத புன்னகை சிந்தும் வதனம், அமைதியான செயற்பாடு காரணமாக மாணவர்கள் அவர்பால் ஈர்க்கப்பட்டதையும் கூறினார்.

செல்வன் த. திருமுருகன் ஆங்கிலத்தில் இனிமையாகவும் திறம்படவும் உரை நிகழ்த்தினார். (இந்த உரை சஞ்சிகையில் பிறிதோர் இடத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது)

திரு ந. குணசிலன் அவர்களின் உரையின் போது

கல்லூரியின் பகுதித் தலைவர்களில் ஒருவரான திரு. ந. குணசீலன் ஆசிரியர், பேசுகையில் திரு. பொ. பாலசிங்கம் அவர்கள் அதிபர் என்பதைவிட நண்பனாகத் திகழ்ந்து பண்பான முறையில் நிருவாகத்தை நடத்தினார். ஒவ்வொருவரிலும் அசையாத நம்பிக்கை வைத்து பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்து அனைவரையும் அன்பினால் கட்டி மையப்படுத்தினார். பிரச்சினைகளை சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்தாலோசித்து தீர்வுகளை அவர்களுடாகவே பெற்றுக் கொடுப்பார். இப்பண்புகளால் எமது பாடசாலையின் சிறந்த அதிபராக

மட்டுமன்றி சிறந்த கொத்தணி அதிபராக வும் திறம்பட கடமையாற்ற முடிந்தது என்றார். ஹாட்லி என்பது பெரும் பாரம் பரியம், அதைக் கட்டிக் காக்க வேண்டியதே எமது பொறுப்பு என அடிக்கடி கூறும் இவர் அதனை சிறந்த முறையில் நடைமுறைப் படுத்தினார். அவரது சேவைகள் எமது கல்லூரி கொத்தணி பாடசாலைகள், கூட்டுறவுச்சங்கம் ஆலயங்கள் எனவிரிந்து பரந்து பட்டதாக விளங்கியதையும் திரு. குணசீலன் அவர்கள் குறிப்பிட்டார்.

அதிபரின் அறிமுக உரையின் போது

அதிபர் நடராஜா அவர்கள், முன்னைய அதிபரின் நகைச்சுவை உணர்வு பற்றி கூறினார். மேலும் பேச்சாளர்களை அறிமுகப்படுத்தி வைக்கும் போது அதிபர் நடராஜா அவர்கள் திரு. பாலசிங்கம் அவர்களின் நகைச்சுவை உணர்வு இக்கட்டான காலங்களில், இக்கட்டான நிலமைகளில் ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் மன இறுக்கங்களை குறைத்து ஒரு உளச்சிகிச்சை நிபுணர்போல் உளவளத்தை பேண உதவியது.

அதிபருக்குரிய கதிரையில் இருக்கும் போதும் வெளியிலும் எந்த நிலையிலும் சமநிலைத் தன்மையை இழக்காது, ஹாட்லியின் அதிபர் எப்படி இருக்க வேண்டும். தலைமைத்துவம் எப்படி இருக்க வேண்டும், என்பதை எல்லாம் தனது செயற்பாடுகள் மூலமே ஏனையோருக்கு அறியத் தந்தவர்.

மற்றவர்களில் இருக்கும் திறமைகளை யெல்லாம் இனங்கண்டு உற்சாகப்படுத்தி பொருத்தமான வேளைதனில் மாத்திரம் அவரிடமுள்ள குறைகளை பெரிய குறையில்லை என்பது போல் நாசூக்காக கூறி திருந்தி நடக்க வேண்டும், என்பதையெல்லாம் உணர்த்தி செயல்பட வைத்தவர். இதனால்தான் ஹாட்லியின் வரலாற்றில் உன்னதமான அதிபர்களின் வரிசையில் இவரும் ஒருவராக கணிக்கப்படுகிறார்கள்.

செல்வி. வை. இந்துமதி அவர்களின் உரையிலிருந்து

கல்லூரி ஊழியர் சார்பில் செல்வி வை. இந்துமதி அவர்கள் உரையாற்றினார். புதிதாக வேலைக்கு சேர்த்த தன்னை அமைதியான முறையில் கல்லூரி நடைமுறைகள், பொறுப்புக்கள், வேலை நுட்பங்கள் பலவற்றை ஒரு தந்தையின் நிலையில் இருந்து கற்றுத்தந்ததாகவும் காரியாலயத்துக்கு வருவோரை அணுக வேண்டிய முறைகளையும் அறிய வைத்து வழி நடத்தியவர் என குறிப்பிட்டார்.

திருமதி எஸ். செல்லத்துரை அவர்களின் உரையின் சாரம்

அதிபர் அவர்களின் குடும்பத்தினை நன்கு அறிந்தவரும் சிரேஸ்ட ஆசிரியையுமான திருமதி. செல்லத்துரை அவர்கள் தமது உரையில் பல்வேறு விடயங்களையும் குறிப்பிட்டார். திரு. பாலசிங்கம் அவர்களின் தமையனார் எஸ். பி. நடராஜா அவர்கள் ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியராக கடமை புரிந்தவர். கல்லூரிக்கு அரும் பணியாற்றி அந்நாளில் சேவை காரணமாக கல்லூரியின் மதிப்பைப் பெற்றவர். அவர் அதிபராக பதவியுயர்வு பெற்றுச் சென்ற பின் அவர்தம் தம்பியார் திரு. பொன். பாலசிங்கம் அவர் இடத்தை நிரப்பி தமையனாரின் பணியைத் தொடர்ந்தார் எனவும் கூறினார்.

திரு. பொ. பாலசிங்கம் அவர்கள் ஆங்கிலத்தில் சிறந்த புலமை வாய்ந்தவர். அக்காலத்தில் பாடசாலை சஞ்சிகைகளில் இவரின் ஆசிரிய தலையங்கம் மிக்க சிறப்பாக அமைந்திருக்கும். இது ஆங்கில அறிவு நிரம்பிய குழாத்தினரால் மிகவும்பாராட்டப் பட்டது எனவும் குறிப்பிட்டார்.

குறிப்பாக பல்கலைக்கழகம் புகவிருக்கும் மாணவர்கள் இவரின் ஆங்கிலம் கற்பித்தலால் பெரும் பயன் அடைந்தனர். அதில் தனி ஈடுபாடு கொண்டனர். இவ

ரின் பிள்ளைகள் உயர்நிலையில் இருப்ப தற்கு இவரின் இத்தகைய சேவை மனப் பாங்கே காரணம் என கூறினால் அது மிகையாகாது.

அதிபர் அவர்களின் வேறுபாடு காட் டாத நடுநிலை பண்பு தன்னை மிகவும் கவர்ந்தது எனவும் குறிப்பிட்டார் ஆய்வு கூடத்தினை மீளமைப்பதில் இவர் அக்க றையுடன் செய்த சேவைகள் மறக்கமுடியா தவை என்றார்.

திருமதி. பாலசிங்கம் கல்லூரியின் பழையமாணவி. பெண்ணுக்குரிய அனைத்து லட்சணங்களும் கொண்டவர் எனவும் குறிப்பிட்டார்.

திரு. மா. இராஜஸ்காந்தனின் உரையிலிருந்து

திரு. மா. இராஜஸ்காந்தன் அவர்கள் விளையாட்டுத்துறையை கட்டியெழுப்ப அதிபரின் அரிய முயற்சிகள் பலவற்றை நினைவு கூர்ந்தார். மேலும் வாசிக சாலையை மீளமைப்பு செய்து உயர்நிலைக்கு கொண்டு வந்தமை, சாரணர்குழு, நாடக மன்றம், என்பன சிறப்புற்று நிகழ வைத் தமை பற்றியும் தனது அனுபவங்களை கூறினார்.

பாடசாலைக்கு சேவை செய்தோரை மாணவர் மத்தியில் அறிமுகப்படுத்தி கௌர வித்து மாணவருக்கும் சேவை எனும் பண்பை ஊட்டி விட்டார். ஆசிரியர் அறைக்கு அடிக்கடி வந்து நெடுநேரம் நண் பனாக பழகி நகைச்சுவைகளால் எம்மை உற்சாகத்துடன் சேவை செய்ய வைத்தவர் என்பதையும் குறிப்பிட்டார்.

— —

ஆசிரியர் திரு. பா. ஞானப்பிரகாசம் அவர்களின் கவிதையிலிருந்து

ஆசிரியர் ஞானப்பிரகாசம் அவர்கள் நல்லதோர் நீண்ட கவிதையினை உணர்வு பொங்க வழங்கினார். அக்கவிதை அதிபர் அவர்கள் பற்றிய ஒரு முழுமையான பார்வையாக அமைந்திருந்தது கவிதையிலிருந்து இடையிடையே பெறப்பட்ட சில வரிகள்.

ஒழுங்கான வகுப்பறைகள், உற்ற சூழல்
ஒரு தடையும் இல்லாமல் உலவும் காலம்
மழுங்காத மாணவர்கள், மாற்றான் போற்றும்,
மாட்சிமைகள் பெற்றுயர்ந்த மக்கட்கூட்டம்,
எல்லாமே இருக்கையிலே சேவைசெய்தல் இது ஒன்றும் பெரிதல்ல,
பொல்லாத தடைகள் போர் உற்றபோது, '
பொறுப்பாக செயற்படுதல் பெரிதுஅன்றோ,
உருக்குலைந்த மண்டபங்கள் உடைந்த மேசை,
ஒற்றைக்கால் இல்லாத சொத்தி வாங்கு - காற்றுகூட
நெருப்பெனவே சுடுகின்ற காலச்சூழல்
நின்றெதிர்த்து சேவை செய்தாய் நீடுவாழி.

ஆயிரம் இடங்கள் நாடி அகதியாய் அலைந்தோமே, நிலைகுலைந்தோமா,
கோயில் மடத்திற்கும், கொட்டிலின் நிழலிற்கும் எமை
வாயில் கௌனி வாழ்வு அளித்திட காவித்திரிந்தோரே மறப்போமா ஐயனே
ஆவி துடிக்குதையா நினைக்கையில்
நெஞ்சு வீங்கி வெடிக்குதையா..............

மடை திறந்த அன்பால் மயக்கிய மேதைக்கு
விடை கொடுக்க மனமோ விளம்பாயோ மட நெஞ்சே.

G

பண்டிதர் பரந்தாமன் அவர்கள் எழுதிய வாழ்துப்பாவினை ஆசிரியர் சிவநாதன் அவர்கள் தன் இனிய குரலில் பாடினார்.

பருத்திநகர் தன்னில் திருத்தகவமைந்த ஹாட்லிக் கல்லூரியில்
ஆற்றலுடைய முதல்வராய் அரும்பணி புரிந்து தமது அறுபது அகவை
நிறைவுறு நாளில் ஓய்வு பெறும்

திரு. பொ. பாலசிங்கம் அவர்கட்கு

உடனுறை ஆசிரியரும், கடனறி மாணவரும்
மனமுவந்து அரிதாய் அளித்த

பிரியாவிடை வாழ்த்து

பல்கலை பயின்று மாணிப் பட்டமும் பெற்றோன் மிக்க
கல்வியின் இயல்ப றிந்து கடமையைச் செய்யும் வீரன்
சொல்லிய பொறுமை யுள்ளத் தூய்மையும் பணிவும் அன்பும்
ஒல்லதி யற்றும் மாந்த நேயமும் உடையன் மாதோ !

ஏழைகட் கிரங்கும் மேலோன் எவ்வெவர் பாலும் மிக்க
தோழமை பூண்டு நிற்போன் தொண்டுகள் பலவி யற்றி
வாழவே விரும்பும் தூயோன் நகைச்சுவை மகிழ்ச்சி சேர்த்து
பீழைகள் நீங்க நன்கு பேசிடும் பால சிங்கம் !

எல்லோரும் போற்ற முன்பு கற்றதை எண்ணிக் ஹாட்லிக்
கல்லூரி தன்னில் வந்து கடன்முறை இயற்றி நின்றோய் !
வல்லாள ! முதல்வ னாகி மறுவிலெட் டாண்டு காத்தாய்
நல்லூழொன் றில்லேம் இந்நாள் நம்பிநீ பிரிய நின்றோம் !

சிங்களப் படையர் அன்று தீயிடச் சிதைந்த பள்ளி
பொங்கியே பொலிய வைத்தாய் சிறையிடப் பிடித்த எங்கள்
தங்கமா ணாக்கர் தம்மை மீட்டிவண் தந்து பால
சிங்கமும் நீயே யென்றுன் பெயரினை நிறுவிக் கொண்டாய்

இடம்பெயர்ந் தலைந்த போதும் நூலகம் எரித்த போதும்
திடமுடன் முயன்று ழைத்துத் திரும்பவும் பழைய தன்மை
நடந்திட வைத்தா யப்பா ! நலிவுகள் நீங்கச் சீர்க்கட்
டிடங்களு மெழுப்பி மன்றம் எழிலுற யுயர்த்தி னாயே !

நல்லவன் நீயே ! வல்லவன் நீயே !
எல்லவர் தமக்கும் இனியவன் நீயே !
எங்கள் முதல்வ, இயலறி புலவ,
மலர்ந்த முகத்த, மாவருட் கண்ண,
நகைதரு சொல்ல, பகைவர் கூற்றே !
நயமலி செய்கை நாடிய நம்பி !

அறுப தகவை நிறைவுறு மாதலின்
ஓய்ந்திட நின்றனை ஈந்தனம் விடையே
தாயினு மிக்கோய் வாய்மொழி கேணீ
ஆய்ந்த கல்வி, அரும்புகழ், செல்வம்
ஏய்ந்திட வாழ்க பெரும்,
வானின் விளங்கு மீனினும் பலவே !

ஹாட்லிக் கல்லூரி அதிபர்
ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்

Speech delivered by Mast. T. Thirumurugan,

Head Prefect of the College.

It is, with great sorrow I appear before you to bid farewell to our beloved principal Mr. P. Balasingam who fulfils his ripe years of service at Hartley. As a Head Prefect, I am really proud to have this rare opportunity of making a farewel speech on behalf of my colleagues. But at the same time I am rather nervous to ake the floor in the presence of our principal, a renowned speaker in both English and Tamil.

Principal sir, your talk at the school assemblies and other occasions had the natural sense of humour full of advice and anecdotes through which you instilled in us values and virtues. We assure you sir, we would live worthy of the high ideals you preached to us. Your maxim " Be respectful to be respectable" (If you want to be respectable you must be respectful) will ever remain in our hearts and guide us throughout our life.

Sir, your service during the difficult times is invaluable and will go in the annals of history of Hartley. You took over Hartley after the valuable library had been reduced to ashes by the armed forces and when a situation arose for Hartley to vacate its own sanctuary, you shouldered all the responsibilities like a father and moved us to Puttalai Maha Vidyalaya and made available all the necessaries. Your strenuous efforts and unperturbed disposition during the period of tension and turmoil made us quite secure To the greatest wonder the academic performance of the students was remarkably good. Scholerships to foreign universities especially the prestigious scholarship to Cambridge (University was) awarded to Hartleyites two successive years. These scholars won global fame to College.

You underwent great difficulties to bring back Hartley to its own premises and your efforts made the College flag fly high in its compound.

Thereafter you had a multimillion plan for the renovation and construction work. Unfortnately the disturbances in our region made your hopes and plan hampered. However your endeavour and enthusiasm has never slacked. You put up a shed here a shelter there and provided accomodation to us. The want of a library was keeny felt by you and with the assistance from various sources you started forming a library and in your attempt you have achieved a considerable success.

During the 1987 Vadamaradchy Military operation, when pupils and past pupils of the College were arrested by the armed forces, you boldly went into the Point Pedro Army Camp defeated them with your witty retorts and prevented many a Hartleyite from

being taken to the Boosa detention Camp. Thus you have protected our brothers even beyond the boundaries of the College for which the society is indebted to you a lot.

If you were seen coming round with a cane we know you are unusually serious that day and we would take extra care making ourselves 'out of danger'. If ever any of us happens to get one or two cuts in our palm for any mishievous acts, it is really a gift in disguise. The next day or later you would feel sorry for the victim and show more kindness towards him.

Sir, you have been exemplary to us in every manner. Your natural unassuming qualities attracted us. You shunned publicity which in turn gave you enough popularity. Like the two sides of a coin, we find in you the blend of nobility and humility. Sir, to us you are a wholesome personality giving vigour and strength to every one.

You have not only been the principal of our College but a shock absorber, a protector, a caretaker - in addition the trustee of the great traditions - Hartley.

Gratitude is the parent of all virtues. Sir, you have told us this saying and gave us the meaningful Tamil translation in one of our assemblies. Today I am at a loss of words to express our deep gratitude. Hence with the three words 'Thank you sir' I wish to express our sincere gratitude on behalf of my friends and wish you sir, Madam Balasingam and your beloved children many more years of healthy, prosperous long life.

Thank you

மலை நிகர் மாண்பு, கலை பயில் தெளிவு, கட்டுரை வன்மை, ஆசிரியனுக்குரிய புற, உள் ஆளுமைகள் முற்றும் பூரணமாயமைந்த ஆனால் பிள்ளையுள்ளங் கொண்ட அந்த மாமனிதன் தான் ஹாட்லிக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரிதான், பூரணம்பிள்ளை. அந்த அளவுக்குத் தன்னைக் கல்லூரியோடு சங்கமமாக்கி விட்டவர் அவர். மனிதன் பழக்கி உயர்த்தக்கூடிய நல்ல மிருகம் என்னும் உண்மையை உணர்ந்தவர் அவர். அமீபாவின் வளர்ச்சி லெமூர். லெமூரிலிருந்து மனிதன் தோன்றினான் என்பதில் கருத்து வேறுபாடுகள் இருக்கக் கூடும். ஆனால் மனிதனிலிருந்து மாமனிதன் தோன்ற முடியும் என்று அவர் நம்பினால், அதனைச் செய்ய வல்லது கல்வியே என்பதும் கல்வி நிலையங்களில் பணி அதுவே என்பதும் அவரது அசையாத நம்பிக்கை.

— கலாநிதி வித்துவான் க. ந. வேலன்

Excerpts from the speech delivered

by the Principal K. Nadarajah

You have just listened to a speech by Mas. T. Thirumurugan, the Head prefect of the school. The high esteem in which the principal is held by the student community is reflected in the speech. He has described his qualities and the contribution he has made towards the development of the school.

Of all his good qualities three need special mention. They are his humility, his humane approach to all problems and his sense of humour.

He is humble not only in the company of his superiors but also in the presence of his colleaques and subordinates. He is humane in his approach to all issues be it absentism, late coming or cutting classes by students and teachers. He could be humourous on any occasion. He is the speaker most sought after. His sense of humour has never deserted him.

These qualities have endeared him to all. They have enabled him to enlist the co-operation of both Governmental and NGO's in the task of rehabilitation of the school. They have helped to enhance the prestige of the school in the academic circles. They have enriched the social life of our school community.

Our school has suffered the worst holocaust in the recent past. The library was set on fire. The buildings were damaged. The laboratory equipment were completely destroyed. The computer and the T. V. were taken away. But the education did not suffer for want of buildings, furniture, books or teachers.

Sheds were put up. Jointed long benches were made. The books that were collected and donated by Jaffna Students' Committee were housed in a special room built for that purpose and were brought here, when we came back.

Our students and teachers were taken into custody by the Sri Lankan Forces and the IPKF. Your timely intervention and tactful approach have rescued them. If not for you, they would surely have ended in the army camps and some of them may still languish there.

One of your brothers, the late Dr Rajasingham was asked to write his reminescences at Hartley to the College Miscellany some years back. He wrote, "I shudder to think what would have been my fate, had there been no Hartley College within walking distance from my house. Now one of you, who has the good fortune to go through the portals of this great

Institution, I am sure, will write some years hence that I shudder to think what would have happened to Hartley College had not Mr. Balasingam been the Principal during the tragic years following the burning of the library. With a background of academic discipline in history acquired in the University of Ceylon in the mid fifties you have made history at Hartely College 30 years later.

When the history of the 150 years of the school comes to be written the name Pon Balasingam will be written in letters of Gold.

திரு. பொன். பாலசிங்கம் அவர்களின் பதிலுரையிலிருந்து

அதிபர் திரு. பொ. பாலசிங்கம் அவர்கள் பதிலளித்துப் பேசினார். வைபவத்தில் உரைகள், கவிதை, பாடல் தந்த அனைவருக்கும் அன்பு வணக்கம் கூறி தொடங்கினார். இன்றைய நிகழ்ச்சியும் ஹாட்லியின் பாரம்பரியத்துக்கு இணங்க நேரம் தவறாமல் தொடங்கியதில் மகிழ்ச்சியடைகின்றேன். மதவேறுபாடு 'இன்றி இரண்டு மதங்களை கடைப்பிடிப்பவர்கள் வாழ்த்துப்பா பாடியதில் அக மகிழ்ச்சியடைகின்றேன். எனக்குமுன் பேசியவர்கள் ஆங்கிலத்தில் எனக்குள்ள விருப்பு பற்றி கூறினார்கள் உண்மையில் ஆங்கிலம் ஒரு சிறந்த மொழி குறிப்பாக தமிழை வளர்க்க விரும்புவோர் கட்டாயம் கண்டு படிக்க வேண்டியமொழி அது. ஊட்டச்சத்துப் போன்றது. எனது பேச்சிலும் தெரிந்தோ தெரியாமலோ வருகின்ற ஆங்கிலச் சொற்களை உன்னிப்பாக கவனியுங்கள் எனக்கேட்டுக் கொண்டார். அவரது உரையில் பல இடங்களில் சிறப்பாக ஆங்கில சொற்றொடர்கள் உபயோகித்தார். தமிழிலும் அதற்கு விளக்கம் கொடுத்தார். செல்வன் திரு. த. திருமுருகன் அவர்களின் ஆங்கிலப் பேச்சு திறம்பட அமைந்திருந்தது என்றார்.

கல்லூரி என்பது நீங்கள் தான் நானல்ல. இப்போது நடக்கும் சிறப்பு உங்களுக்குத்தான் இந்த சிறப்பில் நானும் பாரியாரும் மகிழ்வுறுகிறோம். அவ்வளவுதான்.

" Main thing in Communication is to listen what is not said "

என்பார்கள். இங்கும் எனது நிறைகள் பலவற்றை கூறினார்கள், நன்றி. ஆனால் குறைகள் நிறைய உண்டு கூறப்படவில்லை. எனது துணைவியார் இங்கு புகழப்படுவது தனது கணவன் தானே என ஆச்சரியத்துடன் அடிக்கடி என்னைத் திரும்பி கடைக்கண் பார்வை வீசினார். ஆனாலும் அவற்றை மனைவி ஏற்றுக் கொண்டிருப்பார் என நம்புகிறேன்.

நேற்றுக்கூட இறைவனை 2 விடயங்கள் வேண்டிக் கொண்டேன். ஒன்று இன்று மழை வரக்கூடாது. இரண்டு எனக்கு கண்ணீர் வரக்கூடாது, இதுவரை வரவில்லை.

'' நான் ஓர் அதிர்ஷ்டசாலி என்று தான் கூறுவேன். மாணவனாய், ஆசிரியனாய்' அதிபராய் மொத்தப் 37 வருடங்கள் இக்கல்லூரியுடன் பிணைக்கப்பட்டிருந்

தேன். இன்று நன்னடத்தைப் பிணையில் இருந்து விடுபட்டவன் போல் சுமையை இறக்கி விட்டு செல்கிறேன்.

இன்று அதிபருக்கு உரிய சீருடையில் இங்கு வந்துள்ளேன். இப்படி வரவேண்டியது எனது கடமையாகும். ஒருவேளை 4 முழமே போதும் என்ற எளிமையான மனப்பாங்கினைக்கொண்ட புதிய அதிபர் இதனால் கவலைப்படக்கூடும். ஆனால் வழமைகளை நாம் அனுசரிக்க வேண்டும். ஐ. நா. சபை சொர்க்கத்துக்கு அனுப்ப இயங்கவில்லை, நரகத்தில் இருந்து காக்கவே உள்ளது. இது ஒரு நல்ல கல்லூரியான எமது கல்லூரிக்கும் பொருந்தும்.

எமது கல்லூரி Poetic love of the file என்பார்களே, ஒரு அரம்போல செயற்படுகிறது. உங்களை உரசி உரசி மெருகூட்ட உதவுகிறது. அதிபர், ஆசிரியர் அப்படித்தான் செயற்படுகிறார்கள். கல்லூரி வாழ்வு சமூகத்துடன் இணைக்கும் பாலமாக இருக்க வேண்டும். இதற்கு எமது கல்லூரி ஒரு முன்னுதாரணமாக திகழுகின்றது, ஆனால் மற்ற நிலையங்கள் உங்களை சுற்றி சுவர் எழுப்பி கிணற்றுத்தவளையாக்கி விடுகின்றன.

ஒன்றை நேசிக்க விரும்பினால் அதை இழக்காமல் பாதுகாக்க வேண்டும். அது போலத்தான் எண்ணும் எழுத்தும் உங்கள் கண்களைத் திறக்கும். ஆனால் உங்களை ஆளுமை மிகுந்த மனிதனாக அடையாளமிட உதவுவன ஏனைய கல்லூரிச் செயற்பாடுகள் தான். இதில் நீங்கள் இயன்றவரை பங்களிக்க வேண்டும். பூவிற்கு வாசனை அடையாளம்போல் மனிதனுக்கு ஆளுமை அடையாளம் ஆகும்.

எமது பாடசாலை சிறந்த கோயில். வணக்கத்திற்குரிய பீற்றர் பேர்சிவல் பாதிரியார் உருவாக்கிய கல்லூரி. அன்று தொட்டு ஒரு தெய்வீக தொடர்பு உள்ளது. அது என்றும் கல்லூரியை ஜோதியாய் பிரகாசிக்க வைக்கும். அதனால்தான் இன்று எமது கல்லூரி சாம்ராஜ்யம் உலகெங்கும் பழைய மாணவர்கள் சங்க கிளைகளாக பரவி விரிந்து சூரியனே மறையாத ஒரு சாம்ராச்சியமாக உள்ளது.

எனது சாதனையென்று பலர் பலவற்றை கூறினார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரை நல்லதொரு அதிபரை எனக்குப் பின் தேர்ந்தெடுக்க முடிந்ததுதான் எனது சாதனை என்பேன். புதிய அதிபர் திரு. நடராஜா அவர்கள் நீண்ட காலமாக கல்லூரியின் தூணாக செயற்படுபவர். அமைதியும் எளிமையும் திறமையும் ஒருங்கே இணையப் பெற்றவர்.

இறைநம்பிக்கை கொண்டவன் நான். எனது ஒவ்வொரு கடமையிலும் இறைவன் கூடஇருந்து துணைபுரிந்தான். அதனால் தான் நான் வெற்றி பெற்றேன் என்று சொல்ல முடியாவிடினும் தோற்றுப் போகவில்லை,

கிறிஸ்தவ துறவி லாறன்ஸ் என்பவரின் கருத்துக்களை ராஜாஜி அவர்கள் 'தோழமை யோகம்' என்னும் புத்தகமாக மொழி பெயர்த்திருந்தார். அதில் பகவத்பிரீத்யர்த்தம் என்று ஒரு சொல்வருகிறது. அதாவது நம்முடைய எல்லா செயல்பாடுகளையும் ஆண்டவனுடைய மகிழ்ச்சிக்காக செய்ய வேண்டும் என்பது அதன் கருத்தாகும்.

அன்பான மாணவர்களே இறுதியாக நான் உங்களுக்கு சொல்லிவிட்டு போகும் செய்தியும் இதுதான். இறைவன் மகிழ வேண்டும் என்பதற்காக உங்களது ஒவ்வொரு செயற்பாட்டையும் செய்யுங்கள். ஆண்டவனே, நீயும் கூட இருந்து உதவினாலொழிய இதை நான் செய்து முடிக்க இயலாது என இறைஞ்சுங்கள், தோல்வி என்றுமே கிட்டாது. இது எனது அனுபவ உண்மையாகும்.

கல்லூரி கீதத்துடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

உப அதிபர் திரு. ஆர். வல்லிபுரம் அவர்களின் பிரியாவிடை வைபவத்தின்போது

அதிபர் பி. பாலசிங்கம் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து

திரு ஆர். வல்லிபுரம் அவர்கள் 1972 தொடக்கம் 1985 வரை 14 வருடங்கள் இங்கு கடமையாற்றினார். கம்பளை சாஹிரா, நுகவெல ம. ம. வி., தெல்லியடி ம. ம. வி போன்ற பல பிரபல பாடசாலைகளில் கடமை ஆற்றிய அனுபவத்துடன் இங்கு இடமாற்றம் பெற்று வந்தார். உயர்தர வகுப்புக்களில் பௌதிகம், பிரயோக கணிதம் என்னும் இரு பாடங்களையும் திறம்படக் கற்பித்தார். பழைய மாணவராகிய இவர், 1975 தொடக்கம் உப அதிபராகப் பதவியேற்று, கற்பித்தலுடன் நிருவாகப் பணியினையும் ஆற்றினார். ஆசிரியர்களிடமும் ஏனைய ஊழியர்களிடமும் தமாஷாகப் பேசி, நட்புறவு மூலம் பல வேலைகளை செய்து முடிக்கும் திறமை அவரிடம் காணக் கூடியதாக இருந்தது. அதிபர் திரு டபிள்யு. எஸ்' எஸ். சாமுவேல் இங்கிலாந்து சென்றிருந்த போது, அதிபராகக் கடமையாற்றிய 3 மாத காலத்தில் திருவாகத் திறமையை நிரூபித்தார். நெடிதுயர்ந்த தோற்றம், நேரிய பார்வை கையில் ஒரு கோல், மாணவர்களைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க உதவியது. வெளித்தோற்றம் காட்டுவதற்கு மாறாக, அவர் கருணை உள்ளம் படைத்தவர் என்பதை அவருடன் பழகிய எவரும் நன்கு அறிவர்.

செல்வன் சி. முரளிதரன் ஆற்றிய உரையிலிருந்து..........

திரு வல்லிபுரம் அவர்கள் எங்களுக்கு பௌதிகம் கற்பித்தார். அவருடைய வகுப்புக்களை மாணவர் ஆவலுடன் எதிர் பார்த்தனர். ஏனென்றால் அவர் அவ்வாறு வகுப்புக்களை நடத்துவார். எவ்வித ஆயத்தமுமின்றி வருபவர் போல் வருவார். கையில் புத்தகமோ கொப்பியோ இடையாது. வந்தவுடன் பாடத்தை ஆரம்பிப்பார். இடையிடையே வேடிக்கையாகப் பேசுவார். நாங்கள் அவருடன் மனந்திறந்து கதைப்போம். எதற்கும் கோபிக்க மாட்டார். சுந்தோரில் வேலைப்பழு காரணமாக சில நாட்கள் வகுப்புக்கு வராமல் இருந்ததுண்டு. வரும் நேரத்தில் நன்றாகக் கற்பிப்பார். பாடத்தில் அலுப்புத் தட்டாது. லீவு எடுப்பது மிகக்குறைவு. இதனால் மாணவர் மத்தியில் ஒழுக்கம், கட்டுப்பாட்டைப் பேண பெரிதும் உதவினார்.

— —

Let us endeavour to get through education, the knowledge lost in information, the wisdom lost in knowledge and the life lost in living.

RETIRING PRINCIPAL MR. P. BALASINGAM

Replies at his farewell

AT THE FAREWELL TO RETIRING DEPUTY PRINCIPAL MR. R. VALLIPURAM

Principal Mr P. Balasingam Speaks.

AT THE FAREWELL TO RETIRING DEPUTY PRINCIPAL

Head – Prefect B. Maniymaran garlanding Mr. V. Ponnampalam.

உப அதிபர் திரு. கே. வி. பொன்னம்பலம் அவர்களின் பிரியாவிடையின்போது

அதிபர் திரு. பாலசிங்கம் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து

திரு பொன்னம்பலம் அவர்களின் பிரியாவிடை வைபவத்தில் கலந்து கொண்டு அவருடைய சேவைகளைப் பாராட்டுவதற்கு கிடைத்த வாய்ப்பையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். அவர் இக்கல்லூரியின் உப அதிபராக இருந்து ஓய்வு பெறுகின்றார். கொத்தணி அமைப்பு முறையில் நான் கொத்தணி அதிபராக இருக்கிறேன் அத்துடன் பாடசாலை அதிபராக இருக்கின்றேன். பெயரளவிலே மட்டுந்தான் நான் பாடசாலை அதிபராக இருந்தேன் என்று கூறலாம். இப்பெரிய கல்லூரியின் பெரும் பொறுப்புக்களைச்சுமந்து எனது சுமையைக் குறைக்க உதவியவர் திரு பொன்னம்பலமே. பாடசாலைக்கு வரமுடியாத நேரங்களில் நான் வீட்டில் சென்று கொடுக்கும் பட்டியலில் உள்ள எல்லாவற்றையும் மிகத்திருப்தியாகச் செய்து கல்லூரியின் நற்பெயரைப் பேண அவர் பெரிதும் உழைத்தார். அதிபர் என்றமுறையிலும், தனிப்பட்ட முறையிலும் நான் அவருக்கு நன்றிகூறக் கடமைப் பட்டுள்ளேன். அவரும், அவரது குடும்பமும் சிறப்பாக ஓய்வுகாலத்தைக் கழிக்கவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

செல்வன் T. ஜோதிவேல் ஆற்றிய உரையிலிருந்து

திரு பொன்னம்பலம் அவர்கள் விஞ்ஞானமும், தாவரவியலும் கற்பித்தார். எல்லோருக்கும் விளங்கத்தக்கதாக கற்பிக்கும் ஆற்றல் இவருக்கிருந்தது. செய்முறை மூலம் அதிகமாகக் கற்றோம். வழமையான உபகரணங்கள் இல்லாதிருப்பினும் கிடைக்கும் எளியபொருட்களிலிருந்து தேவையான கருவிகளை ஆக்குவதில் திறமையானவர். எவ்வாறு ஆக்குவதென்று எங்களுக்குச் சொல்லித்தருவார். உபஅதிபர் என்ற முறையில் அடிக்கடி மேற்பார்வை செய்ததை எல்லோரும் அறிவர். மிகவும் சுறுசுறுப்பாக இயங்குவார். விஞ்ஞானக் கண்காட்சி, வெளிக்கள ஆய்வு என்பனவற்றிலும் மாணவருடன் பங்குபற்றி வழி காட்டினார். பரீட்சை வினாத்தாள்களை ரோணியோ செய்து தருபவரும் அவரே. எனவே அவர் ஒரு ஆசிரியராக, உபஅதிபராக, தொழில்நுட்ப வல்லுனராக கடமையாற்றி கல்லூரியின் வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டார்.

அவருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

— —

There is a loftier ambition than to merely stand high in the world. It is to stoop down and lift mankind a little higher.

— **Henry Van Dyke**

Farewell speech delivered by Mast. B. Manlymaran

Head Prefect of the College

There is a pleasant opinion, among our parents and well-wishes that to be a Hartleyite one should be lucky.

To hold an office as a Monitor, a Prefect, a Captain, a President or a Scout at Hartley College one ought to be luckier.

But to me, though I am fortunately a Head prefect, one has to be the luckiest to get a grand opportunity like the one today, to pay his and his fellow students' love and gratitude to one of their respected teachers.

And so, Ponnampalam Sir and Madam Ponnampalam I appear before you with a sense of previlege to express the thanks of your pupils - past and present - for all the love and care you have bestowed on our studenthood and made it fruitful.

It is teachers like you who make a Hartleyite feel great and achieve greatness. A farewell to a beloved teacher is always an event of mixed feelings.

It is sad to losé the close association of a teacher who has done many good things to make his students happy and successful.

At the same time when the inevitability of the event is realised it offers an occasion to tell the person at his farewell how great he is and thereby derive a delightfull consolation.

Sir, we are first and foremost proud that you are a distinguished product of our College and feel that there is a brotherly affection that keeps us tied to you for ever.

After your graduation and some years of service in other schools, our good luck brought you into our midst.

You have been with us for the last seventeen years thinking, speaking and doing good to make our lives bright to the very last moment of your period of service. We cannot even for a moment forget the values and virtues you have imprinted on our minds.

We will always cherish the motivating experiences you gave us, coming regularly and punctually to school, dressing simple clothes, wearing a graceful smile, walking along the corridors of our classrooms inquiring after our needs and comforts and of course giving the never failing severe cuts on our palms for unpardonable offences.

We assure you that though you are leaving Hartley College you are not going out of the Hartleyites now found all over the globe.

You will be welcome anywhere and everywhere you seek or find us.

We are grateful to you too Madam Ponnampalam for we know that you were behind all the goodness that your noble husband bestowed on us.

We wish you both and your beloved children long life, good luck and prosperity in your life.

As a token of our great regard and esteem we are very pleased to offer you a loving present which we hope you will be happy to receive from our thankful hands.

ஆசிரியர் திரு. வே. சிவசிதம்பரம் அவர்களின் உரையிலிருந்து

இங்கு பிரியாவிடை நாயகனாகவுள்ள எமது உப அதிபர் திரு. V· பொன்னம்பலம் அவர்களை நினைக்கும்போது எனது இளமைக் காலங்கள் என் கண் முன் ஊசலாடுகிறது. நான் எட்டு வயதில் ஒரு மாணவனாக ஞானாசாரியார் கல்லூரியில் இருந்த காலத்தில் எமது உபஅதிபர் எனக்கு ஆசானாக இருந்தார். இளமைத் துடிப்பு, ஒளிபொருந்திய கண்கள் வசீகரமான முகம் கவர்ச்சியான உடையலங்காரம் இவையெல்லாம் அன்று எமது உபஅதிபரிடம் காணப்பட்ட அம்சங்களாகும். அப்போது அவரின் அன்பான வார்த்தைகள் கண்ணியமான நடத்தை என்பவற்றால் நாமெல்லாம் கவரப்பட்டோம்.

அவர் ஆய்வுகூடத்திலே எப்போதும் சுறுசுறுப்பாக தொழிற்பட்டுக் கொண்டிருப்பார். விலங்கு உடல்களை பதனிடுவதிலும் மாதிரிப் பொருட்களை சேமிப்பதிலும் கற்பித்தல் சாதனங்களை ஆக்குவதிலுமே செயற்பட்டுக்கொண்டிருப்பார். சிறுவனாக இருந்த எங்கட்கு அவற்றைப் பார்க்க கொள்ளைஆசை. ஆனால் ஆய்வுகூடத்துள் செல்லவோ பயம். எப்படியோ இதனையறிந்து எமது உபஅதிபர் தாமாக முன் வந்து எங்கட்கு அவற்றை காண்பித்து ஊக்கப்படுத்தியதை இன்றும் என்னால் மறக்கமுடியாது.

பின் 1983ம் ஆண்டில் நான் இப் பாடசாலைக்கு ஆசிரியராக வந்தபோது மீண்டும் எமது தொடர்பு ஆரம்பமானது. என்னைக் கண்டதும் இன் முகத்துடன் வரவேற்று நீர் இப்போது எனது மாணவனல்ல. சக ஆசிரியனே என என்னை ஊக்கப்படுத்தியதை இன்றும் மறக்கமுடியாது.

திரு. பொன்னம்பலம் அவர்கள் இனிமையான உள்ளம் கொண்டவர்கள், திறந்த மனதுடையவர், நேர்மையாளன் என்று கூறுவதில் பெருமைப் படுகிறேன். பாடசாலையில் அவர் க. பொ. த உயர்தர வகுப்பு மாணவர்கட்கு தாவரவியலை ஒரு பாடமாக செயல்ரீதியாக கற்பிப்பார். அவர் கற்பித்தலிலும் இணைப்பாடச் செயற்பாடுகளிலும் எமக்கு ஒரு முன்மாதிரியான ஆசிரியராக இருந்து எங்களை வழிப்படுத்தினார்.

கொத்தணி அமைப்பு முறை நடைமுறையில் இருந்தபோது பாடசாலை நிர்வாகத்தை வழிநடத்தி செல்வதில் பெரும் பங்காற்றினார்.

எமது உபஅதிபர் அவர்கள் சிறந்த ஒரு தொழில்நுட்பவியலாளர். இன்றும் எமது பாடசாலையில் தொலைக்காட்சி பெட்டியாயினும்சரி, இரட்டிப்பு இயந்திரமாயினும் சரி பழுதடைந்தால் எமது உபஅதிபரின் கைவண்ணத்தால்தான், அது புதுப்பிக்க முடியும் என்னும் நிலை இருந்து வருகிறது.

இவ்வளவு ஆற்றலும் எங்கிருந்து வருகிறது. இவருக்கு பின்னால் மறைந்திருப்பவர். திருமதி. பொன்னம்பலம் அவர்கள் கண்ணுக்கு ஒரு ராதை, இரமனுக்கொரு சீதை போன்று எமது உபஅதிபருக்கு அவர் தம் மனைவியாவார். இவர்களின் திருமணம் பற்றி பெரும்பாலானோர் அறிந்திலர். காந்தர்வமணம் தொடர்ந்தும் இவ்வுலகில் இருக்க வேண்டுமென அதன் வழி நடந்தவர்கள் இவ் இருவரும்.

ஆண்டவன் அன்பான இரு செல்வங்களை இவர்கட்கு அளித்துள்ளார். இருவரினதும் கடமையுணர்விற்கும் விருந்தோம்பலுக்கும் மனித நேயத்திற்கும், சேவை மனப்பான்மைக்கும் எல்லாம் வல்ல இறைவன் நோயற்ற நீண்டவாழ்வினை வழங்க வேண்டுமென இறைவனை வேண்டி விடைபெறுகின்றேன்.

சிரேஸ்ட இடைநிலை அதிபர் பேராசான்

ஜே. எஸ். இராசரத்தினம் அவர்களின் பிரியாவிடையின்போது

அதிபர் திரு. டபிள்யு. என். எஸ். சாமுவேல் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து

திரு ஜே. எஸ். இராசரத்தினம் அவர்கள் இக்கல்லூரியில் 20 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றியுள்ளார். ஒரு சிறந்த கணித ஆசிரியராகவும், ஒரு சிறந்த நிர்வாகியாகவும் இக்கல்லூரியில் பணியாற்றியதன் மூலம் ஹாட்லியின் இதயத்தில் இவர் இடம் பிடித்துள்ளார் என்றால் அது மிகையாகாது. இவருடைய மனைவி திருமதி குணமணி இராசரத்தினம் மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் கடமையாற்றினார். இவருடைய ஆண்பிள்ளைகள் எல்லோரும் இக்கல்லூரியில் கற்று இன்று கல்லூரிக்கு பெருமையைத் தேடித்தந்துள்ளனர். திரு இராசரத்தினம் மெதடிஸ்த திருச்சபையில் ஆர்வமுள்ள ஒரு உறுப்பினராகவும் செயற்திறன்மிக்க ஒரு விசுவாசியாகவும் பணியாற்றுவது மெச்சத்தக்கது. திரு இராசரத்தினம் அவர்கள் கல்லூரியோடு மட்டும் நின்றுவிடாது தனது இல்லத்திலும் மாணவர்களுக்கு நிறைவான கல்விப்பணியை ஆற்றுவது போற்றத்தக்கது. இவ்வாறாக கல்வியிலேயே கண்ணும் கருத்துமாகவுள்ளவர் இக்கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்றாலும் கல்லூரியுடன் நெருங்கிய தொடர்பை வைத்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை. இவர் தனது ஓய்வுகாலத்தில் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாகவும், பூரணசுகமாயுமிருக்க வேண்டுமென்று இறைவனை வேண்டுகின்றோம்.

செல்வன் பா. பத்மசிறி ஆற்றிய உரையிலிருந்து.

திரு இராசரத்தினம் ஆசிரியர் அவர்களிடம் நான் 6ம் வகுப்பிலிருந்து 10ம் வகுப்புவரை கணித பாடத்தைக் கற்றேன். நான் கணிதத்தில் திறமையான மாணவன் அல்ல. ஆனால் ஆசிரியர் அவர்கள் அழகாக, ஒழுங்காக கற்பிப்பார். எழுத்து வடிவாக இருக்கவேண்டும். சமன்பாட்டுக்குறிகள் ஒன்றின் கீழ் ஒன்றாக ஒழுங்காக இருக்கவேண்டும். படிகள் தெளிவாக இருக்கவேண்டும். எந்த மாணவனும் இந்த 'கட்டளை' யிலிருந்து தப்பமுடியாது. தப்பினால் தாராளமாகக் கிடைக்கும் அடி. அடிவாங்கிய மாணவர்கள் எத்தனையோபேர் இன்று நல்ல பெறுபேறுகளைப்பெற்று உயர்தர வகுப்புகளில் கற்கின்றார்கள். இந்த வெற்றிக்கு மற்றுமொரு முக்கிய காரணம் வெள்ளிக்கிழமை தோறும் நடக்கும் பரீட்சை. மழை, வெயில் எதுவானாலும் பரீட்சை நடந்தே தீரும். விடைத்தாள் திருத்தப்பட்டு சிலருக்கு நல்ல பரிசு (அடி) வழங்கப்படும்.

செல்வன் கு. குகரட்சன் ஆற்றிய உரையிலிருந்து.

ஆசிரியர் திரு இராசரத்தினம் அவர்கள் ஒரு சிறந்த கணித ஆசிரியர் மட்டுமல்ல அவர் ஒரு சிறந்த நிர்வாகியும் கூட. குறிப்பாக 10ம் வகுப்புக்களின் கீழ் ஒரு மேற்பார்வையாளராகக் (Supervisor) கடமையாற்றினார். கையில் பிரம்புடன் தூரத்தே காட்சியளிக்கும்போது வகுப்புக்கள் பெட்டிப்பாம்பாக அடங்கிவிடும். ஒவ்வொரு மாணவனின் பெயரும் அத்துப்படி. முகபாவத்தில் இருந்தே குற்றவாளியை இனங்காணும் திறமை, பாரபட்சமின்றித் தண்டனை வழங்குதல், என்பன அவரது வெற்றிக்குக் காரணங்கள்.

பல வருடங்கள் ஷெரட் இல்லப் பொறுப் பாசிரியராக இருந்தார். இவரது இல்லம் தொடர்ச்சியாகப் பலவருடங்கள் வருடாந்த இல்லவிளையாட்டுப் போட்டிகளில் 'சாம்பி யன்' ஆகவந்ததை யாரும் அறிவர். இங்கும் இவரது நிர்வாகத்திறமையை கண்கூடாகக் காண முடிந்தது. போட்டிக்கு 2 மாதங்கள் முன்பே தனது இல்லப் போட்டியாளர்களைத் தயார்செய்யத் தொடங்கிவிடுவார். ஏனைய இல்லங்களின் வீரர்களை அறிந்து அவர்களு டன் போட்டியிட்டு வெல்லக்கூடிய வீரர்க ளைத் தெரிந்தெடுப்பதிலும், உற்சாகமூட் டுவதிலும் அவருக்குநிகர் அவரே. போட்டிக் குப் பல நாட்களுக்குமுன்பே முடிவு தெரிந்து விடும். ஏனைய இல்லங்கள் எல்லாம் ஷெரட் இல்லத்தை ஒரு பொது எதிரி ஆகப் பார்த் தார்கள்.

ஆசிரியர் திரு எம். சதானந்தன் அவர்களின்

பிரியாவிடை வைபவத்தின் போது அதிபர் திரு. டபிள்யு. என் எஸ். சாமுவேல் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து

திரு சதானந்தன் அவர்கள் 12 வரு டங்களுக்கு மேலாக கல்வி கற்பித்து 60 வயதைப் பூர்த்தி செய்து இன்று ஓய்வு பெறுகிறார். 10ம் வகுப்பு வரை தமிழ், சமயம் எனும் இரு பாடங்களையும் திற மையாகக் கற்பிப்பதில் வல்லவர். இன்று பேசிய மாணவர்களிடமிருந்து, கற்பிக்கும் போது, சலிப்புத் தோன்றாதிருக்க இடையே பல கதைகள், துணுக்குகள் கூறுவார் என அறிகிறோம். இவரது வகுப்புக்களில் மாண வர் ஆர்வங்காட்டியதில் வியப்பில்லை. வெள்ளிக்கிழமை தோறும் நிகழும் பிரார்த் தனைகளில் சமய உண்மைகளை ஆன்மீகக் கதைகள் மூலம் எடுத்துக்கூறி எல்லோரது பாராட்டையும் பெற்றார். கலை நிகழ்ச் சிகளுக்கும், கட்டுரை, பேச்சுப்போட்டிகளுக் கும் மாணவர்களைத் தயார் செய்து, பரி சுகள் பெற உதவினார். மாயவனின் பக் தர், எந்நேரமும் முகமலர்ச்சியுடன் காணப் படுவார். மற்றவர்களையும் மகிழ்ச்சியாக இருக்க வைத்திருப்பதில் வல்லவர்.

திருமதி எல். பத்மநாதன் அவர்களின் பிரியாவிடையின்போது

அதிபர் டபிள்யு. என். எஸ். சாமுவேல் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து

திருமதி பத்மநாதன் அவர்கள் 9 வருடங் களாகக் கடமையாற்றி இன்று சொந்த காரணங்களுக்காக ஓய்வு பெற்றுச் செல் கின்றார். தனது கடமையை உணர்ந்து சரிவர கற்பித்தலை மேற்கொண்ட ஆசிரியை இவர். கீழ் வகுப்புக்களில் தமிழ், சமயம், சித்திரம் எனும் பாடங்களைப் போதித் தார். அதனால் எமக்கிருந்த சித்திர ஆசி ரியர் பற்றாக்குறையும் நீங்கியது. மாண வர்களிடம் பண்புடன் பழகி, எல்லோரது இதயத்திலும் நீங்காத ஒரு இடத்தைப் பெற்றுக்கொண்டார். திறமையான மாண வர்களை இலகுவாக இனங்கண்டு கட்டுரை, பேச்சுக்போட்டிகளுக்கு தயார் செய்தார். இவரது எதிர்காலம் சிறப்புற அமைய வேண்டுமென வாழ்த்தி விடைபெறுகிறேன்.

Farewell accorded to Mrs. F. P. Selvaraj on her retirement

Excerpts from the address of the Principal Mr W. N. S. Samuel

We have met today to bid good-bye to an affectionate mother who has had a full share in the life of Hartley. In Mrs. Pushpam Selvaraj, I have found the Hartleyites look up her as 'mother' as she reciprocated the motherly affection on every child.

She has been a very loyal member of our staff whose love for the school and its pupils was second to no one else's. I found in her a willing worker who gave freely of her time and energy to the school.

Beside being a successful teacher of English in the Middle forms, she is a talented Musician and has contributed immensely to the standard of English singing at our Annual Carol Services and, helped us in training our children with 'Our College Song'

Some of our senior teachers are her 'Pupils' and they, along with the students of today will have much to say about her contribution, hence I desire to be brief wishing her all happiness in her retirement.

Excerpts from the Farewell Speech of Mr. D. R. Arumaynayagam.

At today's function, I stand before you, as a loyal pupil of Pushpacca with happiness and pride that I have been specially nurtured to be a teacher of English by Mrs. F. P. Selvaraj who taught me English in Grades 4, 5 and 6 at Hartley.

She left us after getting married and way away for a considerable length of time and rejoined us in 1972. When she rejoined us at Hartley, most of her pupils were on the staff, her proudness to 'own' us as her pupils, her cheerfulness and disciplined manner of living, her smartness and the culture behind her movements made her a very popular teacher.

She taught English with success and helped to enrich the life of the school in various ways. She helped to organise the Carol Services, the Cub Pack and the Scout Troops and made a definite contribution towards the success of 'Sherrad House'.

The help given by her in plenteous measure to Hartley cannot be touched in detail at this function as the time given to me is limited and we have many more to speak.

Hence I very respectfully wish to express our gratitude and wish her continued happiness and good health in her retirement.

Our Teachers Retired from Service

Mr. M. Sathananthan



1972 — 1983

Mrs. L. Padmanathan

1974 — 1983

Mr. J. S. Rajaratnam



Middle School Supervisor
1962 — 1984

Mrs. F. P. Selvaraj

1945 — 1953
1974 — 1983

Mr. T. Ratnasingam

1971 — 1989

Mr. B. Panchanatham

1984 — 1992

Teachers' Guild bids farewell to Mrs. S. Sellathurai



திரு. ரி. இரத்தினசிங்கம் அவர்கள்

ஓய்வுபெற்றுச் சென்றபோது
அவருக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடையின்போது

திரு. இரத்தினசிங்கம் அவர்கள் 71-ம் ஆண்டு பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக மாற்றம்பெற்று இங்கு வந்தார். இந்த மாற்றம் கல்லூரிக்குக் கிடைத்த அதிர்ஷ்டங்களுள் ஒன்று எனக் கூறலாம். ஏனெனில் இக்கல்லூரியில் பாரம்பரியமாக கிறிக்கெற், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்கள் உள்ளன. ஆசிரியரும் எல்லா விளையாட்டுக்களிலும் திறமை மிக்கவர். குறிப்பாக, உதைபந்தாட்டத்தில் இவருக்கு இருந்த திறமையும் ஆர்வமும் யாவரும் அறிந்ததே. 'Rats' is wedded to football எனக் கூறுவார்கள், மாலை நேரங்களில் 6 மணிக்கு மேலும் விளையாட்டு மைதானத்தில் இவரைக் காணலாம். Coach ஆக செயற்பட்டு, கல்லூரி அணி, பல வெற்றிகளை ஈட்டுவதற்கு காரணமாயிருந்தார்.

தடகள விளையாட்டுப் போட்டிகளில் எமது மாணவர்கள் பலர் Public Schools Meet இல் பங்குபற்றி பல இடங்களைப் பெற்றமை இவரது திறமைக்கு சான்றாக உள்ளது. கல்லூரி விளையாட்டுப்போட்டிகளில் Clerk of the course ஆக 1986 தொடக்கம் கடமையாற்றி உள்ளார். மேலதிக வேதனம் எதுவும் பெறாது, விளையாட்டுக்குப் பொறுப்பான செயலாளர்களுடன் பக்கபலமாக நின்று கல்லூரியின் விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய சேவையினை கல்லூரி என்றும் மறக்காது.

ஓய்வு பெற்ற பின்னரும் இவரது சேவை எங்களுக்குக் கிடைக்கும் என நம்புகிறோம்.

திரு. எஸ். எஸ். சிவசங்கரன், எழுதுவினைஞர்

ஓய்வுபெற்றுச் சென்றபோது கல்லூரிச் சமூகம்
அன்னாருக்கு அளித்த பிரியாவிடையின்போது.

1967 ம் ஆண்டில் கல்லூரிக்கு ஒரு சிறந்த எழுதுவினைஞர் தேவைப்பட்டபோது, அதிபர் பூரணம்பிள்ளை அவர்கள் காரைநகர் இந்துக்கல்லூரியில் உபஅதிபராக விருந்த திரு. வி. நடராசா அவர்களிடம் இதுபற்றிக் கூறினார். அவர் திரு. சிவசங்கரன் அவர்களை சிபார்சு செய்ததும், பூரணம்பிள்ளை அவர்கள் ஏற்றுக்கொண்டு நியமனத்தை வழங்கினார். அன்று தொடக்கம் 1. 10. 92 வரை தொடர்ச்சி ஆக கால் நூற்றாண்டுக்கு மேலாக இங்கு கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் கல்லூரியில் ஒரு தனி நிறுவனமாகவே இருந்து வந்துள்ளார். அதிபர் பூரணம்பிள்ளை தொடக்கம் ஆறு அதிபர்களுடன் கடமையாற்றியுள்ளார். மிக்க விசுவாசத்துடனும் கண்ணியத்துடனும் தனது கடமையை திறம்படச் செய்துள்ளார்.

இப்பாடசாலையில் வேலைப்பழு அதிகம். நிதி, நிர்வாகப் பிரமாணங்கள் எல்லாவற்றையும் தெரிந்து வைத்துக்கொண்டதால் அதிபர்களின் சுமை பெருமளவு குறைந்திருந்தது. சிற்றூழியர்கள் யாவரும் தத்தம் கடமைகளை செவ்வனே ஆற்றுவதையும் உறுதிப்படுத்திக் கொண்டார்.

இங்கு வரும் திணைக்கள உத்தியோகத்தர்கள் எல்லாரும் இவரது திறமையைப் பாராட்டியுள்ளனர்.

கடமை நேரத்துக்குப் புறம்பாக, கல்லூரியில் பல மணிநேரங்கள் செலவிட்டதை எல்லாரும் அறிவோம். மதியபோசன இடைவேளைக்கு வீடு சென்றுதிரும்புவார். 5 மணி வரை கந்தோரில் வேலை செய்வார். அரைக்கைசேட், தலைமுழுகி எண்ணெய் தேய்த்து வாரிந்த முடி, சென்ற் வாசனை எவருடனும் பண்பாகப் பழகும் தன்மை, எவருக்கும் உதவும் மனப்பாங்கு, எவர்பாலும் இவரைக் கவர்ந்ததில் வியப்பில்லை.

ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. பா. பஞ்சநதம் அவர்களின்
பிரியாவிடையின்போது
அதிபர் திரு. க. நடராசா அவர்களின் உரையிலிருந்து:-

இன்றைய விழா நாயகன் திரு. பஞ்சநதம் ஐயா அவர்களின் சாதனைகளை வரிசைப்படுத்த முயன்றால் எனக்குத் தரப்பட்ட நேரம் போதாது போய்விடும்.

ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரை சித்திரப் பாடம் கற்பிக்கப்பட வேண்டும். 6வகுப்புகள் ஒவ்வொன்றிலும் 4 பிரிவுகள். மொத்தமாக 24 பிரிவுகள் பாடப்படி 24 வகுப்புகளுக்கும் 72 பாடவேளைகள் ஒரு ஆசிரியருக்கு 1 கிழமையில் 40 பாடவேளை தான். அப்படியிருக்கும்போது 72 பாடவேளைகளையும் தனித்து நின்று சுமந்தவர் இந்த ஐயா. என்ன கணிதம் படிப்பிப்பவர் என்பதால் ஓரேயடியாக கணக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறார் என நீங்கள் நினைக்கலாம். ஆனால் உண்மைதான்.

எத்தனையோ சுமைகளைத் தாங்கியவர், தாங்குபவர் என்பதால் இது அவருக்குப் பெரிய சுமையாக இருந்ததில்லை. இவருடைய பாடமென்றால் மாணவருக்கு ஓரே குஷியாக இருக்கும். பொழுதுபோவது கூடத் தெரியாது. எங்களுடன் இருந்து கதைத்தால் எங்களுக்கும் பொழுது போவது தெரியாது. அவ்வளவு ஜோக்கடிப்பார்.

ஆனால் நவராத்திரி விழாவில் உருத்திராட்ச மாலையுடனும் திருநீற்றுக் குறியுடனும் நின்று மந்திரம் உச்சரிக்கும்போது எங்களுடன் ஜோக்கடிக்கும் ஐயாவா இவர் என எண்ணத் தோன்றுமளவிற்கு பக்திமயமாக்கிவிடுவார்.

பாடசாலையில் பக்திமயத்தையும் கலகலப்பையும் ஏற்படுத்தும், ஐயா இன்று ஓய்வு பெறுவது எங்களுக்கும் மாணவருக்கும் இழப்புத்தான் என்றால் மிகையாகாது.

அருகிலிருக்கும் அவரின் துணைவியாரை அவர் என்றுமே சிரிக்க வைத்துக் கொண்டிருப்பார் என்றுதான் நினைக்கின்றேன்.

என்றுமே அவரின் குடும்பத்தில் சிரிப்பு நிலவ இறைவனை வேண்டி விடை பெறுகின்றேன்.

ஆசிரியர் திரு. ஆ சு. சற்குணராசா அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து

இன்று ஓய்வுபெறும் பஞ்சநதம் ஐயா அவர்களிற்கு வயதோ அறுபது. என்றுமே சிரித்த முகத்துடனான தோற்றமோ பதினாறு போல்தான் உள்ளது. நாங்கள் எல்லோரும் அவரை ஐயா என்றுதான் கூப்பிடுவோம்.

இந்தியாவில் சித்திரம் பயின்ற ஐயா மாணவர்களால் விரும்பப்படும் ஆசிரியராக திகழ்ந்தார். அவரது ஆங்கில அறிவு எங்களுக்கு பலவிதங்களிலும் உதவியாயிருக்கிறது. அறிவுரை கூறுவதிலும் அவருக்கு நிகர் அவரே.

தனக்கு ஏற்பட்ட துன்பங்களைப் பகிர்ந்து கொள்வார். எதற்கும் கலங்காமல் இருப்பார். மனச்சோர்வடைவதில்லை.

ஐயாவுடைய இளமைத்தோற்றம் பிரச்சனைகள், துன்பங்களைக் கண்டு மனங் கலங்காமை போன்ற குணாதிசயங்கள் இவரிடமுள்ள கலைஞருக்குரிய குணாதிசயங்களை எடுத்துக் காட்டுகின்றது.

எங்களையெல்லாம் கலகலப்பாக வைத்திருக்கும் ஐயா நவராத்திரி விழா என்றால் பூசகராகி விடுவார். இந்து சமய விழாக்களில் ஓர் தூணாக நின்றவர்.

இப்படியாக அருமை பெருமைக்கு அருகில் இருக்கும் திருமதி ஐயாவிற்கும் பங்கிருக்கும் தானே.

எல்லாம் வல்ல இறைவன் அருளால் ஐயாவும், அவரது குடும்பத்தினரும் சிறப்பாக வாழப் பிரார்த்தித்து எனது பேச்சினை நிறைவு செய்கின்றேன்.

திருமதி செல்லத்துரை அவர்களின் பிரியாவிடை வைபவத்தின்போது

1993ம் ஆண்டு நவம்பர் மாதம் 30ந் திகதி தனது முப்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீண்டகால சேவையின்பின் இளைப்பாறிய சிரேஷ்ட ஆசிரியை திருமதி செல்வநாயகி செல்லத்துரை அவர்களுக்கு 1994ம் ஆண்டு தைத்திங்கள் 11ம் திகதி கல்லூரியின் அதிபர், ஆசிரியர், ஊழியர், மாணவர் ஆகியோர் ஒன்றிணைந்து பிரியாவிடை கொடுத்தனர். இப் பிரியாவிடை நிகழ்வில் ஆசிரியர்களும், மாணவர்களும், உரை நிகழ்த்தியும் பாடல்கள் பாடியும் ஆசிரியை அவர்களின் சிறப்பை எடுத்துரைத்துக் கௌரவித்தனர்.

அந்நிகழ்வில் உரையாற்றிய அதிபர் திரு க. நடராசா அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து :-

திருமதி செல்லத்துரை அவர்கள் இக் கல்லூரியில் 1960ம் ஆண்டு தொடக்கம் கற்பித்து வருகின்றார். இடையே ஒரு சில ஆண்டுகள் தவிர இன்றுவரை இக்கல்லூரியில் கற்பிப்பதற்கு கிடைத்தமை இக்கல் லூரி மாணவர்கள் செய்த பாக்கியம் ஆகும்.

க. பொ. த. (சா/த வகுப்புக்கள் வரை ஒன்றிணைந்த விஞ்ஞானம் கற்பித்து

வந்தார். அதற்கு முன் உயிரியல் இரசாயன வியல் போன்ற பாடங்களையும் சுகாதாரம் சங்கீதம். சமயம் என்பவற்றையும் கற்பித்தார். பாடசாலைப் பரீட்சைகளிலும், பொதுப்பரீட்சைகளிலும் இவரது மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கல்லூரியில் நடைபெற்ற சகல விழாக்களிலும் பங்குபற்றி அவ்விழாக்கள் சிறப்பாக நடப்பதற்கு அவர் முன்னின்று உழைத்தார்.

ஆசிரியர் திரு. அரியலிங்கம் அவர்களது உரையிலிருந்துது :-

ஒருவருக்கு இருக்கவேண்டிய சகல தகுதிகளும் உடையவராகவும் எதையும் நேரிலே எடுத்துரைப்பவராகவும், நல்லாசிரியப் பண்புடையவராகவும் திருமதி. செல்லத்துரை அவர்கள் விளங்கினார். அவரது கணவரும் எமது கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளருமான திருவாளர் ச. செல்லத்துரையும் எங்கள் பாடசாலையில் கற்று, கற்பித்து வந்தது மட்டுமன்றி அவர்கள் குடும்பமே எமது பாடசாலைக்கு சேவையாற்றி வருவதற்கு உறுதுணையாக அமைந்துள்ளார்.

செல்வி வ. ஆறுமுகம் ஆசிரியையின் உரையிலிருந்து :-

திருமதி செல்லத்துரை அவர்கள் தமது இளம் பராயத்தில் சிறந்த அழகியாக மட்டுமன்றி இனிய மேடை கச்சேரி நடத்தி புகழ்பெற்றவர்.

தனது அறிவுடன் தனது கணவரது அறிவையும் பெற்று பரந்த அறிவுடையவராக விளங்கியதை அவரது கற்பித்தலிருந்து மாணவர் புரிந்துகொண்டு அவரைப் பாராட்டி வருகின்றனர்.

திருவாளர் செல்லத்துரை அவர்கள் எதிர்பாராத துப்பாக்கி வேட்டுக்கு உட்பட்டபோது மார்க்கண்டேயர் போன்ற அவரது இறைபக்தியும், சாவித்திரி சத்தியவானை எமனிடமிருந்து மீட்ட வல்லமையையொத்த திருமதி செல்லத்துரை அவர்களது ஞானவிரதமும் அவரது உயிரைக் காப்பாற்றி இன்று திடகாத்திரமான சேவை செய்ய உதவிவருகின்றது. இது அவர்கள் தெய்வீகத் தன்மை உள்ள குடும்பத்தினர் என்பதைக் காட்டுவது மட்டுமன்றி அவர்களது பிள்ளைகளும் சிறந்த கல்வி வல்லுனராக வளம்பெற்று வருவதற்கு ஊற்றாகவும் இருந்து வருகின்றது.

மாணவன் செல்வன் த. ஜோதிவேல் ஆற்றிய உரையிலிருந்து :-

தாரமும் குருவும் தம் தலைவிதிப்பயன் என்பர் பெரியோர். எமது பாடசாலையின் தலைவிதி நன்றாயிருந்தமையால் எமது பாடசாலையின் நல்லாசிரியர் வரிசையிலே ஞானத்தை ஊட்டிய நாயகி ஆகியுள்ளார் எமது ஆசிரியை.

எமது கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. க. பூரணம்பிள்ளை அவர்கள் எமது கல்லூரியில் கீழைத்தேச சங்கீதத்தைக் கற்பிக்க ஓர் ஆசிரியரை தேடினார். அத்தேடுதல் வேட்டையின்போது 1960ம் ஆண்டு செல்வி சந்தையாவாக விளங்கிய எமது ஆசிரியை திருமதி. செல்லத்துரை அவர்கள் அகப்பட்டதால் தனது விஞ்ஞானப்பட்டத்தை எதிர்பார்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்றதை இடை நிறுத்தி விட்டார்.

'' பாட்டுப் பிறந்திடவே ஒரு பத்தினிப் பெண்வேண்டும் '' என்ற பாரதியின் கூற்றுக்கேற்ப எமது பாடசாலையில் இசை வளர்ந்து, இசைவல்லுனராக பலர் வெளிவர எமது ஆசிரியை காரணமானார். அது மட்டுமன்றி இசையுடன் கலந்து சமய பாடத்தையும் கற்பித்ததுடன் விஞ்ஞான பாடங்களிலும் இசையின் தொடர்பை விளக்கிக் கொள்வார். ஆசிரியை தமது கல்வியை மேலும் விரித்துக் கொண்டதால் பிற்காலத்தில் இசையிலுள்ள ஈடுபாட்டைக் குறைத்து சிறந்த விஞ்ஞான ஆசிரியராக விளங்கினார்.

'' நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால் செம்மை மாதர் திறம்புவதில்லையாம் '' என்ற பாரதியார் படைத்த புதுமைப்பெண்ணாக அறிவினை வழங்கி

வந்த திறமை மிக்க ஆசிரியையாதலால், எதற்கும் எளிதில் அஞ்சாது மாணவர் தமது கடமைகளில் தவறும்போது அவர்களை இடித்துரைத்தும், கண்டித்தும் மாணவரை பாசத்துடனும் உரிமையுடனும் வளர்த்து வந்தார். அதுமட்டுமல்ல தனது வழியைப் பின்பற்றிய தமது பழைய திறமையான மாணவரை எமது கல்லூரியிலே நிரந்தர ஆசிரியராகக் கற்பிக்கவைத்து தொடர்ச்சியான மாணவ பரம்பரையை வளர்ப்பதன் மூலம் ஒரு யுகத்தையே வளர்த்துவிட்டு இன்று தனது வயதைச் சான்றாக கொண்டு இளைப்பாறுகின்றார்.

கல்லூரியின் இசைக்குழுவைச் சேர்ந்த மாணவரது (ஆண்டு 7 — 9) பாடலிலிருந்து ஒரு பகுதி :

விழிப்புடனே வந்து வகுப்பினிலே இருந்திட
களிப்புடனே தந்து கல்வியை வளர்திடுவார்
சலிப்பின்றிக் கற்பிப்பார் சகலதுமே
விளக்கிடுவார்
சந்தோசமாகக் கற்றோம் சந்தேகம்
நீங்கப்பெற்றோம்.

———

Mr. C. P. Thamotheram bestowed on the College a personal interest – from which he derived the pleasure similar to that of supervising a paternal farm Social and family life were simple subsidiaries to his College existence. In his family hearth his talk would turn again and again to the things of the College, of particular students and teachers of successes at Sports or at examinations. In social gatherings, he would unconsciously lapse into the same topics. He carried with him a fund of information of an advertising agent. It was easy to see how ardently he wished to boost the College But people saw the justice of his desire. It was founded on concrete and and incontrovertible evidence.

S. V. Gunanayagam

மாணவர் பகுதி

வியர்வை சிந்தும் யாழ்ப்பாண விவசாயி

ஈழமணித் திருநாட்டின் தலையாகப் பொலிந்து விளங்குவது யாழ்ப்பாணக் குடா நாடு. தட்டையான சமவெளித் தரைத் தோற்றத்தைக் கொண்டு விளங்கும் குடா நாட்டிலே மண்வளம் சிறந்து விளங்குகிறது. பொதுவான நோக்கில் வளம் மிக்க செம் மண், வலிகாமம், வடமராட்சிப் பகுதி களில் காணப்பட பச்சிலைப்பள்ளியிலும், தென்மராட்சியிலும் மணல் மண்ணே பரந்து காணப்படுகின்றது. வளமான மண்ணும், பொருத்தமான தரைத்தோற்ற அமைப்பும் காணப்பட்ட போதிலும் ஆறுகள் காணப் படாமை ஒரு பிரதான குறைபாடாக இருந்தது. எனினும் தரைக்கீழ் நீர் காணப் படுவது நீர்வளச் சிறப்பினை விளக்கி நிற் கிறது.

குடாநாட்டில் காணப்படும் சாதக மான நிலைமைகளைத் தனக்குப் பயன் படுத்திக் கொண்டு விவசாயி சிறந்த முறை யிலே பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வரு வது பெருமிதப் படத்தக்கதாகும். மழையை நம்பிக் காலபோக நெல் விவசாயத்தில் ஈடு பட்டு வரும் விவசாயிகளும் இங்கு காணப் படுகின்றனர். சில காலங்களில் மழை பொய்த்து விடுவதனால் நெல் அழிந்து போவது வழமை எனினும்,

''முயற்சி உடையார்
இகழ்ச்சி அடையார்''

என்ற பழமொழிக்கு இணங்க அவன் அதனைக் கைவிடாது தொடர்ந்தும் ஈடு பட்டு வெற்றியையும் அடைந்து வருகின் றான்.

வெங்காயம், மிளகாய், பயறு, உழுந்து, போன்ற பல்வேறு வகைப்பட்ட பயிர்களு டன் வாழை, பலா, மா போன்ற பலதரப் பட்ட பழவகைகளையும் உற்பத்தி செய்து இலங்கையிலேயே சிறப்பிடத்தைப் பெற்றுள் ளமை சிறப்பான ஒரு விடயமாகும். வெங் காயம், மிளகாய் உற்பத்தியில் வலிகாமம், வடமராட்சி, பச்சிலைப்பள்ளி, தென் மராட்சி ஆகிய எல்லாப் பிரதேசங்களும் சிறப்புப் பெற்று இருக்கின்றன. வாழைப் பழ உற்பத்தியில் வலிகாமப் பிரதேசம் சிறப்புப் பெற மா, பலா உற்பத்தியில் தென்மராட்சி முக்கியத்துவம் பெற்று நிற்கின்றது.

உலர் வலயமாக யாழ்ப்பாணக் குடா நாடு விளங்குகின்ற போதிலும் ஈரவலயத் துக்குரிய பயிர்களைப் பயிரிடுவதிலும் யாழ்ப்பாண விவசாயி வெற்றி கண்டுள் ளமை மகிழ்ச்சியைத் தரக்கூடியது. கரட், பீற்றூட், உருளைக்கிழங்கு போன்றவை ஈரவலய மலைநாட்டுப் பயிர்களையும் குடா நாட்டில் பயிரிட்டுப் பூரண வெற்றியை இன்று பெற்றிருப்பது குடா நாட்டின் சிறப் புக்கு மேலும் மெருகூட்டி நிற்கின்றது.

பொதுவாக நோக்குகின்றபோது சூழலின் இயல்புகள் இடங்கொடாத போதிலும் வியர்வை சிந்தும் யாழ்ப்பாண விவசாயி யின் விடாமுயற்சியினால் யாழ்ப்பாணக் குடாநாட்டிலே எல்லாவிதமான பயிர்ச் செய்கையும் வெற்றிபெற்றிருப்பது குடா நாட்டில் வாழுகின்ற எங்கள் எல்லோருக் கும் அளவில்லாத மகிழ்ச்சியை அளிப்பதாக உள்ளது.

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்-
மற்றெல்லோரும்
தொழுதுண்டு பின் செல்பவர்''

என்ற ஔவைப்பிராட்டியின் பொன்வாக்கை உலகிற்கு மெய்ப்பித்துக் காட்டி நிற்பவன் யாழ்ப்பாணத்து விவசாயி என்பதனால் நாம் எல்லோரும் பெருமிதம் அடைகின் றோம்.

மார்க்கண்டு. மயூரன்
ஆண்டு 6 - A

ரயில் வண்டி

போகுது ரயில் போகுது பார்
புகையினைக் கக்கியே போகுது பார்
புகு புகு சத்தம் போடுது பார்
கூக் கூக் என்று கூவுது பார்.

அறை அறையான வண்டி பார்
அவற்றிலே மனிதர் செல்வது பார்
ஸ்டேசனில் எல்லாம் நிக்குது பார்
சிவப்புக் கொடிக்கே அஞ்சுது பார்.

மலையைக் குடைந்துமே செல்லுது பார்
மையிருள் தன்னிலும் ஓடுது பார்
பாலம் கடந்துமே போகுது பார்
பட பட கட கட என்குது பார்.

பட்டணமாமா கடித மெல்லாம்
பையிலே தூக்கி வருகுது பார்
காசை கரியாய் ஆக்காமல்
கரியை புகையாய் விடுவதுபார்.

இ. ஸ்ரலின் ஜனாத்
ஆண்டு - 6 C

பாட்டி கதை கூறு

பாட்டி பாட்டி கதை கூறு
பழைய கந்தற் பாய் பாரு
நீட்டிக் காலை உட்காரு
நிமிடக் கதைகள் நீ கூறு

தளரும் கையில் கோலாட்டி
தலையில் நரைத்த மயிர்காட்டி
வளரும் சிறுவர் எமைக்காட்டி
வா வா நீ கூறு.

பல்லே இல்லா வாய்மென்று
பாக்கு வெற்றிலை நீ தின்று
நல்ல சின்னக் கதையொன்று
நாங்கள் மகிழ நீ கூறு.

கடினப் பண்டம் கடிக்காமல்
கனத்த உடம்பும் நடுங்காமல்
விடிய விடியத் தூங்காமல்
விந்தைக் கதைகள் நீ கூறு.

ஆக்கம் :- வாகீசன்
ஆண்டு - 7 B

எனது பாடசாலைப் பாடல்

எங்கள் நல்ல பள்ளியில்
படிக்கும் நல்ல பாடந்தான்
வல்ல வல்ல மனிதராய்
வளரச் செய்ய உதவுமே.

சிறந்த நல்ல கருத்துக்கள்
கூறும் சிறந்த ஆசிரியர்கள்
சிறந்த முறையில் பள்ளியை
நடத்திச் செல்லும் அதிபர்தான்.

இவர்கள் கூறும் கருத்தினால்
ஒழுக்கமுள்ள மாணவராய்
உயர்ந்து நாமும் நிற்கிறோம்
என்று எண்ணியெண்ணி மகிழ்கிறோம்.

பெரிய பெரிய சாதனைகள்
படைத்த எங்கள் பள்ளியையே
ஹாட்லி என்று அழைத்துமே
போற்றிப் புகழ்ந்து வாழுவோம்

த. கார்த்திஸ்வரன்
ஆண்டு 6C.

எனது தங்கையின் புலுகல்

இரவு நடுச்சாமத்தில்,
எங்கள் வீட்டு மாடியிலே
இரண்டு தேவர் வந்தனர்,
என்னைப் பேட்டி கண்டனர்;

அவர்கள் கேட்ட கேள்விகள்?
அத்தனைக்கும் பதில்களை,
அள்ளி நானும் வீசவே,
அசந்து போனார் தேவரும்;

ஆட்டோ கிராப் கேட்டனர்;
அக்கணமே நீட்டினேன்!
''போட்டோ'' ஒன்று கேட்டனர்;
பூரிப்புடன் வழங்கினேன்!

வாங்கிச் சென்ற படத்தினை,
வட்ட நிலா நடுவிலே,
தேவர் மாட்டி விட்டனர்,
தெருவில் வந்து பாருமே!

அரை இருட்டு நேரத்தில்,
அவர்கள் கேட்ட வேகத்தில்,
எங்கள் பாட்டி படத்தையே,
எடுத்து தந்து விட்டேனோ?

தங்கநிலா நடுவிலே,
தளதளக்கும் வடிவிலே,
எங்கள் பாட்டி தெரிகிறாள்
இங்கே வந்து பாருமே.

சி. சிந்துஜன்
ஆண்டு - 6 B

எமது முதியோர் - இவர்களே எமது நண்பர்கள்

துள்ளிக் குதித்துப் பள்ளிக்குச் செல்லும் சின்னஞ் சிறார்களும், ஆணவத்தோடு வீறுநடை போடும் இளைஞர் யுவதிகளும்' எட்டி .நடை பயிலும் இடை வயதினரும் தம் எதிர் காலத்தை நிர்ணயிப்பதில்லை. அதோ! மரத்தடியில் சிந்தனையில் ஆழ்ந்து கொண்டிருக்கும் தாத்தா தன் எதிர் காலத்தை எண்ணி ஏங்குகிறாரா? இல்லை மகிழ்ச்சி அடைகின்றாரா! ஆடி ஓடி தன் பிள்ளைகள் சுற்றம், உறவு என்ற பாசத்தினால் அலைக்கழிக்கப்பட்டு தன்னை யார் கவனிப்பார் என்ற ஏக்கம் குடிகொள்ள வீற்றிருக்கும் தாத்தா என் போன்ற பள்ளி மாணவர்களின் நண்பன்.

பந்தடியும், கிட்டிப்புள்ளும், தாயமும் விளையாட தாத்தா முன்வருகிறார். சின்னஞ் சிறு பாட்டுக்கள் தாத்தாவின் பொக்கை வாயிலிருந்து வெளி வருகின்றன. நாமும் பள்ளிப் பாடல்களில் தாத்தாவை விஞ்சுகிறோம். இதோ தாத்தாவின் பாடலும் அரிச்சந்திரா மயான காண்டமும் ஏழு பிள்ளை நல்ல தங்காள் பாடலும் எங்கள் பாரதியாரின் பாடலை விஞ்சுகின்றன. தாத்தா பாடுவார், விளையாடுவார் தின்பண்டம் வாங்க கடைக்கும் வருகிறார்.

பள்ளிக்கு ஒளித்த போது தாத்தா காட்டிக் கொடுக்கிறார்; அடித்துப் புரண்டழுதால் தாத்தா பாட்டி அள்ளி அணைத்திடுவார், வீதியில் ஓடிவிட்டால் தாத்தா வீரனாய் மாறிடுவார்; முதுகில் ஏறிவிட்டால் தாத்தா குதிரையாய் மாறிடுவார்; மண்ணில் வீழ்ந்து விட்டால் அடித்து விரட்டிடுவார். என்னே அன்பு தவழும் அம் முதியவன் ஆசை வார்த்தைகள்! நண்ப

னாய், நல்லாசிரியனாய், பண்பிலே தெய்வமாய், பார்வையிலே வயோதிபனாய், விளங்கும் தாத்தாக்கள் எத்தனையோபேர் இருக்கிறார்கள்.

குழந்தாய்! கூடாத கூட்டங்கள் கூடாதே! கூடாத கூட்டங்கள் கூடினாலும் கூடங்கள் மாடங்கள் நாடாதே, கூடங்கள் மாடங்கள் நாடினாலும் கீதங்கள் இராகங்கள் பாடாதே! என்று தடுப்பாரேயானால் நாம் அவற்றை விலக்கியே தீரவேண்டும்; விளங்கியும் கொள்ள வேண்டும். அவர்கள் சொல்லும் ஒவ்வொரு அறிவுரையும் பெறுமதி மிக்கவை. ''படியாத பெண்ணாக இருந்தால் கேலி பண்ணுவார் என்னை இவ்வூரார் அறிந்தால்'' என்று எமக்காகப் பாடிய முதியவரும் எமது தாத்தாவே!

வயோதிபர்கள் எம் உற்ற நண்பர்கள். நாம் பள்ளிக்குச் சென்று வீடு வந்து சேரும் வரை தமது இடுங்கிய கண்களால் எம்வரவையே பார்த்து நிற்பர். வந்து விட்டாலோ பாசமுடன் அணைத்து உணவு ஊட்டி நல்வார்த்தை கூறி பள்ளி கொள்ள வைப்பர். நிலா வந்து விட்டால் பால் நிலாவைக் காட்டி உணவு ஊட்டி சின்னஞ் சிறுகதைகள், பஞ்சதந்திரக் கதைகள், புராணக்கதைகள் என்பவற்றைக் கூறி எம் அறிவை பெருக்குவர். எம்மை படிக்கத் தூண்டுவர்.

முதியோரை அவ்வுயிர் நண்பர்களை, எம் உற்ற நண்பராய், எம் வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாய் நாமும் கண்ணும் கருத்துமாக போற்றுதல் எம் தலையாய கடனாகும். வையத்துள் வாழ்வாங்குவாழ வழி காட்டிய வள்ளுவப் பெருந்தகையும், அரும் பெரும் நூல்களை எமக்குத் தந்த நாவலரும், பெறுமதிமிக்க பாட்டுக்களை ஈந்த பாரதியும், அறிவுச் சுடரான ஔவையும், அகிம்சையை போதித்த மகாத்மாவும், இராமாயணத்தை தந்த கம்பனும் சிலப்பதிகாரத்தை காட்டிய இளங்கோ அடிகளும் எம்முதியோரே. ''கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு'' என்று கூறிய ஔவை சிறார்களின் உற்ற நண்பி. கல்வியறிவு படைத்தோரும் கல்லாதவருமாயிருக்கக் கூடும். ஆனால் எமக்குத் தமது அறிவைக் கல்வியாக வழங்கினர். எமக்குள் பேதமின்றி ஒற்றுமையுடன் வாழ எம் இனிய நண்பர்களாயிருந்து உதவும் முதியோரை நாம் என்றென்றும் பணிந்து போற்றி வாழ்வோமாக.

ஆக்கம்: பு. கேசவன்
ஆண்டு—8 B

மாணவத்துவம்

ஓ! மாணவனே மாணவனே!
மாணவத்துவமது பற்றி
சிறிதேனும் அறிந்து கொள்ளேன்!
காலை வேளையிலே ''கடவுளே'' என நினைத்து
கல்லும் கரையுமாறு கவின் மொழிகளூடாக
கல்வி என்னும் புண்ணியத்தை
கரை காணாத அப்பாற் கடலை
கடைந்தெடுத்துமக் கட்கு
கண்ணும் கருத்துமாய் கடும் சேவைகள் பல ஆற்றி
கண்ணியமாய்த் தன் கடமைகளை
முடிக்கும் அந்த ஆசானின்
முன்னிலையில் நீ!
நல்லவனாய் வல்லவனாய்
நாணயத்தின் முதல் மகனாய்

இறைப்பற்றும் உழைப்பும்—அதை
உன்வாழ்வில் உயிர் மூச்சாய்
ஏற்று நீயும் வாழ வேண்டி
எண்ணற்ற பயிற்சிகளை எடுத்தளிக்கும்
எம்பள்ளி வாழ்க்கையிலே—நீ
ஓ மாணவனே — மாணவனே
மாணவத்துவமது பற்றி
சிறிதேனும் அறிந்து கொள்ளேன்.

ஆக்கம் - **நாராயணன் ஜயப்பிரகாஷ்**
ஆண்டு: -8 C

செல்வமும் பல வகைகளாம்

செல்வமும் பல வகையாம்
அவற்றுள் இவை சிலவாம்

செல்வம் என்று சொல்கையிலே பலரும்
பணந்தான் செல்வம் என்பர்
பணமும் செல்வம் தான் ஆனால் அது
மட்டும் போதாதன்றோ.
பண்புள்ள பெற்றோர்கள் பலரும் விரும்புவது
தம் மானம் காக்கும் மழலைச் செல்வர்களை
உண்மையில் நல்ல பிள்ளை செல்வத்திலும்
பெரிதான செல்வம் வேறொன்றும் மில்லை.
நல்லபிள்ளை நாலுபேர் மத்தியிலே
நல்லது கெட்டவற்றை புரிந்திடுவதற்கும்
நாணிக் கோணாது இருப்பதற்கும் கல்விச் செல்வம்தான்
முக்கியமென்றுரைத்தால் மிகையாகுமோ?
நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமென்பர்
நோயற்ற வாழ்விற்கு திடமான உடல் வேண்டும்
தரமான உணவும் திரண்ட தோள்களும் நிமிர்ந்த
மார்பும் ஒருவருக்கு வாய்த்திடின் அவையும் செல்வமே.
நல்ல பழக்கமும் அழியாக்கல்வியும் தரமான உணவும்
தந்துதவ அன்பான அன்னையும் பண்பான தந்தையும்
கிடைத்து விடின் அறியாப் பருவத்தில் சிறுவர்
சிறுமியருக்கு அனைத்துமே செல்வமாகும் அதிஸ்டம் எட்டிடுமே.
எந்தச் செல்வம் இருந்திடினும் - கற்பே
பெண்டிற்கு பெருஞ் செல்வம்
சீதை, கண்ணகி, பாஞ்சாலி இவர்கள் வழியில்
நடந்திட்டால் அதுவே மாதர்க்கு பெருஞ் செல்வம்.
நல்லரசு நடந்திடவும் நாட்டினைக் காத்திடவும்
பள்ளிகள் பல கட்டிடவும் பாமர மக்களைக் காத்திடவும்
பாரினில் சிறந்த மாமன்னர் வாய்த்திட்டால்
பற்பல மக்கட்கும் பாரிய செல்வம் இதுவன்றோ.

ஆக்கம் : எஸ். கார்த்திக்
ஆண்டு: 8 C

உரையாடல்

நன் மாணாக்கனும் திருவள்ளுவரும்

மாணவன் : திருவள்ளுவ நாயனாரே! செந்தாப் போதாரே எனது அறியாமை இருள் அகல வழி சொல்லித்தர வேண்டும்.

திருவள்ளுவர் : அன்பனே நீ கடவுளின் உண்மையான புகழை விரும்பி நினைப்பாயானால் உனது அறியாமை அகலும்!

மாணவன் : உங்கள் உத்தர வேதத்தில் இதைப் பற்றிக் கூறியிருக்கிறீர்களா?

திருவள்ளுவர் : ஆம்.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள் சேர் 'புகழ் புரிந்தார் மாட்டு' இதன் பொருள் கடவுளின் உண்மையான புகழை விரும்பி நினைப்பவரை அறியாமையால் வரும் நல்வினை தீவினை என்பன வந்து உறுத்தமாட்டா.

மாணாக்கர் : தெய்வப்பாவலரே! குருடர்களாயிருக்கும் கற்றவர்கள் கவலைப்படுகிறார்களே இது சரியா? எனக்கு விளக்க வேண்டும்.

திருவள்ளுவர் : அவர்கள் கவலைப்படத் தேவையில்லை. அன்பனே நீ இதைப்பற்றிக் கேட்கக் காரணம்.

மாணாக்கர் : ஸ்வாமி! நான் கற்றவர்களின் மதிப்பை அறிவதற்காகக் கேட்டேன். அங்கவீனம் இல்லாதிருப்பது பெரிதா? கல்வி பெரிதா? என்று அறியவே கேட்டேன். அப்படியானால் கல்விதான் பெரிதென்று கூறுகிறீர்கள்.

திருவள்ளுவர் : ஆம் கண்ணுடையவர் என்று சொல்வதற்கு தகுதி உடையவரே கற்றவர் ஆவர் கல்லாதவர் கண்ணுக்குப் பதிலாக புண்களை உடையவர் இதைத்தான் என் குறளில் " கண்ணுடையார் என்போர்கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையார் கல்லாதவர் " என்று கூறியுள்ளேன்.

மாணாக்கர் : பாவலரே எனது தாய்க்கு நான் செய்யும் பேருதவி என்னவென்று கூறுங்கள்.

திருவள்ளுவர் : உன்னை உலகம் அறிவொழுக்கத்தில் சிறந்தவன் எனக் கூறத் தக்கவிற்கு அறிவுள்ளவனாக இருக்க வேண்டும்.

அதாவது ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனை
சான்றோன் எனக் கேட்ட தாய்.

மாணாக்கர் : என்னை கல்வி உடையவனாக்கிய தந்தைக்கு ஆற்றும் உதவி யாது?

திருவள்ளுவர் : தந்தை இவனை பெற என்ன தவம் செய்தானோ எனும் படியாக நடத்தல் மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி.

மாணாக்கர் : சந்தேகங்கள் தீர்ந்தன, அறியாமை அகன்றது கல்வியின் முக்கியத்துவம் தெரிந்தது.

திருவள்ளுவர் : நீ நல்ல மாணாக்கனாய் அறிவு ஒழுக்கம் என்பவற்றில் சிறந்து விளங்கக் கடவாயாக!

கு. ராஜ்குமார்
ஆண்டு 9 D

நண்பனுக்கு

போதையில் திரியும் பேதை நண்பா.........
போகும் பாதை சரியா? ....
கொஞ்சம் நில்லு !
ஆ ! கவனம் நிதானித்து நில்.
கையிலே என்ன ?.........
கள்ளுப் போத்தலா ....
என் பார்வையில் அது விஷப் போத்தல்.
நண்பா உனக்காக நான்
அனுதாபப் படுகிறேன்.
இவ் உலகமும் தான்
உன்னை பார்த்து நகைக்கின்றது.
காரணம்...............
நீயே உனக்கு எமனாகிக் கொண்டிருக்கிறாய்
நீயே உனக்கு எமனாகிக் கொண்டிருக்கிறாய்
என்ன மௌனம்.........
உன்னைப் பற்றி சிந்தித்தாயா ?
உன் குடும்பத்தைப் பற்றி சிந்தித்தாயா ?
நீ சிந்திக்க மாட்டாய்.
ஏனென்றால் உனக்குத்தான்
சித்தம் கலங்கி விட்டதே !
வீட்டிலே மனைவி மக்கள்
அழுது புலம்ப..........
எட்டிப் பிடித்து எக்கச்சக்கமாய்
ஏதேதோ வார்த்தைகள்
சொல்லி விட்டு எங்கே
போகிறாய் — கள்ளுத்
தவறணக்கா..........
அது தான் நரகத்தின்
வாயில் — அது
உனக்குத் தெரியாது
நண்பா.......... நண்பா..........
பாதையை மாற்று
பயணத்தை தொடரு..........
ஒழுங்காக...........
விடிவு வெகு தூரமில்லை.
வெற்றிக்கு வாழ்த்துக்கள்
போய்வருறேன்............

—: நன்றி :—

ஆக்கம் : விமலேஸ்வரா
ஆண்டு 9 A

கசக்கி எறியப்பட்ட கடதாசியின் கதை

இது நாள்வரை ஆதரித்து வந்த இந்தக் கூடையும் என்னை ஆதரிக்காமல் விட்டு விடும் காலம் நெருங்கி வந்து விட்டது. இனி என்னை ஆதரிப்பார் யாரோ? என் துயரக்கதையை நீங்களாவது நின்று சற்று செவிசாயுங்களேன்.

மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பில் வாழைச்சேனை என்னும் ஊரிலே நான் பிறந்தேன். எனது பிறப்பு வரலாறு மிகப் பெரிது. எனது மூதாதையர் இந்த மட்டு நகரில்தான் பிறந்தனர். வெள்ளைக்காரன் கூட தோற்றுப்போவான். அவ்வளவு நிறம் வாய்ந்தவர்கள். அவர்கள் தான் 'வைக்கோல்' சமுதாயத்தினர். நாங்கள் தோன்றுவதற்கு எங்கள் மூதாதையர் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல. மனிதன் அவர்களை என்னபாடுபடுத்தினான். அவர்களை பூண்டோடு வெட்டி ஒன்றாகக்கட்டி வண்டியிலேற்றி வாழைச்சேனையிலுள்ள காகித ஆலையாம் சிறைச்சாலைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு சிறிது காலம் சிறை வைக்கப்பட்டு பின்பு அவர்களை கடும் வெயிலில் இட்டு வருத்தினார்கள்.

சிறிது காலம் இவ்வாறு உலரவைக்கப்பட்ட பின்னர் இந்த பகுத்தறிவு படைத்த மனிதன் இவர்களை ஈவிரக்கம் காட்டாது ஆலையில் இட்டு வருத்தினான். ஆலையில் இவர்களுடன் கறுப்பர்களும் சேர்க்கப்பட்டார்கள். இவர்கள் தான் மரப்பட்டைகள். இவர்கள் எல்லோரும் சுழலும் உருளையில் இடப்பட்டு நெரித்து தூளாக்கப்பட்டார்கள். அவர்கள் இவ்வாறு வருந்தியதன் விளைவு தான் நாம் இப்போது 'காகிதம்' என்னும் சிறப்புப் பெயருடன் விளங்குகின்றோம். எங்கள் மூதாதையரின் வழித்தோன்றல்களுடன் இன்னும் பல புதிய திரவ வர்க்கத்தினர் சேர்க்கப்பட்டனர்.

புதிய திரவத்தினர் சேர்க்கப்பட்ட பின்னர், பெரிய சுழலும் இயந்திரம் ஒன்றினால் அவர்களை கடுமையாக வருத்தினர். அவர்களின் அவல ஒலத்தை இயந்திரங்களின் இரைச்சல் மறைத்துத்தடுத்தன. இதனையடுத்து சரியான கொதிநிலை வரும் வரை கொதிக்க வைத்து சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டார்கள். அளவான கொதிநிலையில் தரம்பிரிக்கப்பட்ட இவர்கள் தரையில் கொட்டப்பட்டு பரவவிடப்பட்டு இறுகவிடப்பட்டார்கள். பின்னர் இவர்களை மனிதர்கள் பெரும் உருளைகளினால் செப்பனிட்டு தகடுகளாக வெட்டியெடுத்தார்கள். வெட்டியெடுக்கப்பட்ட இவர்கள் பிறிதோர் இயந்திரத்தில் இடப்பட்டார்கள். இதன் மூலம் காகிதம் என்னும் புதிய பெயருடன் புதிய வடிவம் பெற்று நாம் ஜனனித்தோம்.

இவ்வாறு பிறந்த நாங்கள் கௌரவர் சபையில் நிறுத்தப்பட்ட பாஞ்சாலியின் துகில் எவ்வாறு நீண்டு கொண்டு போனதோ அதேபோல நீண்டுகொண்டே சென்றோம். தொழிற்சாலையில் இருந்த துச்சாதன குணம் படைத்த தொழிலாளர்களில் ஒருவன் எம்மை வெட்டினான். வெவ்வேறு நிலைகளில் எம்மை இயந்திரத்தில் இட்டு எம்மை சித்திரவதைக்குள்ளாக்கினார்கள். இதன் பின்னர் வெவ்வேறு நிலைகளில் இயந்திரத்தில் இருந்து வெளியேற்றப்பட்டோம். இவ்வாறு வெளியேற்றப்பட்ட நாங்கள் இரு வேறு நிலைகளில் காணப்பட்டோம். ஒன்று வெள்ளைக்கடதாசி மற்றது தடித்த அட்டை. இதில் நாம் முதல் வர்க்கத்தை சேர்ந்தவர்கள். முதலாம் தர கூழில் இருந்து தயாரிக்கப்பட்ட எங்களுக்கு தனியான பெருமை என்றும் உண்டு. எம்மை உருவாக்க வேண்டிய கூழை எடுத்த பின்னர் எஞ்சிய கூழில்

இருந்தே இந்த தடித்த அட்டை ஆக்கப்படுகின்றது. இவர்கள் எம் சகோதரர்கள் போன்றவர்கள். எமக்கு பாதுகாப்பளிப்பதற்கு இவர்கள் மேலும் கீழும் போர்த்தப்படுவார்கள். எங்களில் பல நிறங்களில் பல ரகங்களில் உறவினர்கள் உண்டு. எண்ணெய் பூசப்பட்ட கடதாசி, நிறக்கடதாசி மற்றும் என்னைப்போல் எழுத்து வேலைக்கு பயன்படும் கடதாசி, தட்டச்சுத்தாள் என்றும் பணம், காசோலை உற்பத்தி செய்ய பயன்படும் உயர்ரக தாள்கள், என்றும்பல வடிவங்களில் நாம் காணப்படுகிறோம். இவ்வாறு வெளியேற்றப்பட்ட எங்களை தொழிலாளி ஒருவன் முகாமையாளர் முன்னிலையில் கொண்டு வந்து வைக்கிறான்.

எமது மூதாதையர் சுதந்திரம் இழந்து அடிமையாக அடிவாங்கி வாழ்ந்தார்கள். நாம் மூதாதையரை விட தன்மானம் உள்ளவர்களோ என்னவோ தெரியாது, நாம் எல்லோரும் பறந்து திரிய ஆரம்பித்தோம். இதனைக்கண்டு கடுஞ்சினமுற்ற முகாமையாளர் எங்களைப்பற்றிய பதிவுகளை உடனே மேற்கொண்டு, தொழிலாளி ஒருவனை அழைத்து எங்களை கட்டிப்போடுவதற்கு உத்தரவிடுகிறான். அவனும் எம்மை அசையமுடியாது இறுகக் கட்டிப்போட்டு எம்முடைய சுதந்திரத்திற்கு முட்டுக்கட்டை போட்டு விட்டான். ஏ! பகுத்தறிவு படைத்த மானிடா நீ செய்வது நியாயமா? ஏதோ சுதந்திரம் சுதந்திரம் என்று வாய்கிழிய கத்தும் நீ எமக்கு சுதந்திரம் வழங்கியிருக்கலாமே! நாம் என்ன செய்வது, எல்லாம் தலைவிதி இறைவன் இட்டவழி. ம்......

இவ்வாறு நானும் எனது சகோதரர்களும் கட்டப்பட்டு சுதந்திரம் பறிக்கப்பட்டு சிறைச்சாலையாகிய களஞ்சியத்தில் சிறை வைக்கப்பட்டோம். இங்ஙனம் மனித கட்டுப்பாடுகளிற்கு உட்பட்டாலும் நாம் பெருமை பெற்றவர்கள். நாம் பல வடிவங்களில் பல பலநிறங்களில் பலதொழில் களை செய்கின்றோம். ஒன்றின் ஆக்கத்திற்கு பயன்படும் நாம் மற்றொன்றின் அழிவிற்கு பயன்படுவோம். எனவே நாமேதான் உலகின் ஆக்கத்திற்கும் அழிவிற்கும் முக்கிய பங்கு வகிக்கிறோம். இதனை எண்ணும் போது மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். காசோலையாகவும், பணமாகவும், பத்திரிகையாகவும், சின்னஞ்சிறு சிறார்களின் பாடசாலைப் புத்தகமாகவும் மற்றும் எழுத்தாளனுக்கு புகழ்தேடிக்கொடுக்கின்ற கதை எழுதும் தாள்களாகவும், அஞ்சல் ஊடகங்களாகவும், பொதிகட்ட பயன்படும் தாள்களாகவும் இன்னும் பல தேவைகளிற்கு பயன்படுகிறோம். இவ்வாறு பலவடிவங்களில் காணப்படும் எங்களின் பயன்பாடு சொல்லிமுடியாது.

இவ்வாறு சிறைவைக்கப்பட்டு இருக்கும் ஒரு நாளில் முகாமையாளனை வேறிடத்தான் ஒருவன் வந்து சந்தித்தான். அவன் எம்மைப்பார்த்து ஏதோ கதைத்து விட்டு தனது கைப்பையில் இருந்து உயர்குடியில் வாழும் சகோதரனான பணத்தை எடுத்து முகாமையாளனிடம் கொடுத்து விட்டுச் சென்றான். சிறிது நேரத்தின் பின் எங்களை 'றீம்' என்னும் அலகுகளாக பிரித்து வண்டியில் ஏற்றினார்கள். இவ்வாறு ஏற்றப்பட்ட நாங்கள் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டோம்.

என் சாண் உடம்பிற்கு சென்னி சிறந்திருத்தலைபோல பொன் சேர் இலங்கைக்கு புண்ணியத்தில் ஓங்கிடும் யாழ்ப்பாணம் விளங்குமாம். இவ்வாறான புண்ணியத்தில் சிறந்த யாழ்ப்பாணத்திற்கு என்னை அழைத்து வந்ததில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஏனெனில் யாழ்ப்பாணத்து மாந்தர் கல்வியில் சிறந்தவர் என எங்கோ கேள்விப்பட்டிருக்கிறேன். இவ்வாறு கொண்டுவரப்பட்ட நாம் அங்குள்ள புத்தகசாலையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தோம். அப்போதுதான் அங்கு வந்த அந்த மனிதர் என்னையும் என்னுடன் சில எனது சக சகோதரர்களையும் வாங்கிச்சென்றார், சாந்தமான முகமும், சுமாரான உயரமும், எடுப்பான தோற்றமும் கொண்டிருந்தார்.

எமக்கு என்னவோ அவர் ஓர்படித்த நல்ல மனிதர் என தோன்றிற்று. அவருடன் அவரின் வீட்டை சென்றடைந்தேன். அப்போதுதான் அவர் ஓர் கதாசிரியர் என தெரிந்து கொண்டேன். அப்போது நான் அளவிலா மகிழ்ச்சி அடைந்தேன். நான் புகழ் பெறும் காலம் நெருங்கிவிட்டதாக எண்ணி குப்பைக்கூடையிலுள்ள பழைய எனதருமை நண்பர்களை எள்ளி நகையாடினேன்.

ஆனால், அந்தோ! எனது கெடுகாலம் ஆரம்பமாவதை நான் அறியவில்லை. அந்நேரமும் வந்தது. அக்கதாசிரியன் கையில் பட்டு பிரகாசித்துக் கொண்டிருந்த நான் அவரின் மனநிலை காரணமாக கசக்கி கூடையில் எறியப்பட்டேன். நான் இருந்த இடத்தில் எனது தோழன் ஒருவன் பிரகாசித்துக் கொண்டிருக்கிறான். அவன் என்னைப்பார்த்து ஏளனமாக சிரிப்பது போல் எனக்கு தோன்றுகிறது. பாவம்! ஒருநாள் என்னைப் போல் அவனும் வரும் நிலையை அறியவில்லை போலும்.

இந்த நன்றி கெட்டமனிதனோ, பயனைப்பெறுமட்டும் எவ்வாறு பாதுகாக்கிறானோ அவ்வாறு எம் பயன்பாடுமுடிந்த பின்னர் கவனிக்க தவறுகிறான். இதற்காகவா நாமும் எம்மூதாதையரும் பல இன்னல்களைப் பெற்றும் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தோம். நீங்களாவது என் சோகக்கதையை அறிந்தபின்னாராவது எம் மேல் இரக்கப்பட்டு எமது வருங்கால சந்ததியின் நிலையை மாற்ற உதவுங்கள். தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். உதவுகிறீர்களா?

ஆக்கம் :- அசோகன்
ஆண்டு :- 11. 13

ஒழுக்கம் விழுப்பந் தரும்

ஒழுக்கமானது ஒருவனுடைய வாழ்க்கையில் பின்பற்றப்படின் அவனுக்கு மேன் மேலும் சிறப்புக்களைத்தருவிக்கக் கூடிய இயல்புடையது. அது சாதாரண மனிதனுடைய வாழ்க்கையிலிருந்து கல்வி கற்கும் மாணவரின் வாழ்க்கைவரை பல்வேறுபட்டதாகப் பரந்துள்ளது, அதனால் மாணவர் சமுதாயமாகிய எங்களுக்கு ஒழுக்கம் மிகவும் முக்கியமானதொன்றாகும். அது மாணவர் சமுதாயமாகிய இளைஞர் சமுதாயத்தை நேரிய வழியிலே அழைத்துச் செல்லும். ஏனென்றால் வேற்று மனிதர்களை விட இளைஞர் சமுதாயமே வளர்ச்சியடைந்து வருகின்றது, இதன் இளமையிலான ஆக்கபூர்வ செயற்பாடுகளின் செயற்திட்டங்களே நாளைய சமுதாயமாக மலரவிருக்கின்றது. எனவே வளர்ந்து கொண்டு வரும் நாளைய சமுதாயத்தை ஒரு முழுமையான நல்லதோர் சமுதாயமாக மாற்ற வேண்டும் எனின் அதன் இளமைப்பராயம் நன்கு சீர்திருத்தப்பட்டிருத்தல் வேண்டும். அதாவது ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல் வேண்டும். இதன் காரணமாக இளைஞர் சமுதாயம் நேரிய வழியிலே செலவத் தயங்காது. இதன் காரணமாக அது சிறப்புக்களையுடைய சமுதாயமாக மாற்றப்படும்.

ஒருவனுடைய வாழ்க்கையில் ஒழுக்கம் பேணப்பட்டால் அவனுடைய வாழ்வானது மேன்மேலும் சிறப்புக்களைக் கொண்டதாய் அமையும். அது மாத்திரமன்றி அதைக் கடைப்பிடிப்பவரின் உயிரிலும் மேலானதாகப் பாதுகாக்கப்படும் இதைத் தான் திருவள்ளுவர் ''ஒழுக்கம் விழுப்பந் தரலான், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்று தனது நூலாகிய திருக்குறளில் குறிப்பிட்டுள்ளார். இதற்கு ஆதாரமாக இராமாயணத்தின் காவியநாயகன் இரா

மனை எடுத்துக் கொள்வோமாயின் இராமாயணத்தில் இராமன் காவியநாயக னாய் இருந்தாலும் நாங்கள் அவனை அவனாகவே வைத்துப் போற்றுவதில்லை. அவனுடைய ஒழுக்கங்களால்தான் இன்று நாம் இராமனை மனக்கண்ணில் வைத்துப் போற்றுகிறோம். ஏன் இராமாயணம் பாடிய கம்பர் கூட இராமனின் நல்லொழுக்கத்திற்கு மயங்கியே அதைத் தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தெரிவிக்கும் முகமாக இராமாயணம் பாடவந்தார். அதனால் தான் நாம் இன்று இராமனை நல்லொழுக் கத்திற் சிறந்தவன் என்ற எண்ணத்தில் மனதில் வைத்துப் போற்றுகிறோம். இங்கு இராமனிலும் பார்க்க இராமனின் நல்லொழுக்கங்களே எம்மால் இன்றும் மனதில் பாதுகாக்கப்படுகிறது. கம்பர் பாடியது எல்லோராலும் இயற்ற முடியாதவொன் றாயினும் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒழுக்கப் பண்புகளைக் கொண்டுள் ளது. இதனாலேயே ஒழுக்கத்திற்கு தலைமையாய் இராமாயணப் பண்புகள் இன்றும் பாதுகாக்கப்படுகின்றன.

மேலும் ஒருவர் இழிகுலத்திற் பிறந்த வராயினும் ஒழுக்கத்திற் சிறந்து விளங்கு வார் எனின் அவர் உயர்குலத்தவராவர். ஆனால் உயர்குலத்திற் பிறந்தவராயினும் ஒழுக்கத்தில் குறைந்திருப்பாராயின் அவர் இழிகுலத்தவராவர். இதைத்தான் திருவள்ளுவர் '' ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்'' என்று திருக்குறளில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பண்டைய இலக்கிய நூல் களான மகாபாரதம், பெரியபுராணம் போன்ற நூல்களிலும் ஒழக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. பெரிய புராணத்தில் ஒரு குறிப்பிட்ட கதையை எடுக்கப் போனால் மனுநீதிச் சோழனின் நீதி வழுவாமை புலப்படுகின்றது. நீதி வழுவாமையும் ஒரு வகை ஒழுக்கமே. இதனால் தான் இந்நூலும் சிறப்புற்றிருக்கிறது. அதேபோல் மகாபாரதக் கதையைப் பார்க்கப்போனால் கர்ணனின் கொடைத் தன்மை புலப்படுகின்றது. இங்கு கொடைத் தன்மையும் ஒரு வகை ஒழுக்கமாகவே கருதப்படுகிறது. இதனாற் போலும் இந் நூலும் சிறப்புற்றுக் காணப்படுகின்றது.

'' நன்றிக்கு வித்தாகும் நல் ஒழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பைதரும் '' ஒருவனுக்கு நல்லொழுக்கம் அறத்திற்குக் காரணமாய் இருப்பதனால் இன்பம் பயக் கக் கூடியது. ஆனால் தீயொழுக்கம் பாவத்திற்குக் காரணமாய் இருப்பதனால் துன்பம் பயக்கக் கூடியதாகும். எனவே ஒருவனுடைய வாழ்க்கையில் இன்பமாய் வாழ்வதற்கு அவன் நல்லொழுக்கத்தைச் செய்தானாயின் அவன் இன்பமயமாகவே வாழ்வான். அது மாத்திரமன்றி '' உலகத் தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலாதார். '' அதாவது ஒருவர் எவ்வளவு தான் கற்றிருந்தாலும் உலகத்தோடு பொருந்தி ஒழுகுதலைக் கற்காவிடின் அவன் கற்றது அவ்வளவும் வீணாகவே கருதப்படும். அதாவது அவன் அறிவில்லாதவனாகக் கணிக்கப்படுவான். எனவே கற்றிருந்தால் மட்டும் போதாது அத்தோடு உலகத்தோடு பொருந்தி ஒழுகுதல் வேண்டும்.

'' இலமென்று வெஃகுதல் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள ''

என்பது வள்ளுவர் ஒப்புக் கொண்ட வாக்கு. யான் எப்போது வறிஞன் ஆயினேன். என்கின்ற துன்பந்தரு மொழியைக் கூறாமலே கொடுத்தல் குடிப்பிறந்தான் கண்ணே தான் உண்டு என்கிறார்

'' கலஞ்சுரக்கும் நிதியங் கணக்கிலா
நிலஞ்சுரக்கும் நிறைவளம் நன்மணி
பிலஞ்சுரக்கும் பெறுதற் கரியதங்
குலஞ்சுரக்கும் ஒழுக்கம்
குடிக்கெலாம் ''

கம்பனுடைய நாட்டிலே உள்ள குடிகளுக்குக் கணக்கில்லாத நிதியங்களை மரக்கலங்கள் சுரக்கின்றன, நிறைந்த வளத்தை நிலஞ்சுரக்கின்றது. நல்ல மணிகளைப் பிலம் (சுரங்கம்) சுரக்கின்றது. உயிரினும் ஓம்பப்படுவதாகிய ஒழுகலாற்றைப் பெறு

தற்கரிய தூய குலமாகிய மலை சுரக்கின்றது.

பெரிய புராணத்திலே, இளையான்குடிமாற நாயனார் மனையிலே ஒரு நாள் அர்த்த யாமத்தில் மழை பொழியும் வேளையில் ''எவ்வமாகிய வறுமையே'' குடியிருந்த அந்தக் குடிசையில் விருந்தொன்றைக் கண்டசமயத்தில் சுரக்கத் தொடங்கியது. இன்றும் பெருகி கொண்டேயிருக்கின்றது. இப்படிப்பட்ட ஒழுகலாறு சுரக்கும் நாட்டின் விளைப்புலங்களும் வித்தும் இட வேண்டுங்கொலோ;

ஒழுக்கமானது வாடிவதங்கிப் போயிருக்கும் நமது தற்போதைய சமுதாயம் புதிய பூவாக மலருவதற்கு உதவுமாதலால் இளைஞர்களாகிய நாம் நமது சமுதாயத்தை ஒழுங்கமைக்க வேண்டும். அத்துடன் தனிமனிதனுடைய வாழ்க்கையில் ஒழுக்கமானது அவனுடைய ஆளுமை வளர்ச்சியைத் தட்டிக் கொடுப்பதனால் அவனுடைய ஆளுமை, வளர்ச்சியைக் காண்கின்றது எனவே மனித வாழ்வோடு தொடர்புடைய எவற்றிலும் ஒழுக்கமானது விழுப்பம் தருவதே.

யோ. சுதாகர்
ஆண்டு **11 C**

கணிதம் கற்பதால் ஏற்படும் நன்மைகள்

''அச்சாணி இல்லாத்தேர் முச்சாணும் ஓடாது'' என்பது முதுமொழி. அதாவது அச்சாணி இல்லாத தேர் நகர மாட்டாது என்பதாகும். இதே போல கல்வி அறிவில்லாதவர்கள் இவ் உலகில் வாழ முடியாது. பிற .. இடங்கள் பற்றிய அறிவில்லாது ஒருவன் வாழமுடியும், ' ஆனால் எண் கணிதம் கற்காமல் ஒன்றும் செய்ய முடியாது. கல்வியை இடைக்காலத்தில் விட்டு விட்டு போர்முனைக்குச் செல்லும் போர் வீரனோ அல்லது ஓர் பிற தொழில்களை செய்பவரோ எண் கணிதம் கல்லாது ஒன்றும் செய்ய முடியாது.

ஒருவன் எதிரி முகாமை நோக்கிச் செல்கையில் இன்னொருவருடன் தொலைத்தொடர்பு செய்கையில், தான் முகாமில் இருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறேன் என்று கூற முடியாது போனால் இறுதியில் பகைவரிடம் அகப்பட வேண்டியும் போகலாம்.

போராடிக் கொண்டிருக்கும் ஒருவன் எதிரியை சுட்டுக் கொண்டு செல்கையில் இதில் இவ்வளவு எதிரிகள் நின்றனர், நான் எவ்வளவு பேரை சுட்டு விட்டேன், இன்னும் எவ்வளவு பேரை தேடிச் சுடவேண்டும் என்று கணக்கு பார்க்கமுடியாது போனால் இறுதியில் எதிரியினால் அவன் சுடப்படுவான்.

ஒரு குடும்ப நடத்துனருக்கு கூட எண் கணிதம் முக்கியமாகும். ஓர் கூலி வேலை செய்து குடும்பம் நடத்துபவராயின் தனது வருமானத்துக்கு ஏற்ப செலவு செய்ய கற்றுக்கொள்ள வேண்டும். தனது வருமானத்தை கணித்து செலவு செய்ய தெரியாவிடின் செலவு கூடி யாது' செய்வதென்று தெரியாமல் வலு இழந்து வாழ்க்கையை ஓட்ட முடியாமல் வாழ்வார்.

வீடு கட்டுவதற்கு படம் வரைபவர் அளவிடைக்கு ஏற்ப படம் வரையாவிடின், அக்கட்டிடத்தை கட்டியெழுப்பும் போது ஏற்படும் இடையூறுகளினால் கட்டிடம் ஊர்சிதம் அற்றுவிடும்.

மற்றும் அரசாங்க பரீட்சைகளில் கணிதத்திற்கு முதலிடம் வழங்கப்படுகிறது. கணித பாடத்தில் சிறந்த பேறு இல்லாது,

மற்றைய பாடத்தில் சிறந்த பேறு பெற்றாலும் ஒருவர் வேலை ஒன்றுக்கு அனுமதி கோரும் போது முன்னுரிமை கணித பாடத்திற்கு வழங்கப்படுகிறது. அதுமட்டுமன்றி கணிதப்பாடத்தில் சித்தியடையாதவர் உயர்கல்வி பெற முடியாது.

சாதாரண விவசாயி ஒருவர் தனது வயல் பரப்புகளின் அளவை கணிப்பதிலும், உற்பத்திச் செலவுகளை கணிப்பதிலும் பயிர்களின் வாழ்க்கைக் காலத்தை கணிப்பதிலும் நீர் பாய்ச்சும் காலத்தைக் கணிப்பதற்கும் எண் கணிதம் இன்றியமையாதவையாகும்.

எண் கணித அறிவில்லாதவர் ஆயின் அயலார்கள் வயல் அளவுகளை குறைத்திடுவர். செலவுகளை கணிப்பதிலும், நீர் பாய்ச்சுவதிலும் கிருமி நாசினி பயன்படுத்துவதில் காலத்தை குறைத்தால் பயிர்கள் நோய் உண்டு, நீர் இன்றி இறந்து விடும். இறுதியில் அவ் உழவன் தன் வயல் வருமானத்தை இழப்பதுடன் அயலவர்களால் ஏமாற்றப்படுவான்.

வியாபாரம் செய்யும் ஒருவர் வியாபாரத்திற்கு எவ்வளவு முதலீடு செய்ய வேண்டும் என்பதை கணிப்பதற்கும், பொருளின் வகையறிந்து, அளவு அறிந்து கொள்வனவு செய்வதற்கோ அல்லது விற்பனைக்கு விலை குறிப்பதற்கோ கணித்தல் முக்கியமாகும்.

தருமதியாளர்களின் தொகையை கணிப்பதிலும், கொடுக்க வேண்டிய தொகையை கணிப்பதிலும் எண் கணிதம் முக்கியமாகும். அதாவது ஒரு கிலோ கத்தரிக்காய் முப்பது ரூபாய் ஆயின் ஒருவர் கால் கிலோ கத்தரிக்காய் கேட்டால் விலையை கணிக்கத் தெரியாவிடில் பொருள் வாங்க வருபவரிடம் விலையை குறைவாக கூறி, பணத்தை குறைவாகப் பெற்றுக் கொள்வதனால் தொழில் நட்டமடைவர்.

அல்லது பொருளை வாங்கி விட்டு ஆயிரம் ரூபாவை கொடுத்து இரு நூற்றி ஐம்பது ரூபாவுக்கு மரக்கறி வாங்கினால் இன்னமும் எண்ணூற்றி ஐம்பது ரூபாய் மீதி வரும் எனக் கூறி கபடமாக பணத்தை கொள்ளையடித்துச் செல்வர்.

மனிதனுக்கு கணித அறிவு விவசாயம், வியாபாரம், கட்டிடம் கட்டுதல், வாழ்க்கை நடத்துதல் போன்றவற்றுக்கு பயன்படுவதோடு விளையாட்டுத் துறையிலும் பயன்படுகிறது.

உயரம் பாய்தலின் போது முதலாவது, இரண்டாவது, மூன்றாவது போன்ற இடங்களை கணிப்பதில் சிக்கல் ஏற்படலாம். அது மட்டுமின்றி ஓட்டப் போட்டி ஒன்றில் நேரம் கணிப்பாளர் கடிகாரத்தை பார்த்து நேரத்தை சரியாக கூற முடியாது. இதனால் இக்கடிகாரத்தை வைத்து நேரம் கணித்தவர் மேல் பலருக்கு பல்வேறு சந்தேகம் ஏற்படும். அதாவது இவர் அவனை ஆயிரம் மீற்றர் ஓடக் கூடிய நேரம் எடுத்தது என்று கூறுவதற்கு இவ்வாறு செய்தார் என்றும் அல்லது அவன் மீது இவருக்கு ''ஏதும் விருப்பம் இல்லை ஆக்கும்'' என்ற பல்வேறு கெட்ட பெயர்களை பெறவேண்டி வரும்.

விளையாட்டுத் துறையின் மட்டுமின்றி ஓர் நோயாளனுக்கும் கணித அறிவு அவசியமாகும். வைத்தியரின் மூன்று நேரம் ஒவ்வொரு நேரமும் ஒவ்வொன்றிலும் பாதி மாத்திரை உட் கொள்ள வேண்டும் என்று கூறினால் ஒவ்வொன்றும், பாதி என்பவை பற்றி எண்ணும் எழுத்தும் தெரியாத நோயாளி இன்னலடைவான்.

ஆறு மணிக்கு ஒரு தடவை மாத்திரை உட் கொள்ளுமாறு வைத்தியர் கூறினால், எண்ணைத் தெரியாத நோயாளி மாத்திரை சீராக உட் கொள்ள முடியாது. ஆகவே நாம் அனைவரும் ''எண்ணையும் எழுத்தையும் கற்றுக் கொண்டால் பிறரை நாட வேண்டியும் இல்லை. வாழ்க்கையில் பின்னடையவும் தேவையில்லை.

ஆக்கம் :- இ. கிரிதரன்
ஆண்டு :- 11 C

K

அன்றாட வாழ்வில் இரசாயனம்

(ஸ்ரீலங்கா விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தினால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்ற கட்டுரை).

உயிர் வாழ்வதற்காக மனிதன் சுற்றாடலிலிருந்து உணவையும் நீரையும் பெற்றுக் கொள்ளவேண்டும்.

உணவு உட்கொள்ளாது சில வாரங்கள் வரையும், நீர் அருந்தாது சில நாட்கள் வரையும் நாம் உயிர் வாழமுடியும். எனினும் ஒட்சிசன் கிடைக்காவிடின் ஒரு சில நிமிடத்தில் இறந்துவிடுவோம். உடலின் சகல உயிர்க்கலங்களுக்கும் சக்தியைப் பெற்றுக் கொள்வதற்காக O_2 தேவையாகின்றது. இது எங்களுக்கு வளியிலிருந்து கிடைக்கிறது. சக்தி வெளியேற்றப்படும் வகையில், கலங்களில் குளுக்கோசு ஒட்சியேற்றப்படுகிறது. இதுவே கலச்சுவாசம் எனப்படும்.

$$C_6H_{12}O_6 + 6O_2 \xrightarrow{\text{நொதியம்}} 6CO_2 + 6H_2O + \text{சக்தி}$$

உட்சுவாச வளியைவிட, வெளிச்சுவாச வளியில் O_2 அளவு குறைவாகவும் CO_2 அளவு கூடுதலாகவும் உள்ளது.

இரசாயனச் செய்முறைகளினாலேயே நாம் உயிர் வாழ்கிறோம். இச்செய்முறைகளில் பங்கெடுக்கும் இரசாயனப் பொருட்கள் உணவாகும். உயிரினங்கள் ஆக்கப்படும் பொருள்களை வழங்குவதும் அவை வாழ சக்தியை அளிப்பதும் உணவே.

மனித உடல் இரசாயனங்களின் கூட்டு. H_2O (60%), குருதி, மற்ற உடல் திரவங்களில் கரைந்த உப்புக்கள், என்பு, பல் (ஐதரொட்சி அப்பற்றைற்றை ஒத்தது) குருதியில் சிறிது $C_6H_{12}O_6$, தோலின் கீழ் கொழுப்பு, தசை, ஈரலில் கிளைக்கோஜன், கலங்களில் புரதங்கள் காணப்படும்.

உணவில் 3 பிரதான வகை உண்டு. காபோவைதரேற்று, கொழுப்புக்கள், புரதங்கள் தகுந்த போசாக்கிற்கு இவற்றின் balanced diet உடன் விட்டமின்களும் கனிப் பொருள்களும் தேவை.. வெல்லங்கள், மாப்பொருள்கள், செலுலோசு என்பன காபோவைதரேற்றுக்களாகும்.

கொழுப்புக்கள், கொழுப்பமிலங்களினதும் கிளிசரோலினதும் எசுத்தர்களாகும். திண்மக்கொழுப்புக்கள் நிரம்பிய கொழுப்பமிலங்களின் எசுத்தர்களாக, எண்ணைகள் நிரம்பாகொழுப்பமிலங்களின் எசுத்தர்களாகும். காபோவைதரேற்றுக்களிலும் கொழுப்புக்களிலும் C, H, O, உண்டு. புரதங்கள் குருதி, தசை, மூளை எங்கும் உள்ளன. புரதங்களில் C, H, O உண்டு. இவை ஏறத்தாழ 20 அமைனோ அமிலங்களால் ஆனவை.

தாவரங்கள், புரதங்களை CO_2 H_2O NO_3^-, SO_4^{--} இலிருந்து தொகுக்கின்றன. விலங்குகள் சமிபாட்டுத் தொகுதியில் புரதங்களை அமைனோ அமிலங்களாக மாற்றுகின்றன. இவற்றிலிருந்து தங்கள் வளர்ச்சிக்கு தேவையான புரதங்களை தொகுக்கின்றன.

மனித உடலில் 8 அமைனோ அமிலங்கள் தவிர்ந்த ஏனையவை தொகுக்கப்படும்.

$$\text{மாப்பொருள்} \xrightarrow{\text{அமிலேசு}} \text{மேல்ரோசு}$$

பெப்சின்

புரதம் ——————————→ போலிப்பெப்தையிட்டு

பெப்திரேசு

பொலிப்பெப்தையிட்டு ——————————→ அமைனோஅமிலம்

லக்ரேசு

லக்டோசு ——————————→ குளுக்கோசு

சுக்ரேசு

சுக்ரோசு ——————————→ குளுக்கோசு

இலிப்பேசு

கொழுப்பு ——————————→ கிளிசரோல் + கொழுப்பமிலம்

அசேதன ஊட்டப்பொருட்கள், கனிப்பொருள்கள் எனப்படும். cl^-, PO_4^{---}/, HCO_3^-, SO_4^{--} போன்றவை குருதியில் உண்டு. Fe^{++} ஈமோகுளோபினில் காணப்படும். P ஆனது DNA, RNA இல் காணப்படும். எல்லாமாக 25 மூலகங்கள் உயிர் வாழ அவசியம். தையிரோயிட் சுரப்பிக்கு I_2 தேவை. இதனால் NaI கறியுப்பு NaCI இற்குச் சேர்க்கப்படுகிறது. ஈமோகுளோபின் O_2 ஐக் கொண்டு செல்ல Fe^{2++} தேவை. என்பு, பல் என்பவற்றின் வளர்ச்சிக்கு Ca,P தேவை.

விட்டமின்கள் சேதனச்சேர்வைகளாகும். இவற்றின் குறைபாட்டினால் பல நோய்கள் உண்டாகின்றன. விற்றமின் A குறைவு கண் பார்வைக் குறைவையும், விட்டமின் B குறைவு பெரி பெரியையும், விட்டமின் C குறைவு ஸ்கேவியையும், விட்டமின் D குறைவு றிக்கெற்சையும் ஒசியோ மலேசியாவையும் ஏற்படுத்தும்.

எரிபொருள், செயற்கை உரங்கள், பூச்சி கொல்லிகள், களை கொல்லிகள் என்பனவற்றின் பாவனையினால் உணவு உற்பத்தி அதிகரிக்கப்பட்டது.

எல்லா உணவும் பச்சைத் தாவரங்களிலிருந்தே பெறப்படுகிறது. தாவரங்கள் CO_2, H_2O ஐ சூரிய சக்தியின் உதவியால் காபோவைதரேற்றுக்களாக மாற்றுகின்றன.

மண்ணிலிருந்து பெறும் N_2 சேர்வைகளுடன் ஒளித்தொகுப்பின் மூலம் பெற்ற சேர்வைகள் நமக்கு உணவாகின்றன.

புரதங்கள், கொழுப்புக்கள், பிற இரசாயனப் பொருள்களாக மாற்றப்படுகின்றன.

பயிர்ச்செய்கையின்போது, மண்ணிலிருந்து போஷணைசப்பொருள்கள் இழக்கப்பட, இரசாயன உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மூன்று பிரதான ஊட்ட மூலகங்கள் N,P,K ஆகும். N_2 வளியில் மூலக நிலையில் உள்ளது.

தாவரங்கள் மண்ணிலிருந்து NO_3^-, NH_4^+ ஐ எடுத்து காபோவைதரேற்றுக்களுடன் அமைனோ அமிலங்களைக் கொடுக்கின்றன.

N_2 பதித்தல் பல்வேறு முறைகளில் நிகழ்கிறது.

$NaNO_3$ சிலிசோல்ற் பீற்றர் ஆகக் காணப்படுகிறது.

மின்னலின்போது NO உண்டாகி NO_2 ஆகமாறி மழையில் கரைந்து HNO_3 ஆகி நிலத்தை அடைகிறது.

$(NH_4)_2SO_4$, NH_4NO_3 என்பன பிரதான உரங்களாகும்.

NH_3 உற்பத்திக்குத் தேவையான N_2, வளியிலிருந்தும் H_2, பெற்றோலியத்திலிருந்தும் கிடைக்கிறது.

P ஆனது விலங்கு எலும்புகளில் உண்டு. ஆனால் கரையாது H_2So_4 உடன் கரையுமியல்புடைய மேற்பொசுப்பேற்று ஆக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது.

K ஆனது KCl இலிருந்து பெறப்படும்.

இவற்றைவிட வேறு சில மூலகங்களும் சிறு அளவுகளில் தேவை. அமில மண்ணை நடுநிலை ஆக்க Ca (CaO) Mg^{++},S என்பன அவற்றுட் சில.

பீடைகளுக்கெதிராக பீடை கொல்லிகள் உ-ம் ஈய ஆசனேற்று பயன்படுத்துகின்றன.

DDT [டைக்குளோரோடைபீனைல் றைக்குளோரோ எதேன்] ஒரு சிறந்த பூச்சி கொல்லி. நீரில் கரையாது. இரண்டாம் உலகப்போரின் பின் பிரதானமாக மலேரியா ஒழிப்பில் பயன்படுத்தப்பட்டது. 1946இல் இலங்கையில் மலேரியாவினால் பாதிக்கப் பட்டோர் 2.8 மில்லியன். 1963இல் இத்தொகை 17 ஆகக் குறைந்து. DDT பாவனை நிறுத்தப்பட இத்தொகைமீண்டும் அதிகரித்தது.

பின்னர் மலத்தியோன் போன்ற 9 [சேதனை சேர்வைகள் பயன்படுத்தப் படுகின்றன.

நோயிலிருந்து உணவுப் பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்பைத் தவிர்க்கவும் பல இரசாயனப் பொருள்கள் கிடைக்கின்றன.

எந்த உணவுப் பயிரிலிருந்தும் சிறந்த பயனைப்பெற களை பிடுங்குதல் அவசியம்.

களை கொல்லியாக 2, 4, 5 Trichloro Phenoxy acetic acid அறுவடை நேரத்தில் சில பயிர்களின் இலைகள் உதிருவதற்கு CaNCN

இயந்திரங்கள் சுவட்டு எரிபொருளினால் இயங்குகின்றன.

நுண்ணங்கிகளினால் உணவு பழுதடைகிறது. நீர் அடக்கம் உயர்வாகவும் அமிலம் குறைவாகவும் உள்ளபோது நுண்ணங்கிகள் வாழும்.
உணவில் இரசாயன, பௌதிக, என்சைம் தொடர்பான மாற்றங்கள் ஏற்படும்போதும் உணவு பழுதடையும்.

கொழுப்புக்கள் O_2 உடன் தாக்கமுற்று பாண்டலடைகின்றன, பழங்கள் நீரை இழந்து வாடுகின்றன. சில உணவுகளில் என்சைமகள் சிறிய சேர்வைகளாக பிரிவடையச் செய்கின்றன. நீரகற்றல், உப்பிடுதல், வெல்லம் சேர்த்தல், நொதித்தல், வெப்பப்பதனிடல் குளிரூட்டல், உறைதல், இரசாயனச் சேர்க்கைகளைச் சேர்த்தல் போன்றவை உணவைப் பாதுகாக்கும் சில முறைகளாகும்.

பால் மா, கருவாடு, பேரீச்சம்பழம் என்பன உலர்த்துவதால் பாதுகாக்கப்பட்ட உணவுகளாகும். நுண்ணங்கிகள் வளர்வதற்கு தேவையான நீரின் அளவை உப்பின் அளவைக் கூட்டுவதால் குறைக்கலாம். இந்த பிரசாரண முறையால் நீர் அகற்றப்படும். உப்பிட்டமீன், தேசிக்காய் ஊறுகாய் உதாரணங்களாகும்.

வெல்லம் சேர்த்து நீரின் அளவைக் குறைப்பதால் ஜாம்கள் பாதுகாக்கப்படு கின்றன.

நொதித்தலின்போது வெல்லங்கள் அமிலங்களாக மாறுகின்றன.

நுண்ணங்கிகள் அமில உணவுகளில் பொதுவாக வளர்வதில்லை. பால் தயிராகும் போது லக்ரோசு, லக்ரோபசிலையினால் லக்ரிக் அமிலமாக மாற்றப்படுகிறது. வெப்பப்பதனிடல் முறையால் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், போத்தலில் அடைக்கப்பட்ட பால் பாதுகாக்கப்படுகின்றன. மீன், கோழிக்குஞ்சு, இறச்சிவகைகள், ஐஸ்கிறீம் என்பன உறையவைக்கும்போது அவற்றில் உள்ள நீர் பனிக்கட்டிப் பளிங்குகளாக மாறுவதால் நுண்ணங்கிகள் வளர்வதற்கு நீர் கிடைப்பதில்லை.

Na/K meta di sulphate or Benzoate போன்ற பாதுகாப்பு பொருள்கள் சேர்ந்து குளிர்பானங்கள், பழரசபானங்கள் பாதுகாக்கப்படுகிறது.

வளர்ந்த நாடுகளில் So_2 வின் உதவியினால் பழங்கள் காய்கறிகள் நீண்டகாலம் பாதுகாக்கப்படுகின்றன.

பாண்டல் அடைந்து பழுதாகும் கொழுப்புக்கள், எண்ணைகளுக்கு ஒட்சியேற்ற எதிரிகள் சேர்க்கப்படுகின்றன. மாஜரின், ஐஸ்கிறீம் போன்ற உணவுப்பொருட்களில் குழம்பாக்கிகள் உள்ளன. ஜாம்களில் காணப்படும் 'ஜெலி' தன்மைக்கு பெக்ரின் தாவரப்பிசின் காரணம் ஆகும். செயற்கை சாயங்களும், வாசனைப்பொருள்களும் உணவுகளுக்கு கவர்ச்சியைக் கொடுத்து உண்ணும் ஆவலைத் தூண்டுகின்றன. உ-ம் வனிலா பற்றர், மாஜரீனுக்கு நிறமூட்ட B-carotene மனிற்றோல், சோயிற்றால் போன்ற ஊட்டச்சத்துள்ள இனிப்பூட்டிகள் அவற்றின் குறைந்த பற்களைத் தாக்கும் தன்மைகாக மேலை நாடுகளில் பல உணவுப் பொருள்களில் பயன்படுத்தப்படுகின்றன. உணவு பதனிடப்படும்போது சில அவசிய பதார்த்தங்கள் அகற்றப்படுகின்றன, அல்லது அழிக்கப்படுகின்றன. ஆகவே ஊட்டப்பெறுமானத்தைக் கூட்ட சில சேர்க்கைகள் அவசியம். தீட்டிய அரிசிக்கு விட் B_1, மாவுக்கு $FeCO_3$, B complex பழச்சாறுகள், குளிர்பானங்களுக்கு விட் C, பாலுக்கு விட் D, மாஜரீனுக்கு விட் D என்பன சேர்க்கப்படுகின்றன.

உடலில், உடைகளில் உள்ள அழுக்கைப் போக்க பல துப்பரவாக்கிகள் பயன்படுகின்றன. இவற்றுள் பிரதானமானது சவர்க்காரம்.

ஆரம்பத்தில் உடைகளைத் துப்பரவாக்க தாவர சாம்பல் பயன்படுத்தப்பட்டது. இதில் K_2CO_3 உண்டு. CO_3^{--} நீருடன் காரக்கரைசல் கொடுக்கிறது. Na_2CO_3 கழுவற் சோடாவாகும். $CO_3^{--} + H_2O \rightarrow HCO_3^{-} + OH^-$ சவர்க்காரம் என்பது நீண்ட சங்கிலிகளைக் கொண்ட சேதன அமிலங்களின் Na/K உப்புக்களின் கலவையாகும். நீர்க்கரைசலில் அயனாகி Na^+ உம் $RCOO^-$ உம் உண்டாகிறது. மனிதனோல், உடைகளில் அழுக்கு, எண்ணெய், கொழுப்பு, கிறிஸ் காரணமாக ஒட்டிக் கொள்கிறது. எண்ணெய் நீருடன் கலப்பதில்லை. $RCOO^-$ இன் R முனை எண்ணெயில் கரைய COO^- முனை நீரில் கரைகிறது. COO^- இன் எண்ணெய்த் துளிகளைச் சுற்றி எதிரேற்றப்பட்ட ஒரு கோளம் (மிசேல்) உண்டாகிறது. சிறு துணிக்கைகளாக எண்ணெய் வேறாக்கப்பட்டு கரைசலில்பரவும். COO^- விற்கிடைப்பட்ட தள்ளுகையினால் எண்ணெய்த் துணிக்கை ஒன்றுசேரவிடாது தடுக்கப்படும். இதனால் நீரும் எண்ணெயும் குழம்பாக்கப்பட்டு இலகுவில் அழுக்கு அகற்றப்படும்.

அமிலக்கரைசல்களில் சோப் சுயாதீன அமிலங்களாக்கப்படும். இவ்வமிலங்களில் அயன் இல்லை. எனவே இவை எண்ணெய், அழுக்கை குழம்பாக்காது. வன்னீரில் சோப் நுரைக்காது. இங்கு Ca^{2+} Mg^{2+} டன் $RCOO^-$ தாக்கமுற்று கட்டி உண்டாகும். சோப் விரயமாகும். வன்னீருக்கு $NaCO_3$ சேர்க்க காபனேற்றுக்களாக Ca^{2+}, Mg^{2+} அகற்றப்படும் நீரை மென்னீராக்கும் தொட்டிகள் வீடுகளில் உள்ளன.

இங்குள்ள பல்பகுதியத் திரவியம் Ca^{++} / Mg^{++} ஐத் தனது மேற்பரப்பரபில் கவர்ந்து அகற்றுகிறது. சோப் அற்ற துப்பரவாக்கிகள் அமிலங்கள், வன்னீர் என்பவற்றால் பாதிக்கப்படாது. இவற்றின் $Ca^{++}Mg^{++}$ உப்புக்கள் நீரில் கரையும். சோடியம் லோறைல் சல்பேற்று, ABS, LAS என்பன இவற்றுட் சிலவாகும் பாத்திரங்கள், சுவர் கதவு, பிறமேற்பரப்புக்கள் துப்பரவாக்கும் துப்பரவாக்கிகளும் உள்ளன. விம் ஓர் உதாரணம். கிறிஸ் படலம் வினாகிரியினாலும் கண்ணாடி மேற்பரப்புக்கள் NH_3 வினாலும் துப்பரவாக்கப்படுகின்றன. $NaHCO_3$ ஓர் abrasive துப்பரவாக்கி. பூச்சு, வானில், adhesive, மெழுகு அகற்ற பலவகை கரைப்பான்கள் உள்ளன.

பற்பசையில் சோடியம் லோறைல் சல்பேற்றும் $CaCO_3$ உம் பிரதான கூறுகள். பல் கெடுதலைக் தடுக்க SnF_2 சேர்க்கப்படுகிறது. F^- ஆனது எனாமலை புளோர் எபரைற்று ஆக்கும். இது ஐதரொட்சி ஏபனைற்றிலும் வலிமையானது. F^- ஆனது நீரிலும் கலக்கப்படும். மயிரில் கெரற்றின் எனும் ஒரு புரதம் உள்ளது. Sebum என்பது மயிர்க்கால் இன் உராய்வு நீக்கி ஆகிறது. கழுவும்போது இது அகற்றப்படுகிறது. சோடியம் லோறைல் சல்பேற்று Shampoo ஆக பயன்படுகிறது. பராபெனலீன் இரு அமைனின் பெறுதிகள் சாயங்களாகவும் பாதுகாப்பான படை ஒன்றை வழங்கியும், அதனை மென்மையாக்கியும் தோலைப் பாதுகாப்பதற்கு கிறீம்கள், லோசன்கள் உண்டு. இவற்றில் கனிப்பொருள் எண்ணெயும், பெற்றோலியம் ஜெலியும் உண்டு. உதடுகளைப் பாதுகாக்கவும் அழகைக் கூட்டவும் Castor oil, Bees wax ஐக் கொண்ட உதட்டுச் சாயங்கள் உண்டு. Perfumes களில் உள்ள கூறுகள் அவற்றின் ஆவிப்பறப்புத் தன்மையைப் பொறுத்து 3 வகைப்படும். அதிகூடிய ஆவிப்பறப்புத்தன் மை உள்ளது, அதன் ஆரம்ப வாசனைக்கு காரணமாகும்.

Jasmone (Jasmine வாசனை) Geraniol(Rose வாசனை) Citral (lemon) சில Perfumes ஆகும்.

வலிக்கு நிவாரணம் அளிப்பதற்கும் நோய்களைக் குணப்படுத்தவும் மன அமைதிக்காகவும் நித்திரைக்குமென பல்வேறு வகையான மருந்துகளைப் பயன்படுத்துகிறோம். தலைவலிக்கு அசற்றைல் சலிசிலிக் அமிலம் (அஸ்பிரின்), பரசிற்றமோல் முதலியன பயன்படுத்தப்படுகின்றன. 50 ஆண்டுகளுக்கு முன் தொற்று நோய்களினால் மக்கள் பலர் இறந்துள்ளனர். நுண்ணுயிர்கொல்லிகள் (Antibiotics) எனப்படும். மருந்துகளினால் இவை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டன. சல்பாமருந்துகள், பென்சிலின், ரெற்றாசைக்கிளின், ஒறியோமைசின், ரெறாமைசின், ஸ்ரெப்ரோமைசின் என்பன, பொதுவாக பாவனையில் உள்ளவை.

மனதைப் பாதிக்கும் மருந்துகள் அற்ககோல், Marijuana, அபின், Cocaine போன்றவை ஆயிரக்கணக்கான வருடங்களாக பயன்படுத்தப்படுகின்றன. இப்பொழுது இவ்வகை மருந்துகள் ஆயிரக்கணக்கில் உள்ளன.

(Unconsious) மூர்ச்சையடையச் செய்வதற்கு குளோரோபோம் சைக்கிளோ புறொப்பேன், பாபிறயூரேற்றுக்கள், Narcotics,, Opium, Morphine, Heroine என்பன.
வாழ்க்கையின் வேகத்தினால் ஓய்வு தேடவும் அமைதி காணவும் மக்கள் இரசாயனப் பொருள்களை நாடுகின்றனர்.

இவை Tranquilizers அற்ககோல் வலியம், லிப்ரியம்மாயத்தோற்றங்களை உண்டு பண்ணும் LSD போன்றனவற்றையும் இளைஞர்கள் பாவிக்கின்றனர்.

வளியில் 21% O_2 ஆகும். N_2 ஐதாக்கி ஆக உள்ளது. O_2 தகனத்துணையுமாகும். இவ்விகிதத்துக்கு மேல் O_2 இருப்பினும் உயிர்கள் அழிந்துவிடும். எரிபொருள் தகனம் அடைவதால் வெப்பத்தையும் ஒளியையும் பெறுகிறோம்.

மெழுகுதிரி, நிலக்கரி, மண்ணெண்ணெய், பெற்றோல், இயற்கைவாயு, உயிர்வாயு, திரவ பெற்றோலியம் என்பன எரிபொருள்கள்.

$$C_8H_{18} + O_2 -- 8CO_2 + 9H_2O + \text{சக்தி}$$

உணவு Metabolism இல் தாவரங்கள் விலங்குகளால் பயன்படுத்தப்படுகிறது. உலோகங் களை உருக்கி ஒட்டுவதற்குத் தேவைப்படும் ஒட்சி அசற்றலீன் சுவாலையிலும் பயன்படு கிறது. O_2 சிலிண்டர்களில் அடைக்கப்பட்டு வைத்தியசாலைகளில் செயற்கை சுவாசத் தில் பயன்படுத்தப்படுகிறது. உலோக அரிப்பில் O_2 தேவை.

வளிமண்டலத்தில் உள்ள வளி பல வழிகளால் மாசடைகிறது. காடுகள் அழிக்கப் படுவதால் மிதமிஞ்சிய சுவட்டு எரிபொருள் பாவனையினாலும் வளியில் CO_2 இன் அளவு கூடுகிறது. தற்கால உலகின் போக்குவரத்து அகதகன இயந்திரத்திலேயே பெரிதும் தங்கியுள்ளது. இதனால் பெருமளவு புகை, CO, CO_2 வளியுனுட் செல்கிறது. மேல் நாடுகளில் smog (பனிப்புகை) உண்டாகிப் பல மக்கள் இறப்பதற்கு காரணமாக இருந்திருக்கிறது.

மேலும் தொழிற்சாலைகளிருந்து SO_2 உடும் N_2 வின் ஒட்சைட்டுக்கள் வளியுடன் சேர்கின் றன. பூரணமற்ற தகனத்தின்போது வெளியிடப்படும் CO, ஈமோகுளோபீனுடன் பிணைவதால் அது O_2 ஐக் கொண்டு செல்லல் தடுக்கப்படும்.

CO_2 இன் அளவு கூடுவதால் 'பச்சைவீட்டு விளைவு' உண்டாகிறது. வெப்பநிலை உயரும், கடல்மட்டம் உயரும், காலநிலை மாறும் எனக் கூறப்படுகிறது.

நாம் பயன்படுத்தும் பல பதார்த்தங்கள் இயற்கைப் பல்பகுதியங்களாகும். கம்பளி, பட்டு, தசையில் காணப்படும் புரதங்கள், உருளைக்கிழங்கு, கோதுமையில் உள்ள மாப்பொருள், கடதாசி, மரம் என்பனவற்றில் உள்ள செலுலோசு குரோமசோம்களில் உள்ள DNA இவற்றுக்கு உதாரணங்களாகும்.

தொகுப்புப் பல்பகுதியங்களின் பாவனை பல்கிப் பெருகியுள்ளது. எதினிலிருந்து பெறப்படும் பொலித்தீன் பொலிப்புறொப்பின் என்பன பைகள் மின்கம்பிக் காவிகள், ரேடியோப் பெட்டிகள் விளையாட்டுப்பொருள்கள் கழுவற்கிண்ணங்கள் மேசைவிரிப்புக்கள் என்பன போன்ற பல வடிவங்களில் உள்ளன.

நீர்க்குழாயாக PVC பொலிதைரீன் இயற்கை ரப்பர் ஐசோபிரீன் பல்பகுதியம் ஆகும். வற்கனைசுப் படுத்த ஐதரோகாப்ன் சங்கிலிகள் S அணுக்களுடன் குறுக்குப் பிணைப்பில் ஈடுபடுகிறது. இதனால் இறப்பரின் இழுவைவலு மீள்சக்தி அதிகரிக்கிறது. வாகனங்களில் ரயர், ரியூப் ஆக பயன்படுகிறது.

பீனோல் - போமலிகைடுப் பல்பகுதியான பேக்கலைற்று அதிக குறுக்குப்பிணைப்புகளைக் கொண்டது. இறுக்கமானது. கடினமானது, மின் சொருகிகளில் பயன்படுகிறது.

பொரிலிதைரீன் விளையாட்டுப் பொம்மைகளில் Teflon பூச்சுக்கள் கலவிகளில், Perspex கண்ணாடிக்குப் பதிலாக, Acrilan கம்பளிக்குப் பதிலாக, பயன்படுகிறது. பருத்தி கம்பளிக்குப் பதிலாக தொகுப்பு இழைகள் உள்ளன. 'ரெறிலீன்', 'டக்குரோன்' என்பன பொலி எசுத்தர்களாகும். இவை இழுவை வலு மிக்கவை.

'நைலோன்' 6,66 என்பன பொலி ஏமைட்டுக்களாகும். இலகுவில் கழுவிப் பாவிக்கக் கூடியதாயிருப்பதால் பெரும்பகுதி ஆடை தாயரிப்பிலும் மீதி கயிறு, கம்பளம், யந்திர சாதனங்களிலும்.

பல உலோகங்கள் அன்றாட வாழ்வில் உபயோகத்தில் உள்ளன. Na, ஆவி விளக்குகளில் Mg ஆனது Al உடன் கலப்பு உலோகமாக விமான பகுதிகளிலும் வீட்டுப் பாவனைப் பொருட்களிலும் பயன்படுகிறது. Mg வளியில் எரிந்து பிரகாசமான வெளிச்சம் வெளி விடப் படுவதால் ஒளிப்படக் குமிழ்களில் O_2 ஓட்டத்தில் Mg தகடு உள்ளது.

Al இன் மேல் பாதுகாப்பான ஒட்சைட்டுப் படலம் இருப்பதால் மேலும் அரிப்புக்கு உட்படாது. இதனால் பாற்போத்தல் மூடிகள் விமானம், மின்கம்பிகள், கேத்தல்கள், சட்டிகள் போன்றவற்றில் பயன்படுகிறது.

இரும்பு அதிகளவில் பயன்படும் உலோகமாகும். கம்பிகள், ஆணிகள், சட்டங்கள், வாளிகள் ஆக்கப் பயன்படுகின்றது.

C உடன் வேறு சில உலோகங்களையும் கொண்டது உருக்கு.

கறையில் உருக்கு கத்தி, வாள், கத்தரிக்கோல், சத்திரசிகிச்சை உபகரணங்களில் பயன் படுகிறது.

கட்டடப்பொருளாக பல ஆண்டுகளுக்கு முன்பே சுண்ணாம்பு உபயோகிக்கப்பட்டது. சுண்ணாம்புக்கல்லை சூளைகளில் எரித்து பெறப்பட்ட நீறாத சுண்ணாம்பிற்கு நீர் சேர்க்க நீறிய சுண்ணாம்பு பெறப்படுகிறது. நீறிய சுண்ணாம்பிற்கு மணல், நீர் சேர்க்க உண்டாகும் சுண்ணாம்புச் சாந்து வலிமையிக்கது. இதற்குக் காரணம் நீர் ஆவியாக சாந்தில் உள்ள $Ca(OH)_2$ வளியில் உள்ள CO_2 உடன் சேர்ந்து $CaCO_3$ ஆக மாற்றுவது ஆகும். மேலும் சுண்ணாம்புப்பால் வெள்ளையடிக்கவும் சுண்ணாம்பு மண்ணின் அமிலத்தன்மையை நீக்கவும் பயன்படுகிறது.

களி என்பது Al_2O_3,-$2SiO_2$-$2H_2O$ ஆகும். நீர் சேர்த்துப் பதனிட்டு வெவ்வேறு உருவங்கள் அமைத்து வெப்பமேற்றி ஓடு, செங்கல், மட்பாத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். இதே போன்று சீமெந்து பிரதான கட்டடப்பொருள் ஆகும். இது Ca,Al சிலிக்கேற்றுக்களின் கலவை ஆகும்.

கண்ணாடி வெப்பமேற்ற மென்மையாகிறது. இப்போது எந்த அமைப்பையும் / வடிவத்தையும் பெற்றுக் கொள்ளலாம். முப்பரிமாண ரீதியில் SiO_4 நான்முகியின் ஒழுங்கற்ற அமைப்பே இதற்குக் காரணம்.

N_2 இன் ஒட்சைட்டுக்கள் SO_2 SO_3 நீரில் கரைவதால் அமிலமழை பெய்கிறது. (HNO_3, H_2SO_4) தரை நீரில் NO_3^- இன் அளவு கூடுகிறது.
நீலக்குழந்தைகள் பிறக்கின்றன.

H_2SO_4 இனால் உலோகங்கள் அரிப்புக்குள்ளாகின்றன. கட்டடங்கள், சிலைகளில் மாபின் $CaSO_4$ ஆகி சிதைகின்றன.

$N_2 + O_2$ ——மின்னல்——→ $2NO_2$
$2NO + O_2$ ————————→ $2NO$
$3NO^2 + H_2O$ ————————→ $2HNO_3 + NO$

uv
மேல் வளிமண்டலத்தில் $3O_2 \longrightarrow 2O_3$ / O_3 படலம் புற ஊதாக்கதிர்களைத் தடுக்கும் வானத்தின் கூரை ஆகும்.

CFC இனால் இக்கூரையில் துவாரம் ஏற்பட்டு அதிகளவில் புற ஊதாக்கதிர்கள் பூமியை அடையும் ஆபத்து உண்டு. இதனால் தோல் புற்றுநோய் ஏற்படும்.

'நீரின்றி அமையாது உலகு'

புவி மேற்பரப்பில் உள்ள மிகப் பரிச்சயமான திரவம் நீர். பனிக்கட்டி நீரிலும் அடர்த்தி குறைந்தது. குளிர்காலங்களில் நீர் நிலைகளில் மேற்பரப்பில் பனிக்கட்டி உண்டாவதால் கீழே உயிரினங்கள் வாழ்கின்றன. நீரின் உயர்வெப்பக்கொள்ளளவு காரண மாக சிறிய வெப்பநிலை வீழ்ச்சிக்கும் பெருமளவு வெப்பம் வெளிவிடப்படுவதால் புவி மேற்பரப்பில் பெரிதும் வெப்பநிலை மாறுவதில்லை, நீரின் உயர் ஆவியாதல் மறை வெப்பம் காரணமாக சிறிதளவு நீர் ஆவியாக பெருமளவு வெப்பம் விரயமாகிறது. அறைவெப்பநிலையில் திரவமாக இருப்பதால் குடிக்க, குளிக்க முடிகிறது. மழை பெய்கி றது. மேற்பரப்பிழுவிசையினால் தாவரங்கள் நீரை உறிஞ்சி உப்புக்களையும் நீரையும் பெறுகின்றன. இவற்றுக்கெல்லாம் காரணம் ஐதரசன் பிணைப்புக்காரணமாக நீர் மூலக்கூறுகளுக்கிடையே காணப்படும் இணக்கம் ஆகும்.

நாம் உண்ணும் உணவுகளில் அமிலங்கள் காணப்படுகின்றன. தேசிக்காயில் சித்திரிக் அமிலம், வினாகிரியில் அசற்றிக் அமிலம், பாலில் இலற்றிக் அமிலம், தேங்காயில் லைசீன் டிறிப்டோபான எனும் அமைனோ அமிலங்கள் என்பன உள்ளன. காய்கள் பழுக்கும் போது வெல்லங்கள் கூடுவதால் சில பழங்கள் இனிக்கின்றன.

தி. அரவிந்
Year 13 C

தமிழ்ப் பேழை தாமோதரம்பிள்ளை

"ஏடு எடுக்கும்போது ஓரஞ் சொரிகிறது. கட்டு அவிழ்க்கும்போது இதழ் முறிகிறது. ஒற்றை புரட்டும்போது துண்டாய் பறக்கிறது. இனி எழுத்துக்களோ என்றால் வாலுந்தலையுமின்றி நாலாபுறமும் பாணக் கலப்பை மறுத்து உழுது கிடக்கிறது!

இவ்வாக்கியங்கள் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் ஈழத்து தமிழறிஞர் ஒருவரது வாயிற் பிறந்த வார்த்தைகளாகும். பழந்தமிழ் நூல்களை தேடிச் சிறந்த அவ்வறிஞர் வேறுயாருமல்லர். பதிப்பித்தற் பணிக்கு புத்துயிரளித்த ஈழத்து அறிஞர் "இராவ் பகதூர்" எனச் சிறப் பிக்கப்பட்ட சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களே.

ஈழநாட்டின் தனிமரபுக் கல்வியும் மேனாட்டுக் கல்விமுறையும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே சங்கமித்தன. இவ்விருவகைக் கல்வி முறைகளும் தந்த நலன்களை தமதாக்கிக் கொண்டு ஈழநாட்டில் சிலர் வரலாற்றுத் திருப்பு முனைகளாக அமைந்தனர். இவர்களுள் நல்லை நகர் நாவலரும், சிறுப்பிட்டி சி. வை. தாமோதரம்பிள்ளையும் குறிப்பிடத்தக்க சான்றோர். நாவலர் தமது சுற்றாடலை, சமய நிலையை, நோக்கினார். தாமோதரம் பிள்ளை பழந்தமிழ்ச் செல்வம் பாழ்போகும் நிலையை, இலக்கிய வளர்ச்சியை நோக்கினார். நாவலரின் முயற்சி அரிச்சுவடியில் தொடங்கிற்று. பிள்ளையினது முயற்சி தொல்காப்பியத்தில் கால்கோளாயிற்று.

தாமோதரனார், நாவலர் பிறந்து பத்துவருடம் கழித்து 1832ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 12ந்திகதி யாழ்ப்பாணத்திலுள்ள சிறுப்பிட்டி என்னும் கிராமத்

தில் வைரவநாதபிள்ளை என்பவருக்கும் அவர் பத்தினியார், பெருந்தேவி என்பாருக்கும் சிரேட்ட புத்திரராய் தோன்றினார். இளமைப் பராயம் முதலே ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழியும் கற்று இருமொழி விற்பன்னரானார். நீதிநூல்களையும், நிகண்டுகளையும் பாரதம், நைடதம் போன்ற நூல்களையும் சுன்னாகம் முத்துக்குமாரக் கவிராயர் பால் கற்றுத் தேறி சிறந்த இலக்கண இலக்கியப் பயிற்சி உடையவரானார். தெல்லிப்பளை ஆங்கிலக் கல்லூரியில் ஆங்கிலமும், கவிராயரிடம் தமிழும் கற்றுணர்ந்து, உயர் கல்வியை ''யாழ்ப்பாண சர்வசந்திர கலாசாலை'' யில் பயின்றார். பிள்ளையவர்களிடத்தே விளங்கிய தமிழறிவைக் கண்டு இறும்பூதெய்திய ஆசிரியர் நெவின்ஸ் அவர்கள் பிள்ளையவர்களைப் 'பண்டிதன்' என்று அழைப்பது வழக்கமாயிற்று.

இவ்வாறு நன்மதிப்பு பெற்று 1852இல் தமது இருபதாவது வயதிலே கோப்பாயிலுள்ள ஒரு போதனாசாலையில் ஆசிரியராய் அமர்ந்தார். அக்காலத்தில் நீதிநெறி விளக்கப் பதிப்புரை அவரால் வெளியிடப்பட்டது. பார்சிவல் பாதிரியார், தாமோதரரது விவேக சாதுரியத்தையும், தமிழ்ப் புலமையையும் கேள்வியுற்று அவர்களை சென்னைக்கு அழைத்து 'தினவர்த்தமானி' என்னும் பத்திரிகை ஆசிரியராக்கினார். எட்டுணையுந் தவறாமல் நடுநின்று விடயங்களை ஆராய்ந்து வசன நடையை அணிபட அமைத்து பத்திரிகை நடத்தினார். இதனால் இவரது திறமையை நன்கறிந்த அரசினர் அவர்களை சென்னை இராசதானிக் கல்லூரியில் தமிழ் பண்டிதராக்கினர்.

1857ஆம் ஆண்டு சென்னை சர்வகலாசாலை பிரவேச பரீட்சையிலும். பி. ஏ, பரீட்சையிலும் முதல் பிள்ளையாய் சித்தியெய்தினர். பின்னர் கணக்குச்சாலை உத்தியோகத்தராகவும், விசாரணை கர்த்தருமாக பதவி உயர்வடைந்தார். ஒருபுறம் உத்தியோகம் வளர்ந்து கொண்டு இருந்தபோது சி. வை. தாமோதரம்பிள்ளை காரியத்திலும் கண்ணாயிருந்தார். பழந்தமிழ் செல்வத்தை எவ்வாறு பாதுகாப்பதென்ற எண்ணம் அவர் இதயத்தில் குடியிருந்து வளர்ந்து கொண்டேயிருந்தது. நாவலர் அவர்களும் பிள்ளைக்கு உறுதுணையாய் இருந்தார். 1868இல் நாவலர் ஆராய்ந்து கொடுத்த ''தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையருரையை'' நாவலரின் வழிகாட்டலுடன் பதிப்பித்தார், இவ்வாறு 1871இல் பி. எல் பரீட்சையிலும் சி. வை. தாமோதரம்பிள்ளை வெற்றியடைந்தார்.

தாமோதரம்பிள்ளை பிறரது அழுக்காற்று முயற்சிகளினால் சிறிதும் தளர்வடையவில்லை. ஆயினும் பிள்ளையை மேன்மேலும் ஊக்குவித்தற் பொருட்டு "நல்லறிவுச் சுடர் கொளுத்தல்" என்ற உக்கிர கண்டனமொன்று நாவலரால் தீட்டப்பட்டது. தாமோதரம்பிள்ளை கருமமே கண்ணாயிருந்தார். அவர் முயற்சிகள் தொடர்ந்தன. தொல்காப்பியத்தின் உயர்நிலை அதுவே. அரிதாய் இவ்வேடு தமிழ்நாடு முழுவதிலும் சிலவாய் '' அலையும் நெரிந்தும் முரிந்தும் சிதைந்தும் இறுதி விடுவனவாயிருந்தன.'' ''செல்துளைத்த துளையன்றி மெய்ப்புள்ளி விரவாத சொன்னாறேடு'' என்று சொல்லிச் சொல்லி அவ்வேடுகளை தாமோதரம்பிள்ளை தமது உதிரக் கண்களால் கழுவினார். ''ஏழ்ந்து கெட்டுச் சிதைந்து நிரை மாறி முறையின் முரணி முழுதும் கட்டுவிட்டுச் சிதறி மூலை மடங்கி'' எடுப்பாரும் அடுப்பாரும் இன்றி மண்ணுக்கிரையாய் கிடந்த ஏடுகள் கிரந்தங்களுட் சிறந்தவற்றை விரைந்தச்சிட்டு பாதுகாக்க வேண்டியது எத்துணை இன்றியமையாப் பெருங்கடமை என்பதை உணர்ந்து அதற்கான நன்முயற்சிகளை பிள்ளையவர்கள் மேற்கொண்டார். அழிந்தொழிவனவாய் கிடந்த இந்நூல்களை பதிப்பித்து வெளியிட்டார். தமிழன்னை புன்னகை பூத்தாள். மேலும் சிறந்த அணி

கலன் பூண்டு அலங்கரிக்கப்பட்டன; தாமோ தரம்பிள்ளை "தமிழ் மூச்சு" விட்டார். அவர் தம் உள்ளம் குளிர்ந்தது.

இன்று தமிழ்மொழி முதுபெரும் நூல்களைக் கொண்டதாக விளங்கக் காரணம் நாவலரும் பிள்ளையவர்களும் மேற்கொண்ட பதிப்பு முயற்சிகளே. பனையோலை ஏட்டிலே கறையானுக் கிரையாகி அழியும் நிலையிலிருந்த ஏடுகளை தொகுத்து ஆராய்ந்து வெளியிடும் முயற்சியில் இருவரும் ஒருங்கு நின்று தீவிரமாக உழைத்தனர். பிள்ளையவர்களே தமிழ்த்தாத்தா எனப் போற்றப்படும் உ. வே. சாமிநாதய்யருக்கு பதிப்புத் துறையில் முன்னோடியாகவும் ஊக்கமூட்டுபவராகவும் அமைந்தார். பழந்தமிழ் நூல்களை அச்சிற் பதித்து வெளியிட்டு அவற்றுக்கு சாகாவரம் அளித்த மும்மூர்த்திகள் என இம்மூவரையும் போற்றுவர்.

நாவலருடைய மறைவிற்குப் பின்னர் சி. வை. தாமோதரம்பிள்ளை தாமே பதிப்பு முயற்சியில் முழுமூச்சாக ஈடுபட்டார். இவ்வண்ணம் இலக்கிய உலகின் தலைசிறந்ததாக கற்றார் ஏத்தும் கலித்தொகை உரைப் பதிப்பு 1887 இல் வெளிவந்தது. இவ்வாறு வீரசோழியம், இறையனார் களவியலுரை தொல்காப்பியம், பொருளாதிகாரம், நச்சினார்க்கினியாருரை இலக்கணவிளக்கம், தொல்காப்பியம், எழுத்ததிகாரம் ஆகிய இலக்கண நூல்களையும் தணிகைப்புராணம், கலித்தொகை, சூளாமணி, ஆகிய இலக்கியங்களையும் அச்சு வாகன மேற்றினார். உடல் நலக்குறைவால் எட்டுத்தொகை நூற்பதிப்பு முயற்சி கைவிடப்பட்டது. அது அச்சில் வெளிவரவில்லை. அவ்வளவில் சி. வை. தாமோதரம்பிள்ளையின் தமிழ்ச் சரிதம் பூர்த்தியாயிற்று. 1901ஆம் ஆண்டு ஜனவரி 1-ம் திகதி இவ்வுலகவாழ்வை சி. வை. தாமோதரம்பிள்ளை உயிர்நீத்தார்.

தேசமத பாஷாபிமான மிக்கவரும் சிவபூசாதுரந்தரரும் ஏடுகாத்தபீடுடையாருமாகிய சி. வை. தாமோதரம்பிள்ளையினது சால்புடைமை கண்ட சென்னை அரசாங்கம் 1875இல் இராவ்பகதூர் (Rao Bahad Dur) என்னும் கண்ணியப்பட்டம் நல்கிக் கௌரவித்தது. பிள்ளையவர்கள் சில காலம் புதுக்கோட்டைச் சமஸ்தான மகாமன்றத்து நீதிபதியாகவும் கடமையாற்றியவர்கள். சென்னை திராவிடக் கிரந்த பரிபாலனசபை நியாயபரிபாலன சபை என்பவற்றில் அங்கத்தவராயும் சென்னைச் சர்வகலாசாலைத் தமிழ்ப்பரீட்சகராயும் இருந்து பணிபுரிந்தவர். சென்னைச் சர்வகலாசாலையில் முதல் வித்தியார்த்தி (பி, ஏ. பட்டம்) என்ற பெருமைக்கும் உரியவர்கள்.

சி. வை. தாமோதரம்பிள்ளையாரின் தந்தையின் ஊர் சிறுப்பிட்டி. தாயின் ஊர் ஏழாலை. இந்த இரு ஊர்களிலே ஒரு சிறு குடிசையாவது அவர் அமைத்ததில்லை. விரலளவு நிலத்தையாவது சொந்தமாக்கி வைத்திருக்கவில்லை. தமிழுக்குத் தொண்டு செய்வதே தனது சொத்துடைமை என்றெண்ணி புகழைச் சம்பாதித்த பெருந்தகையாளர். தமிழ் வழங்கும் இடமெல்லாம் அவர் பணி போற்றப்பட்டது. தமிழ் மண் யாவும் அவர் உடமையாயிற்று.

து. பிரதீபன்
ஆண்டு 11 D

One who has complete faith in Baba will be protected always

Narayanan is a student living with his parents. He and his parents are Sai devotees. He is very good in his studies and has complete faith in Baba. Their house is situated in an isolated place. There are no houses close - by. One day his parents had to go to the neighbouring village to attend a function in a relative's house. They could not take their son with them as he had to sit for the term examination the next day. So they had to leave him alone in the house. They told the son to lock the doors and stay inside. They told him that they would return in the morning. After the parents had left, Narayanan locked the doors and was studying for the examination.

There lived in the same village a relative of Narayanan who was scheming to get all the properties and wealth belonging to Narayanan's parents by killing Narayanan. Narayanan is the sole heir to his parents. When this relative saw Narayanan's parents leaving for the function to the next village, he decided to kill Narayanan that night.

A few hours before mid - night the relative went along with some other persons to Narayanan's house armed with weapons. On reaching the house he called out Narayanan's name and told him to open the door. Narayanan was very much afraid and so he did not open the doors. The relative and others started to break open the doors. Narayanan ran into the shrine room, crying and fell at the feet of the picture of Baba and prayed him to save his life. He continued to pray Baba and fell asleep. While the attackers were trying to break the doors, a large cobra suddenly appeared at one of the doors which was being attacked by the other persons. On seeing the cobra the other attackers started to run saying 'cobra, cobra' but the relative told the others to kill the cobra. At about the same time another cobra appeared at the door which was being attacked by the relative. The cobra suddenly attacked the relative of Narayanan. He fell down unconscious and died (without regaining consciousness). On seeing this, the other attackers ran away from that place.

The next day the parents returned home about noon time. They found their relative lying dead at the door step. They found the door locked from inside. They called out for Narayanan. Narayanan who was fast asleep in the shrine room heard the parents calling and Naryanan came and opened the door. He related the whole incident to the parents. The parents were shocked to know that it was Baba who had saved their son

by appearing as cobra. Narayanan found that the time was around noon time and felt sorry for missing the term test. The parents consoled him and told him not to worry.

Next day when Narayanan went to school, the principal told him that he had done very well in the exam held the previous day and had got the highest marks. Narayanan knew it was Baba who had appeared in his form and wrote the exam. He was very thankful and grateful for all what Baba had done for him.

K. Nirainjan
Year 10c
Hartley College
Point Pedro.

The rich man and the fool

Once in a small village lived a very rich man. He made money by lending money and getting it back with interest. But he was very stingy. Because of this nature he had very few friends. After hearing about a robbery wlich took place in a friend's house, the rich man thought it would be wise to keep his money in a bank. But to go to the bank he had to travel about ten miles, and on the way there was a forest. This frigh-tened the rich man, and he was searching for some one to accompany him. But because of his bad manners no one agreed to accompany him. So giving a fool ten rupees the rieh man made him agree. They started travelling in the evening and at night fall they reached the forest. The rich man having made the fool sleep on the side of the road and hiding himself behind some bushes, he went to sleep. In the middle of the night some thieves were passing by. One of them tripped over the fool and fell down, thinking that the fool was a log. The thief said in a loud angry voice "some donkey has put a log on the road." Saying this he got up and went on. The fool said in an angry voice "will a log have ten rupees in his lap?" When the thief heard this he frightened the fool and took his ten rupees. One of the thieves jokingly said" I don't think this is not a dud coin. The fool who had been made angry by this said "ask the rich man who is sleeping in the bush whether this money is acceptable." When the thieves heard this they went to the bush and hit the rich man and took away all his money. The rich man sadly went on and from that day the rich man knew that it was dangerous to have fools as friends.

Sithamparapillai Joel
Year 10 C

Ayurvedic Medicine in Sri Lanka

When Sri Lanka was ruled by the British, medical facilities were provided to the people by them. Western medicine became popular as the westerners developed many hospitals and the poor were given free treatment as well. Even the rich were attracted towards western treatment & medicine because the cure was quick. Hence ayurvedic medicine began unpopular and no developments were made in this field.

But after independence, the government started many projects for the development of the country. One of these was the development of ayurvedic medicine. In early days people practised the Unani and sidda medicines. But after the introduction of western treatment Ayurvedic treatment became less popular. In addition the western doctors were given employment and well paid too. People were encouraged by these prospects bent towards the field of studying of western medicine. On the other hand the ayurvedic physician was not encouraged and not well paid. So people were not drawn towards it.

But, now the government is helping to devolop Ayurvedic Medicine in many ways. It is paying a grant to these physicians even though the patients in villages are charged for treatment. They have also issued permit to the physician to get down materials easily and cheaply. Ayurvedic colleges have been opened. They are taking measures to replace the apothecaries with successful Ayurvedic candidates in the hospitals. An Ayurvedic Medical Research Institute has been established in Sri Lanka at Navinna. To prepare medicines various kinds of herbs are made use of. Nowadays these herbs are in scarcity. Therefore the government is keen in growing herbal plants. There is a large estate in Anuradhapura for this purpose· There is another in Kilinochchi too.

Many diseases that couldn't be treated and cured by western doctors have been cured by Ayurvedic Medicines. Scientist have found that taking too many tablets for different illness can bring a new illness. When natural food products and Ayurvedic treatment is taken, one becomes healthy and one's life term is lengthened.

Generally people strive to get into fields where they can earn more money. Therefore its the duty of the government to take steps to pay good salary to the Ayurvedic physicians and also provide good future prospects to them. They should help the physicians in research work to prepare good medicines and provide more institutions to train more doctors. Hospitals should provide treatment to even the poorest. Ways should be found to provide medicines for immediate recovery. If these things are fulfilled Ayurvedic treatment will be taken by all people & they would be healthy, thus the nation will become healthy.

K. Sathiyamoorthy
Year 11 A

Yoga Swamigal
Sage of Columbuthurai

A son was born to Ambalavanar and his wife Sinnachipillai of Maviddapuram on 29.05.1872. It is supposed, he was named Sathasivam. The father was a trader in Maskeliya. The mother and son left their village and lived with Ambalavanar's brother Sinniah in Thundi of Columbuthurai. Sinniah changed his religion and became a Catholic. He sent Sathasivam to a Catholic school. There Sathasivam was given the Christian name John. He completed his education at St. Patrick's College, Jaffna.

John was employed as a store-keeper in the Irrenamadu Irrigation Scheme at Kilinochchi. He bought books on Sanskrit, Christianity, Islam and Hinduism with the money he got as salary. He studied at night, while others were asleep. He also did yoga. At his own expense, he planted the office compound with useful trees. One of the mango trees he planted is called "Samiyar Mango". His religious feelings grew. He wanted to have a guru. One day when he was in Columbuthurai, his friends went to see a religious 'mad-man' Chellapah at Nallur.

When John went close to the mad-man, Chellapah roared at him "who are you?" (Ar - adda-nee). But John took it as "manthiram". When John went back to Kilinochchi, he thought deeply on that manthiram. On second trip to the mad-man, Chellapah shouted "search within you" (Therada-ulli). John meditated on this manthiram too. When he came to visit Chellapah for the third time he was told to "give up everything" (thee-r-adda-pattu). Thus, John gradually became Yogan. His boss Mr. Browne, the Engineer, told him that he was like a God - Man. So Yogan gave up his job, relations, friends and became a full time "seedan" of Chellapah Desikar. Chellapah was only pretending that he was mad, to keep people away from him. He was good at making fans, baskets etc. out of palmyrah leaf. People loved to buy them from him. He was also a good cook and fast walker. Yogan had a very hard time with him. Chellapah gave Yogan the best of Yoga training. One day he chased Yogan away. Yogan left the guru and walked barefooted aimlessly. He begged for his food, slept anywhere. He didn't have any extra clothing. He did not have money. His faith in his guru took him to Kathirgamam and along the sea coast to Colombo. In Colombo, he ate and slept with the road sweepers. From Colombo he walked to Matale.

Before he reached Matale, Chellapah appeared in a dream to a religious man. He told him to give Yogan

new clothes, slippers and put him in the train to Jaffna. Yoga-swami as soon as he reached Jaffna, went and fell at the feet of Chellapah guru. The guru ordered Yogan to meditate under a tree (veerai—virai—par). So Yogar chose an Ilupai tree and meditated under it. All thought he was mad, and threw stones at him. Chellapah very often visited him. (Swami Vivekanandar on his visit to Ceylon in 1897 happened to pass through Columbuthurai. He got down from his carriage and declared that the place is an oasis). At the time Yogar was just 25 and was one of those who drew the carriage of Vivekananda Swamigal. A religious old lady requested Yoga Swamigal to occupy an unused hut of her, near the Iluppai tree. Chellapah showered all his religious powers on Yoga Swamigal and mingled with God at the age of 55. He ordered his seedar not to do miracles (sithu), but to live as man with People and do "Sivathondu".

The Columbuthurai Ashram was frequented by rich and poor, low and high and various people. Siva Yoga Swami too visited people all over the country. No one could have missed the man with milk white lock of hair in a bun knot, flowing white beard along with white versty and showl. He always carried an umbrella (symbol of protection), when he went out to his devotees.

His "seedan" was Markandu Swami of Kaithady Ashram. Santha Swami of England (the son of Lord Soulbery, the last Governor of Ceylon) is spreading the teaching of his master in England. Subramaniya of Hawaii, is spreading his master's voice in U.S.A. The German Swami "Summa-Irru" Gowrybala, was also a devotee. Mr. A. Sellathurai has been a close follower and devotee of Siva-Yoga Swamigal for many years. He closely associated with Swamigal's latter part of life on this earth. He is at present in the Chengaladi Sivathondan Nilayam. He is keeping in motion Siva-Yoga Swamigal's Siva thondu.

Siva Yoga Swamigal during his life time did as his master ordered him. He did the following through his devotees:

(a) The "Sivathondan" monthly magazine (1935) has already seen it's Golden Jubilee.

(b) A "Siva Thondan Nilayam" was built at Vannarpannai (1954)near Jaffna Hindu College.

(c) Another "Siva Thondan Nilayam" was put up in (1964) at Chengalady in Batticaloa District.

(d) Singing of 'Sivapuranam' was encouraged in Saiva Schools, Ashrams temples etc.

(e) Siva Yoga Swamigal wanted 'Kandapurana-Padippu' con-ducted in all the Siva Temples, as from Communal Riots year (1958).

(f) "Patha Yaththirai" (Pilgrimage on Foot) was organised as from 1962 once an year.

Devotees from all over the country gathered together and observed "Yogam" in the Siva Thondan Nilayams and Ashrams.

(g) The devotees collected together 'Nat Chintanai' (Divine Thoughts) a book consisting of very simple and easily understood Tamil songs of the Sage (1959).

Siva Yoga Swamigal advised people to lead a simple life and perform Sivathondu. The children were specially told not to hurt the feelings of their mothers. He used to tell them, that as a tiny boy, he used to throw his foods to the birds. Then his mother would scold him and Say "you will beg for your food for life". When he became a sage, he used to say "I am the king of beggars". The Mother's words came to pass.

Throughout Swami's life he spread the Maha Vakkiam of his Guru:

"ஒரு பொல்லாப்புமில்லை
எப்பவோ முடிந்த காரியம்
நாமறியோம்
முழுவதும் உண்மை"

Siva Yoga Swamigal left the earthly body at 3:15 a.m. on March 24th 1964. It is from the Siva Thondan Publication, I gathered facts of Swamigal and wrote this up.

சீர்காழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கருக்கு மங்களம்

— சிவயோகசுவாமிகள் —

AnandaAlvar Ganesharam,
Year 12 A

The most Unforgettable Character I've met

No one has ever influenced my life more than late Mr. Subramaniam Ratnasabapathy who had been my teacher for the last one year. From him I have learnt that the greatest thing of all is doing service to others.

My first conversation with Mr. Ratnasabapathy took place on the 15th of May 1994. I have heard of him as a genius and an excellent teacher of Mathematics, and I went to his house to borrow any Maths books that may be useful to me. He was seated at his study table reading a book. He lived in the lane where I dwell, and I had seen him often going for a walk along the streets of Point Pedro, wearing baggy troussers and shirt, but I had never spoken to him before. He welcomed me with his usual smile, and inquired who I was and why I had come. I introduced myself to him. He was very happy indeed to meet me. He said that my great grandfather C. W. Chinnathamby had taught him at Hartley College. He told me that he was looking out for an oppor-

tunity to help any member of the Chinnathamby family and he said that he would be very delighted to teach me Mathematics. He said it was a privilege to show gratitude to his teacher whom he adored and respected.

From that day I started going to him to learn Mathematics. He started with Trigonometry first and he proceeded slowly. After studying Pure Mathematics for two or three months I asked him whether he would start Applied Mathematics, but his answer was "No". He would not start Applied Mathematics until he had finished a good portion in Pure Mathematics. It was really a treat studying under him. I did not merely study under him, but I enjoyed the subject I studied. He was a genius but he explained everything slowly and with patience. He bought C. R. books out of his own money and he sat up late at nights, copied out the questions for me, and I had to work out those problems as home sums. The sums that I couldn't do, he worked them out neatly on my note book.

He refused to accept fees or presents of any sort. "You impart what you study under me to others who need help. That's the reward you can give me" He used to say with a smile which had a radiance which lit up his entire face.

After each lesson he used to talk to me about his past. He had been a teacher at Ananda College, Colombo, St. Anne's College, Kurunagela, Central College, Nugawela, and Principal of Science, College, Matale Central College, Nelliyady, and Hartley College.

He was eighty one when I came to know him but his body was still erect, and he moved with a quick bobbing grace, and he said he slept for only two hours.

The rest of the night he read books or corrected exercise books, or copied Mathematical problems for us. In short his life was spent on Service, until the day he passed away. "We must do service, until our last breath" he used to tell me often.

He used to tell me proudly that those who study Mathematics under him are sure to get Distinction passes.

I saw him last five days before he left this world. While I was about to take my bicycle to go home he came with me "Don't worry I will teach you everything. Those who study under me always get very good results" Those were the last words he spoke to me.

Five days later early morning while I was still in bed, my mother woke me up and told me, the sad news of my teacher's death. I ran to his house and saw his body lying motionless and I stood beside him and wept. Words cannot tell how much I miss mydearest teacher.

I thank the Lord first for giving me the privilege to study under Mr. Ratnasabapathy, and I am very grateful to my dearest teacher for the willingness with which he taught me.

Wesley Thevarajah
Year 13 C

தானத்திற்கு கையும், தானைக்குத் தோளும்
கொடைவீரன் இராதேயன்

"குலத்தளவேயாகுமாம் குணம்" என்பது ஔவையின் அனுபவக்கூற்று. பட்டாங்கிலுள்ளபடி இட்டோர் பெரியோர் அல்லவா? குந்தி என்ற குலமாது கன்னியாயிருந்தபோது உதித்தவன் கன்னன். அவனே பாண்டவர்க்குப் பெரியண்ணன். கௌரவரால் கௌரவிக்கப்பட்ட கொடைவீரன். பாண்டவரை வெறுத்த கௌரவர் கர்ணனை தனது சிற்றன்னைமகன் எனத் தெரியாமலே, பின்னொருதடவை செஞ்சோற்றுக்கடன் தீர்க்கத் தன்னையே கொடுப்பான் என்று அறியாமலே ஆரிய குலபேதத்தின்படி தேரோட்டி மகனாகக் கணிக்கப்பட்டவனை உண்மையான குலத்தரசன் என்று புரியாமலே அங்கதேசத்துக்கு அதிபதியாக்கி இராஜகௌரவம் அளித்து உற்ற தோழராக விளங்கினர். காரணம் கர்ணனது ஆளுமைச்சிறப்பே! ஆற்றல், வீரம், கடமையுணர்வு, கொடைச்சிறப்பு அழகு உட்பட பல்வேறு ஆளுமை இயல்புகள் கௌரவரை ஈர்த்துவிட்டதென்றால் ஏனையோர் அவனியல்பை அறியாமலிருப்பாரா? மகாபாரதத்தின் மகாபாத்திரமாக கர்ணன் என்னும் அண்ணன் செஞ்சோற்றுக்கடன் தீர்க்க தம்பியருக்கு எதிராகப் போரிட்டான். கண்ணனது தந்திரத்தால் தாய் சென்று வேண்டியதற்கு இணங்க ஒருமுறைக்குமேல் நாகாஸ்திரத்தை ஏவாது விட்டதனால் வில்லுக்கு வீரன் கர்ணன் என்ற மரபு ஏற்படாது, வில்லுக்கு விஜயன் என்றமரபு நிலவுகின்றது. அன்றேல் அனைத்துச் சிறப்பும்மிக்க அண்ணனாகியிருப்பான். மகாபாரதத்தைப் போன்ற பழைய காவியமான இராமாயணத்திலும் செஞ்சோற்றுக்கடன் தீர்த்த தம்பியாக ஒரு கும்பகர்ணன் வருகின்றான். அக்காலத்தில் காவியம் படைத்தவரை கவர்ந்த தற்கொடைக் கர்ணன் ஒருவன் சோதரனாக வாழ்ந்திருக்கின்றான். அதனால் இரு காவியங்களிலும் கர்ணன் என்றும் கும்பகர்ணன் என்றும் ஒரு கர்ணன் தக்கஇடம் பிடித்துள்ளான். எனினும் கட்டுரைத்தலைப்பிற்கேற்ப மகாபாரதத்திலே வரும் கர்ணன் பற்றி ஆராய்வோம்.

தனக்குச்செய்த பணிவிடை காரணமாக குந்திமேல் நம்பிக்கைகொண்ட துர்வாச முனிவர் அவளுக்கு தேவர்களைக் கட்டுப்படுத்தும் திவ்ய மந்திரத்தை உபதேசித்தார். அம்மந்திரத்தை உச்சரித்தால் எந்தவொரு தேவதையையும் அழைத்து அத்தேவதையின் அம்சமான குழந்தையைப் பெற்றுக்கொள்ளலாம். எனவே அம்மந்திரங்களைப் பரீட்சித்துப்பார்க்கவேண்டாமெனவும் கூறியிருந்தார் துர்வாசமுனிவர். குந்தியோ அதைப் பரீட்சித்துப் பார்க்க விரும்பினாள். அம்மந்திரத்தை உச்சரித்தாள், அவள் விரும்பிய சூரியதேவன் தோன்றினான். "அவளுக்கு ஒரு குழந்தையைக் கொடுத்தான், அவள் மீண்டும் கன்னியாகும் வரத்தையும் கொடுத்துவிட்டு மறைந்தான்"

குந்தியோ கவச குண்டலங்களுடன், சங்கரனின் வாளுடன் ஓர் அழகான குழந்தையைப் பெற்றெடுத்தாள். ஊரவர் வசைகூறுவர் என்றஞ்சிய குந்தி வேறுவழியறியாது குழந்தையைப் பேழையில் வைத்து கங்கையில் விடுகின்றாள். அப்பேழையில் குழந்தையுடன் சேர்த்தனுப்பியவாள் கங்கையிலே மூழ்கியது. மூழ்கிய வாள் சமுத்திரராஜனது மகனான ஜலந்தராசுரனிடம் சேர்ந்தது. சிவனாலேயே தோற்கடிக்கப்படமுடியாத பலத்துடன் ஜலந்தராசுரன்

பின்னர் விளங்கியமைக்கு இந்தவாளும் ஒரு காரணமாகும்.

கங்கையிலே சென்றகுழந்தையை திருதராட்டினனது தேர்ப்பாகனும் அவனது மனைவி இராதையும் எடுத்து வளர்த்து தமது குழந்தையில்லாக் குறையைப் போக்கினர். இராதையால் வளர்க்கப் பட்டமையினால் கர்ணனுக்கு இராதேயன் என்ற பெயரும் உண்டாயிற்று. கர்ணன் என்ற பெயரோ கொடைச்சிறப்பால் கூறப் படுவதாகும். கண்டெடுத்த குழந்தையை நாமம் சூட்டுவதற்கென பெற்றோர் ஒரு முனிவரிடம் சென்றனர். குழந்தையை வருமாறு முனிவர் கைநீட்ட அவர் யாசிப்பதாக நினைத்த குழந்தை தனது தலையிலிருந்த முடியாபரணத்தைக் கழற்றிக் கொடுத்தான். அதனால் பெருங்கொடையாளி எனப் பொருள்பட பிள்ளைக்கு கர்ணன் எனப் பெயர் சூட்டப்பட்டது.

கர்ணனாகிய அக்குழந்தை தேர்ப்பாகன் வீட்டில் வளர்ந்தாலும் அரசகுலக்கலைகளான விற்போர், மற்போர், வாட்போர், யானையேற்றம், குதிரையேற்றம் முதலிய சகலவற்றிலும் சிறந்து விளங்கினான். அத்துடன்சிறந்த குணவியல்புகளைக்கொண்டும், இறைவன்கொடுத்த கவசத்துடனும் விளங்கினான். இத்தகைய கர்ணனை ஆதரித்து, தனது உயிரிலும்மேலாக மதித்து தனது சகோதரரும் பாராட்டத்தக்கவாறு நட்புறவு கொண்டான் துரியோதனன்.

இந்நேரத்தில் காட்டிற்குச்சென்ற குந்திதேவி பாண்டுவும், மாத்திரியும் இறந்துபோனதால் தான்பெற்ற குழந்தைகளான தருமன், வீமன், அருச்சுனன் என்போருடன் மாத்திரியின் குழந்தைகளான நகுலன், சகாதேவன் என்போருடனும் திருதராட்டினனது அரண்மனைக்கு வந்து சேர்ந்தாள். இக்குழந்தைகளோ தருமதேவதை, வாயுபகவான் இந்திரன், அக்கினிதேவர்கள் ஆகியோருக்குப்பிள்ளைகளாக அவதரித்தனர் என்பதைக் குறிப்பிடவேண்டும்.

குழந்தைகள் அரண்மனையில் வளர்ந்து வந்தனர். அவர்களுக்குக் கல்விகற்கும் பருவம் வந்ததும் கங்கையின் மைந்தன் பீஷ்மர் பெரியதந்தை என்ற முறையில் ஓர் ஆசானை நியமிக்க சித்தங்கொண்டார். கிருபாச்சாரியார் அவர்களது ஆசானாக நியமிக்கப்பட்டார். எனினும் அவரது போதனை திருப்திதருவதாக அமையாததால் துரோணரை ஆசானாக அழைத்தார் பீஷ்மர். அவர் மிகச்சிறப்பாக கல்வியை வழங்கினார். எனினும் குருகுலக்கல்வியில் மாணவர் நீர்கொண்டுவருதல்போன்ற பணிவிடைக்குச்செல்லும் வேளையில் சிலவித்தைகளை அருச்சுனனுக்கும், தனது மகனான அசுவத்தாமனுக்கும் துரோணர் கற்பித்து வந்தார். கர்ணனுக்கு இது தெரிந்தாலும் தன்குலம் காரணமாக அவன் இதனை வெளிப்படுத்தவில்லை.

ஒருநாள் குருவும் சீடரும் ஆற்றோரம் சென்றபோது துரோணர் ஆற்றினுள் இறங்கி ஸ்நானம் செய்தார். அப்போது சாபம்பெற்று முதலையாக இருந்த கந்தர்வனொருவன் அவர்காலைப் பற்றியிழுத்தான். முதலையிடமிருந்து விடுபட வல்லமையிருந்தும் துரோணர் தன்னைக் காப்பாற்றுமாறு மாணவர்களை, வேண்டினார். உடனே தன்வில்லை எடுத்து அம்பு பூட்டிய கர்ணனைப்பார்த்து 'அவன்சாதியைக்குறித்து இழிவுபடுத்தினான் பீமன், அதனால் கர்ணன் வில்லைக்கீழே போட்டான். உடனே அருச்சுனன் தன் அம்பை விட்டு முதலையைக் கொன்றான், சாபவிமோசனம்பெற்ற கந்தருவன் மேலுலகம் சென்றான். துரோணர் அருச்சுனனைப் பாராட்டி பிரமக்கணையை அவன் வீரத்திற்குப் பரிசாகக் கொடுத்தார்.

வீரக்கலைக்காக எழுந்த வேதமான தனுர் வேதத்தில் அருச்சுனன் தன்னைவிடச் சிறந்தவனாக இருப்பதைக்கண்ட கர்ணன் துரோணரிடம் சென்று தனக்கும் பிரம்மக்கணையை தருமாறும் சிலவித்தை

களைக் கற்பிக்குமாறும் கேட்டான். ஆனால் கர்ணன் குலம் கருதி துரோணர் மறுத்து விடுகின்றார். பின்னர் கர்ணன் துரியோதனனது யோசனைப்படி மாறுவேடம்பூண்டு அரசகுலத்து எதிரியான பரசுராமனிடம் சென்று தான் ஓர் அந்தணன் எனக்கூறிக் கல்வி கற்று வந்தான். பிரம்மக்கலையையும் கற்றான். இதையறிந்த கண்ணன் பரசுராமர் ஒருசமயம் கர்ணன் மடியில் தூங்கும்போது ஓர்வண்டாக உருவெடுத்து கர்ணனின் தொடையைத் துளைத்தான். எனினும் குருவின் நித்திரைக்கு ஊறாக அமையுமென்பதால் தனக்கு ஏற்பட்ட வலியைப் பொருட்படுத்தாது இருந்தான். தூக்கம் கலைந்து எழுந்த பரசுராமர் அவ்வளவு வலியையும் ஒரு சத்திரியனைத் தவிர அந்தணனால் பொறுக்கமுடியாது என்பதை உணர்ந்து தன்னை ஏமாற்றியவனுக்கு '' மரண காலத்தில் கற்ற வித்தையனைத்தையும் மறந்து போவாயாக '' என்று சாபமிட்டார். இதற்குமுன்பும் கர்ணன் விற்பயிற்சி செய்யும்போது ஓர் பசுவில் அம்புபட்டு இறக்க உரிமையாளனான பிராமணன் தக்கசமயத்தில் உனது தேர் நிலத்தில் புதையும் என்று சாபமிட்டான். இரு சாபங்களையும் பெற்ற கர்ணன் மனக்கவலையுடன் நாடு திரும்புகின்றான். இவ்விரு சாபகேடுகளையும் சுமக்க கர்ணன் உண்மையில் தவறு செய்தவன்தான் என்று ஆய்வாளர் கூறுவார்களா ?

இது இவ்வாறிருக்க அத்தினாபுரத்தில் மாணவர் கற்ற கல்விக்கு அரங்கேற்றம் செய்ய ஏற்பாடுகள் நடைபெற்றன. முதலில் வீமனும், துரியோதனனும் தமது கதாயுதங்களால் போரிட்டு சபையோரின் வரவேற்பைப் பெற்றனர். அருச்சுனன் எழுந்து தனது பாணங்களால் பலவித வித்தைகளைக் காட்டினான். உதாரணமாக சுழலும் சக்கரத்திலுள்ள பன்றியின் வாயில் பாணங்கள் தொடுத்தல். அம்புக்கோட்டை கட்டுதல், விம்பத்தைப்பார்த்து உண்மைப் பொருளின்மீது அம்புவிடுதல் போன்ற விநோதங்களைச் செய்து காட்டினான். மக்கள் மகிழ்ச்சியினால் ஆரவாரம் செய்து அருச்சுனனை வாழ்த்தினர். இதனால் கர்வம் அடைந்த அருச்சுனன் தன்னுடன் போரிடத்துணிந்தவன் யாராவது சபையில் இருந்தால் எழுந்து வரலாம் எனக்கூறினான். அவையிலிருந்து '' நான் வருகிறேன் '' என்றொரு கம்பீரக்குரல் கேட்டது. அக்குரலுக்குரியவன் கர்ணன். தான் பரசுராமனின் மாணவன் எனத்தன்னை அறிமுகப் படுத்திய கர்ணனைப் பார்த்து அருச்சுனனும், கிருபாச்சாரியாரும் கர்ணன் தேரோட்டியின் மகனாயிருப்பதால் அவ்வாறு போட்டியிட முடியாது என்றனர். அப்போது துரியோதனன் எழுந்து அரசர் மட்டுமே போட்டியில் ஈடுபட முடியுமென்றால் யான் இப்போதே கர்ணனை அங்கதேசத்துக்கு அதிபதியாக்குகிறேன் என்றுகூறி கர்ணனுக்கு கிரீடம் அணிந்து கௌரவித்தான். கர்ணன் அரசதகுதி பெற்றமையால் வித்தையைக்காட்ட அனுமதிக்கப்பட்டான். அவனது வித்தைகளோ அருச்சுனன் செய்தவற்றைவிட பன்மடங்கு திறமைவாய்ந்தவையாக இருந்தன. இதனால் இறுதிக்கட்டத்திலே அருச்சுனனுக்ும் கர்ணனுக்கும் போட்டிமுற்றி யுத்த நிலை தோன்றியபோது சபையோர் தலையிட்டு இருவரையும் அகன்றுசெல்ல வைத்தனர்.

இதுமட்டுமன்று கர்ணன் சிறந்த கொடையாளி. இல்லையென்னாத ஈகையாளி. இட்டோன் பெரியோன், நலத்தின் கண் நீர்மை உடையவன். ஈரநெஞ்சினன், கண்ணோட்டமே அவனுக்கு ஒரு கொடை. இவ்வாறு தானவீரனாக கர்ணன் அழைக்கப்பட்ட காலத்தில் ஒருநாள் கண்ணனும், அருச்சுனனும் பேசிக்கொண்டிருக்கின்றனர். அருச்சுனன் கண்ணனைப்பார்த்து கர்ணன் மட்டுமா கொடையாளி ? என்னாலும் முடியுந்தானே என்றான். கண்ணன் அதற்குப் பதில்கூறாது, ஒருதங்கமாலையையும், ஒருவெள்ளிமாலையையும் காட்டி அவற்றை

அன்றைய மாலைப்பொழுதுக்குள் தருமம் செய்து விடுமாறு கூறினான். அருச்சுன னால் எவ்வளவு முயன்றும் முடியவில்லை. அப்போது கண்ணன் கர்ணனைநோக்கி இவ்விருமாலைகளையும் இன்று மாலைக்குள் தானம் செய்துவிடுமாறு கூறினான். உடனே கர்ணன் அருகே சென்றுகொண்டிருந்த வழிப்போக்கர்களை அழைத்து அவ்விரு மாலைகளையும் ஆளுக்கொன்றாகத் தானஞ் செய்தான். வழிப்போக்கர்கள் கர்ணனைப் புகழ்ந்துகொண்டு சென்றனர். அருச்சுனன் வெட்கித் தலைகுனிந்தான். எவ்வாறெனி னும் குந்தியின் மைந்தர்கள் வெவ்வேறு விதமாகப் புகழ்பெற்றனர்.

அந்நேரத்தில் துருபதன் என்ற பாஞ் சால அரசன் தன் மகளான பாஞ்சாலிக்கு சுயம்வரம் நடாத்த ஏற்பாடு செய்தான். சுயம்வரத்திற்கு வரும் மன்னர்கள் அங்கு நடைபெறும் ஒருபோட்டியில் பங்குபற்ற வேண்டும். அப்போட்டியில் யார்வெற்றி பெறுகின்றார்களோ அவனே பாஞ்சாலிக்கு கணவனாகும் தகுதி பெற்றவன் ஆவான், என்று கூறப்பட்டது. போட்டியில் கீழே உள்ள ஒரு வில்லை எடுத்து நாணேற்றி நீரில் விழும் விம்பத்தைப்பார்த்து மேலே சுழலும் மீனை விழுத்தவேண்டும். பலரால் வில்லைத்தூக்கவே முடியவில்லை. ஈற்றில் கர்ணன் எழுந்துபோய் வில்லை எடுத்து அம்பைத் தொடுக்கும்போது அருகிலிருந்த பாஞ்சாலி "தேரோட்டி மகனுக்கு நான் மாலையிடேன்" என்கிறாள். கோபத்துடன் வானத்தை நோக்கி நிமிர்ந்த கர்ணன் சூரியனைக் கண்டவுடன் வில்லைக் கீழே வீசிவிட்டு இருக்கையில் அமர்கின்றான். அதன் பின் அருச்சுனன் போட்டியில் வென்று பாஞ்சாலியை மாலை சூட்டி தங்களுடன் அழைத்துச்சென்றான். தேரோட்டிமகன் என்ற பெயரைப் பெற்றிருந்ததால் கர்ணன் தன்வாழ்க்கை யில் பலநற்சந்தர்ப்பங்களை இழக்க நேரிட்ட துடன் அவனது ஆற்றலும் அவமதிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டது. எனினும் அவன் அதிக ஆற்றலுள்ளவனாக விளங்கினான் என்பதை நாம் அறியமுடியாமலில்லை.

இந்நேரத்தில் சகுனியின் சூழ்ச்சியால் தருமனை துரியோதனன் சூதாட அழைத் தான். சூதாட்டத்தில் நாட்டமற்ற தருமன் அதற்கு மறுத்தால் தனக்கு அவமரியாதை என்றுகூறி சூதாடச் சம்மதித்தான். பலர் அறிவுரை கூறியும் தருமன் அதைக் கேட் கவில்லை. சூதாடிய தருமன் தன்நாடு, நகரம், சொத்து அனைத்தையும் இழந்து பின் சகோதரரையும் மனைவியையும் பணயம் வைத்து அதிலும் தோற்றதால் அவர்களையும் இழந்தான். சபையில் பல பல சபதங்கள் பாண்டவரால் செய்யப்பட்டன. அவற்றில் அருச்சுனன் கர்ணனைக் கொல்வ தாக சபதமெடுத்தான். கர்ணன் அச்சபதத் தைக் கேட்டும் சலனமற்றிருந்தான். பின் னர் பாண்டவர் 13 வருடம் வனவாசமும் ஒரு வருடம் அஞ்ஞாதவாசமும் செய்தனர். காலம் முடிந்ததும் நிலங்கேட்டு சஞ்சயன், கண்ணன் போன்றோர் தூதுசென்றனர். தூதுகள் தோற்றன. போருக்கான ஆயத் தங்கள் நடைபெற்றன.

கௌரவர்கள் பக்கத்தில் பீஷ்மர், துரோணர் என்போருடன் ஒப்புயர்வற்ற வீரனான கர்ணன் வல்லமையுடன் இருக்கும் வரையில் பாண்டவர்கள் போரிலே வெற்றி யடைவது எளிதான காரியமல்ல என்று ணர்ந்த கண்ணன், கர்ணனது வல்லமையைக் குறைக்க முடிவுசெய்தான். அதன்படி அருச்சுனனின் தெய்வத்தந்தையான இந் திரனைக் கர்ணனிடம் அனுப்பி கர்ணன் பிறக்கும் போது உடம்போடு ஒட்டிப் பிறந்த கவச குண்டலங்களைத் தானமாகப் பெறச் செய்தான். ஆயின் அதற்குப் பதி லாக சூரியனது கட்டளைப்படி இந்திரனிட மிருந்து ஒரேயொருமுறை பாவிக்கத்தக்க சக்தியாயுதத்தை கர்ணன் பெற்றுக்கொண் டான். பின்னர் குந்திதேவியைக் கர்ணனி டம் அனுப்பி கர்ணனது பிறப்பை உணர்த்தி, அருச்சுனனைத்தவிர வேறு ஒரு பாண்டவரையும் கர்ணன் கொல்லக் கூடா

தென்றும், அப்போரிலும் நாகாஸ்திரத்தை ஒரேயொரு தடவைமட்டும் உபயோகிக்க வேண்டும் என்றும் மறுதடவை ஏவக்கூடா தென்றும் வாக்குப் பெற்றுக் கொள்கிறான்.

யுத்தத்துக்கான ஏற்பாடுகள் நிறைவேறினும் கௌரவர் பக்கத்தில் படைத் தளபதி யார் என்பது தொடர்பாக பீஷ்மருக்கும் கர்ணனுக்கும் முரண்பாடு எழுந்தது. அக்கருத்து முரண்பாட்டில், பீஷ்மர் போரில் வீழும்வரை ஆயுதம் எடுப்பதில்லை என கர்ணன் சூளுரைக்கிறான். அதன்படி பத்தாம் நாளில் பீஷ்மர் வீழ்ந்தபின்னரே கர்ணன் களம்புகுந்தான். பதினோராம் நாள் துரோணர் தலைமையிலும் கர்ணனது பாதுகாப்பிலும் கௌரவர் படை பாண்டவர் படையை பலவழியிலும் அழித்தனர். பதினான்காம் நாள் கர்ணன் பீமனுடன் தவிர்க்க முடியாமல் யுத்தஞ் செய்ய வேண்டிய நிலை உருவானது. பீமன் கர்ணனின் குலத்தை இழிவாகக் கூறிப் பழித்தமையால், கர்ணன் கோபங்கொண்டு போர் செய்தான். அந்த யுத்தத்தில் பீமன் தேரிழந்து, ஆயுதமிழந்து, கதாயுதத்துடன் காயங்களிலிருந்து குருதிபாய நிலத்தில் வீழ்ந்தான். அப்போது, குந்திதேவிக்கு தான் கொடுத்த வாக்கினை மறக்காத கர்ணன் பீமனைக் கொல்லாது அப்பால் செல்கின்றான்.

பதினாறாம் நாள் பகல் யுத்தம் போதாதென்று இரவும் யுத்தம் நடாத்தப்பட்டது. இரவு யுத்தம் பீமனின் மகனான கடோற்கஜனுக்கும் அவனது மாய அரக்கர் கூட்டத்துக்கும் வாய்ப்பாகப் போய்விட்டது. அவர்கள் மேகத்துள் மறைந்து நின்று அம்புகளை எண்ணிலாது வீச ஆரம்பித்தனர். அதனால் கௌரவர் படை சிதறிக் கொண்டது. மட்டுமன்றி வியூக அமைப்பை மறைக்க முற்பட்டன. கர்ணன் எவ்வளவு கூறியும் தன் படைகள் பின் வாங்குவதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. துரியோதனனும் கடோற்கஜனைக் கொன்றாலன்றி நம்படையைக் காப்பாற்ற முடியாது என்று கூறுகிறான். வேறுவழியின்றி கர்ணன் அர்ச்சுனனுக்கென்றே அவ்வளவு காலமும் பூஜித்துவந்த இந்திரன் கொடுத்த சக்தி ஆயுதத்தை வீசி விடுகிறான். அந்த காரத்திலிருந்து கடோற்கஜனது உடல் கீழே விழுந்தது. இதைப் பயன்படுத்தி வானத்தை நோக்கி கர்ணன் அம்புகளை நிரைநிரையாக அம்பு பொழிவது போல செலுத்தியபோது அரக்கபடையில் பெரும்பகுதி அழிய மீதியினர் தப்பி ஓடிவிட்டனர், அன்று இரவு யுத்தத்தில் காலன் பெரும்விருந்தளிக்கப்பட்டான். துரோணர் யமனைப் போலச் செயற்பட்டார். எதிர்ப்பட்டோர் அனைவரையும் வீழ்த்தினார். அருச்சுனன் எதிர்த்த போதும் சிறிதும் சளைக்காது ஓரம்பினை எய்து அருச்சுனனது வில்லான காண்டீபத்தை முறித்தார். அதே வேளையில் பல அம்புகளால் அருச்சுனனையும் கண்ணனையும் பிடித்தார். தடுக்கலந்த திட்டத்துய்மன் ஆயுதமற்ற நிலையில் சத்தியகியின் தேரில் ஓடிப்போனான். எவராலும் வெல்லமுடியாத பீமன் தனது திவ்ய ஆயுதமான கதாயுதத்தை தூக்கிய மறுகணமே அவ்வாயுதம் துரோணர் எய்திய பல்லம் என்ற ஒருவகை ஆயுதத்தினால் துண்டிக்கப்பட்டது. அன்று துரோணரைக் கொன்றாலன்றி வேறு எதுவும் செய்ய முடியாது என்றெண்ணிய கண்ணன் தருமன் மூலம் அசுவத்தாமன் இறந்ததாக உரைப்பித்தான். துரோணர் சோருவார் என்று கண்ணன் அறிவான். தனக்கேற்பட்ட சோகத்தால் யோகத்திலமர்ந்திருந்த துரோணரை இலகுவாகக் கொல்லுவித்தான். பாண்டவரின் வைரமான எதிரிகளில் பலமுள்ள ஒருவரான துரோணரது மறைவு பாண்டவருக்கு ஒருவகைப்பலமாக மாறியது.

பதினேழாம் நாள் யுத்தத்தில் கர்ணன் தளபதியாக்கப்பட்டான். சல்லியன் இயக்கிய திவ்வியமான தேரில் வந்த கர்ணனது தேஜசு அவனது தந்தையான சூரியனைப் போலப் பிரகாசித்தது என்கின்றனர்

புராணம் ஓதும் பௌராணிகர். அன்று மாலையாகும் வரை கர்ணன் யுத்தகளம் முழுவதும் உலாவி யுத்தம் செய்வதுடன் தன்படைகளுக்கும் உற்சாகமூட்டியபடியே யிருந்தான். இதனால் ஊக்கமளிக்கப்பட்ட கௌரவ படைகள், எதிர்ப்படைகளான பாண்டவர் படைகளை மூர்க்கமாகத் தாக்கத் தொடங்கின. இதனைக்கண்ட கண்ணன் கர்ணனது தேரின் முன் அருச்சுனன் தேரைக்கொண்டுவந்து நிறுத்தினான். போர் மூண்டது. நீண்டநேரம் ஆயுதப் பிரயோகம் நடைபெற்றது. அத்துடன் பல இடங்களிலும் இருவரது தேர்களும் சஞ்சரித்தன. அப்போது நாகஸ்திரத்தை அருச்சுனன் மீது ஏவுமாறு சல்லியன் கர்ணனிடம் கூறினான். அதன்படி கர்ணனும் நாகாஸ்திரத்தை அருச்சுனன் மீது ஏவினான். அந்நேரத்தில் தனதுதேரை கண்ணன் கீழ்நோக்கி அமர்த்தினான். அதனால் நாகபாணம் தனஞ்செயன் என்றழைக்கப்படும் அருச்சுனனது கிரீடத்தை தூக்கிச் சென்றது. மீண்டும் யுத்தம் தொடங்கியது. குந்திக்கு வாக்களித்த படி கர்ணன் இரண்டாம் முறை அருச்சுனன் மீது நாகபாசத்தை விசாததால் கோபமுற்ற சல்லியன் தேரைவிட்டுச் சென்றான். முன்னொருகால் அந்தணரிட்ட சாபத்தால் கர்ணனது தேரும் நிலத்துள் புதையுண்டு விட்டது. வேறுவழியின்றி நின்ற நிலையிலேயே யுத்தத்தைத் தொடர்ந்தான் கர்ணன். ஓர் அம்பினால் அருச்சுனனைத் தாக்கினான். அருச்சுனன் தாக்கப்பட்டதனால் வேதனையுற்றான். வேதனையால் அருச்சுனன் சிறிது அசைய கர்ணன் உடனே தேரிலிருந்து நிலத்தை நோக்கிக் குதித்து தேரைத் தூக்க முயன்றான். ஆயினும் அதனைத் தூக்க முடியவில்லை. இதைப் பயன்படுத்திய அருச்சுனன் கர்ணனது உடலை நோக்கி பல அம்புகளைச் செலுத்தியும் கர்ணனது உயிர்பிரியவில்லை. கர்ணன் செய்துவந்த தர்மம் கர்ணனது உயிரைக்காக்கின்றது என்றுணர்ந்த கண்ணன் வேதியன் வடிவில் சென்று கர்ணனைப் பார்த்து, ''நீ இப்போது செய்யப் போகும் தானத்தையும் சேர்த்து உனது தானபலன்கள் அனைத்தையும் தா'' என்று கேட்டான். கர்ணனும் அப்படியே கொடுத்தான். உடனே அருச்சுனன் தனது அம்பினால் கர்ணனது தலையை வெட்டினான். இம்மானமற்ற செயலை அருச்சுனன் தானே செய்யாது ''பிரபுவின் வார்த்தை கொண்டு இராதேயின் தலையை அர்ச்சுனன் ஓர் அம்பினால் கொய்தான் என'' கண்ணனது செயலாக மகாபாரதத்தை எழுதிய வியாசர் கூறுகின்றார்.

கர்ணன் இறந்தவுடன் தாயான குந்திதேவி கர்ணனது தலையைத் தன் மடியில் வைத்து அழுகின்றாள். அதன் மூலம் எல்லோரும் உண்மையை உணருகின்றனர். கர்ணனால் அருச்சுனனைத் தவிர்ந்துள்ள ஏனைய பாண்டவர் நால்வரையும் கொல்ல எத்தனிக்காத காரணத்தைக் குந்தி கூறி அறிகின்றனர் எல்லோரும். அருச்சுனன் தன்னால் அண்ணன் கொல்லப்பட்டான் என்றெண்ணி வருந்தப்பட்டான். அப்போது கண்ணன் அருச்சுனனைப் பார்த்து நகைக்கின்றான். பின்னர் கர்ணனது மரணத்துக்கான ஏழு காரணங்களையும் விளக்குகிறான். கவச குண்டலங்களை இழந்தமை. அந்தணர் சாபம், பரசுராமர் சாபம், போன்றவையும் குந்தியின் வேண்டுதலும் என அவை பலவாகக் கூறப்படுகின்றன. அக்காரணங்களே கர்ணன் இறப்பதற்குக் காரணமாயினவென்றும் அருச்சுனனது செயல் அல்ல என்றும் கூறி விளக்கினார்.

எதிரிகள் உட்பட அனைவரையும் துயரத்தில் ஆழ்த்திவிட்டு கர்ணன் மேலுலகம் சென்றான். அவன் இறந்ததும் யோதிவடிவினதான அவனது ஜீவன் தந்தையான சூரியனுடன் கலந்தது என்கின்றார், தமிழ்ப் பாரதம் பாடிய வில்லிபுத்தூர் ஆழ்வார்.

குந்தியின் மடியில் தவழவேண்டியவன் தேரோட்டி மகனாக வாழ்ந்தமை, கண்ண

னது சூழ்ச்சிகள், அந்தணனது சாபம், பரசுராமரது சாபம் போன்ற காரணங்களால் கர்ணனது முழுச்சிறப்பும் மழுங்கும் சந்தர்ப்பங்கள் உருவாகின. அவன் வல்லமையை தடுக்கவும் உயிர்துறக்கவும் வித்திட்டன. கொடையும் வீரமும் தன்பிறப்பாகக்கொண்ட கர்ணன் கௌரவரது பக்கம் சார்ந்திருந்ததால் அவனிருக்கும் கட்டமே பலரை உருக்கியது. அப்பன் அருமை அப்பன் மாண்டாலன்றோ புரியும். கர்ணனது சிறப்பியல்புகளை உணரும் அப்பாத்திரத்துக்கு நடந்த முடிவுக்காக இரக்கப் படாதிருக்க முடியாது.

தானத்திற்கு கையும், தானைக்குத் தோளும் தந்து தன்னையே தாரைவார்த்த தானவீரனது தார்மீகவாழ்வு தரணியுள்ள வரை துதி செய்யப்பட வேண்டியதே. கைகொடுத்த தெய்வமாம் கர்ணன் கதியிழந்தநிலை வேறுயாருக்கும் ஏற்படக் கூடாது.

இ. ஜெனா
ஆண்டு 10 டி

கல்வி நிறுவனங்கள் மாணவரிடையே ஒருங்கிணைவு, ஒழுக்கம், தன்னம்பிக்கை முதலியவற்றை வளர்த்தலைத் தமக்குரிய முதன்மை நோக்கமாகக் கொள்ளல் வேண்டும். அறிவை வளர்த்தல் இரண்டாம் பட்சமானது. கல்விப்பணியை வளர்த்தல் வேண்டும். வாழ்க்கையின் அனைத்து வெற்றிகளுக்கும் அதுவே தோன்றத் துணையாகும்.

Swami Chitrupananda, an Old boy



Donating books to the Principal for the School Library

Ramakrishna's Parable

Count not the leaves, eat mangoes.

Today we are living in a very complex world. Many do not have peace of mind. Ramakrishna an illiterate man by his simple stories help all to have peace of mind and be happy.

Two friends went into a mango grove. One of them possessing much worldly wisdom, immediately began to count the number of trees there and the number of leaves and mangoes each tree bore, to estimate the value of the whole grove. His companion however went to the owner and made friendship with him. He plucked a mango and ate it with relish. Whom do you consider to be wiser of the two? The man who ate the mango is a wise man. Similarly when we are in the world we must get to know the creator and enjoy His creation. It is vain to spend our life time in wiseless venture. The wise man is happy and his association makes others too happy.

Swami Chitrupananda
Sri Ramakrishna Sarada Sevashrama
POINT PEDRO

A Distinguished alumnus wins the

AUSTRALIA DAY AWARD

Emeritus Professor ***C. J. ELIEZER*** a distinguished Old boy of Hartley was the Professor in Applied Mathematics in the University of Latrobe, Australia.

He was awarded the prestigeous 'The order of Australia' award for his valuable services to Tamil Community in Australia.

He is one of the Founder members of Hartley College Past pupils' Association (Victoria Branch) in Australia.

Our heartiest Congratulations!

HARTLEY

IS

150 YEARS 'YOUNG'

FIAT LUX

1838 — 1988

Ter Jubilee Supplement

ஹாட்லியின்
150-ம் ஆண்டு நினைவு விழாக்கள்

ஹாட்லிக்கல்லூரி வண. கலாநிதி பீட்டர் பேர்சிவல் என்ற ஆங்கிலேயரால் 1838 இல் ஸ்தாபிக்கப்பட்டது. வண. பேர்சிவல் அவர்கள் மதுரைப்பல்கலைக்கழகத்தில் தமிழ் மற்றும் கீழைத்தேச கல்வி முறைகளுக்கான பேராசிரியராகத் திகழ்ந்த ஒரு சிறந்த கல்விமான். கிறிஸ்தவ சமயப் பணிக்காக இலங்கைக்கு வந்த பேர்சிவல் அடிகளார் யாழ்ப்பாண குடாநாட்டில் ஹாட்லிக்கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி ஆகிய கல்லூரிகளை ஸ்தாபித்து யாழ்ப்பாணத்தின் ஆங்கிலக் கல்விப் பாரம்பரியத்திற்கு முன்னோடியாக அமைந்தவர்களில் முக்கியமான ஒருவராக விளங்குகிறார்.

வண. பேர்சிவல் அவர்கள் 1838 இல் பருத்தித்துறையில் கடற்கரைக்கு அண்டிய பகுதியொன்றைத் தெரிந்தெடுத்து தனது சொந்தப்பணத்தில் 400 பவுண் செலவழித்து நிலத்துண்டொன்றை வாங்கி ஓர் ஆங்கிலக் கல்லூரியை ஸ்தாபித்தார். இக் கல்லூரி ஸ்தாபிக்கப்படுகின்ற போது, உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமுள்ள எத்தனையோ தேவாலயங்களில் மணி ஒலிக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. இவ்வாறு ஒரு கல்விமானினால்; ஒரு கிறிஸ்தவப் பாதிரியாரால்; சேவைக்கே தன்னை அர்ப்பணித்த ஒரு பெரியாரால் ஆசீர்வதிக்கப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட இக் கல்லூரிக்கு வெஸ்லியன் மிஷன் மத்தியபாடசாலை எனப் பெயர் சூட்டப்பட்டது.

ஏறக்குறைய 50 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் வெஸ்லியன் மிஷன் மத்திய பாடசாலை அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்களின் முயற்சியினால் படிப்படியாக வளர்ச்சி கண்டது. கல்லூரியின் தர உயர்விற்கு தேவையான நிதியினை மெதடிஸ்த மிஷன், வெளிநாட்டு மிஷன்களின் செயலாளர் வண எவ். மார்ஷல் ஹாட்லி அவர்கள் பெற்றுக்கொடுத்ததோடு ஆய்வுகூடம் ஒன்றிற்கான அடிக்கல்லையும் நாட்டினார். கல்லூரியின் தரத்தினை உயர்த்திய வண. F. மார்ஷல் ஹாட்லியின் பெயர் கல்லூரிக்கு இடப்பட்டு 1916 ல் இருந்து ஹாட்லிக்கல்லூரி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

எத்தனையோ இன்னல்கள் இடையூறுகள் மத்தியிலும் கல்லூரி தனது சேவையை செவ்வனே ஆற்றிக்கொண்டு வருகிறது. ஹாட்லிக்கல்லூரி வெறும் கல்லினாலும் மண்ணினாலும் கட்டப்பட்டதொன்றல்ல. அது 1838 ம் ஆண்டிலிருந்து 150 வருடங்களிற்கு மேலாக அர்ப்பணிப்புடன்சேவையாற்றும் பெரியார்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் ஆகியோரினால்ஒவ்வொன்றாகத் தெரிந்து பொறுக்கி எடுக்கப்பட்ட பாரம்பரியத்தினால் கட்டியெழுப்பப்பட்ட ஒரு நிறுவனமாகும் தனக்கென ஒரு நீண்ட கல்வி ஒழுக்க பாரம்பரியத்தை ஏற்படுத்திக் கொண்ட கல்லூரி இதுவாகும்.

இத்தகைய கல்லூரியின் 150 வருட நிறைவு உலகெங்கும் இருக்கும் பழைய மாணவர்களினால் மிகவும் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

கொழும்பு பழைய மாணவர் சங்கம் 150 வருட நிறைவை மிகவும் சிறப்பாகக் கொண்டாடியது. கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் பொன்விழாவும் ஹாட்லிக் கல்லூரியின் 150 வருட நிறைவும் ஒருங்கே அமைந்தவை கொழும்பு சங்கத்திற்கு பெரு மகிழ்ச்சியையும் புது உத்வேகத்தையும் கொடுத்தது.

கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் பெரு முயற்சியினால் இலங்கையின் கல்வி வரலாற்றிலே தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துக் கொண்டுள்ள ஹாட்லிக் கல்லூரியின் பெருமைக்கு மெருகூட்ட தபால் இலாகாவின் முத்திரைப்பகுதி 75 சத முத்திரை ஒன்றை (அப்போது உள்நாட்டு தபால் கட்டண முத்திரை) யும் முதல் நாள் தபால் உறையொன்றையும் துண்டுப் பிரசுரமொன்றையும் ஹாட்லியின் நினைவாக வெளியிட்டது. இம் முத்திரை வெளியீட்டு நிகழ்வு ரூபவாகினி தொலைக் காட்சி சேவையிலும் இடம்பெற்றிருந்தது.

கொழும்பு பழைய மாணவர் சங்கம் கல்லூரியின் இலச்சினை பொறிக்கப்பட்ட சுவர்க்கடிகாரங்களை ஞாபகப்பொருளாக பழைய மாணவர்களுக்கு குறைந்த விலையில் வழங்கியது.

கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் முக்கிய நிகழ்வாக இராப்போசன விருந்துடன் கூடிய கூட்டம் 1989 யூன் 11ம் திகதி தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இடம் பெற்றது. இக்கூட்டத்திற்கு கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் அமரர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள் தலைமை வகித்தார். பிரதம விருந்தினராக மேல் நீதிமன்ற கௌரவ நீதியரசர் H. D. தம்பையா அவர்கள் வருகை தந்திருந்தார். இக்கூட்டத்தில் முன்னாள் அதிபர் திரு. க. பூரணம்பிள்ளை பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ K. B. இரத்தினாயக்கா மற்றும் கல்லூரியின் அதிபர் திரு. பொ. பாலசிங்கம் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினார்கள். அவர்களின் உரையின் சாராம்சம் பிறிதொரு இடத்தில் தரப்படுகிறது.

கல்லூரிச் சூழலில் போர்ச் சூழ்நிலை நிலவியதாலும் ஹாட்லிக் கல்லூரி 1985 ம் ஆண்டில் இருந்து இடம் பெயர்ந்து புற்றளை மகாவித்தியாலயத்தில் இயங்கி வந்ததனாலும் 150 வது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள் 1989 ம் ஆண்டு கல்லூரியில் மிகவும் எளிமையாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரியின் நினைவு முத்திரை வெளியிடப்பட்ட தினமாகிய 1989 யூன் 5ம் திகதி கல்லூரி வளாகத்தினுள் ஒருகூட்டம் பிரதி அதிபர் திரு. வி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது. ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் பாடசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர்கள் எனப் பலர் இக் கூட்டத்தில் பங்கு பற்றினர்.

1990 ம் ஆண்டு ஹாட்லிக் கல்லூரி மீண்டும் தனது சொந்த இடத்திற்கு திரும்பிய பின்னர், 150 ம் ஆண்டு நிறைவு விழா மிகவும் சிறப்பாக பழைய மாணவர் சங்கத்தினால் (தாய்ச் சங்கம்) கொண்டாடப்பட்டது. இப் பெருவிழா 8. 02. 1990 அன்று தேவாலய மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. R. உருத்திரா Advocate தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக முன்னைய அதிபர்களில் ஒருவரும் நவீன ஹாட்லியின் சிற்பியுமான திரு. க. பூரணம்பிள்ளையவர்கள் வருகை தந்திருந்தார்கள். பிரதம விருந்னரின் உரையில் ஹாட்லியின் பெருமை துலங்கிற்று. கல்வியோடு ஒழுங்கு, கட்டுப்பாடு, நேரம் தவறாமை, ஒழுக்க நீர்மை, விளையாட்டு வீரனின் பண்புகள் Sportsmenship என இன்னோரன்ன விடயங்கள் ஹாட்லியின் பாரம்பரியமாக மிளிர்கின்றன எனக்குறிப்பிட்ட பிரதம விருந்தினர் இதற்கு ஒரு உதாரணத்தை எடுத்துக்காட்டினார். பரியோவான், கல்லூரி ஹாட்லிக் கிடையிலான பரபரப்பான கிரிகட் ஆட்டம் 1964ம் ஆண்டு நடக்கிறது தற்போது யாழ் பல்கலைக் கழகத்தில் முகாமைத்துவத்துறைத் தலைவரான திரு. மா. நடராஜசுந்தரம் அவர்கள் ஹாட்லியின் அணியின் தலைவராக துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கிறார்: இவரை அவுட் ஆக்க பெரும் பாடுபடுகின்ற எதிரணியினர் அவர் அவுட்டா என ஒரு போலி appeal ஐ விடுகிறார்கள். நடுவரும் உடனே தவறுதலாக அவுட் என தீர்ப்பு வழங்க திரு. நடராஜசுந்தரம் ஒரு சிறு கணமும் தாமதியாது வெளியேறுகிறார். எதிரணியின் தலைவர் அவர் அவுட் இல்லை என்பதை நடுவருக்குச் சொல்லி மீண்டும் அவரை அழைத்து துடுப்பெடுத்தாட வைத்தனர். அந்த ஆட்டத்தில் திரு. நடராஜசுந்தரம் 100 ஓட்

டங்களை அடித்தார். இதுதான் Sportsmanship விளையாட்டு வீரனுக்குரிய பண்பினை விளக்க நல்ல உதாரணம் என விதந்துரைத்தார் திரு. பூரணம்பிள்ளை யவர்கள்.

மேலும்எரிந்த சாம்பலில் இருந்து புத்துயிர் பெறும் (Phonex) பீனிக்ஸ் என்ற பறவை போன்று ஹாட்லியும் சாம்பல், சிதைவுகளில் இருந்து புத்துயிர் பெற்று வளர்ந்து ஓங்கி நிற்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

சிறப்புரைகளைத் தொடர்ந்து பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் மாணவருக்கான பரிசளிப்பும், அதனைத் தொடர்ந்து கலாச்சார நிகழ்வும் இடம் பெற்றன. கலாச்சார நிகழ்வில் மாணவர்களின் பாடல், நாட்டிய நிகழ்வு என்பனவும் "The last Warning" என்ற தலைப்பில் இயற்கை பாதுகாக்கப்படவேண்டும் என்ற கருவில் அமைந்த ஆங்கில நாடகமும், "ஆச்சி கட்ட வடை" என்றசிறுவர் நாடகமும் கல்லூரிமாணவரின் பரத நாட்டியமும் கர்னாடக இசையும் இடம்பெற்றன. மறுதினம் பழைய மாணர்வகளுக்கும் கல்லூரி மாணவர்களுக்குமிடையில் கிரிக்கட் போட்டியொன்றும் மதிய போசன விருந்தொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. நாட்டின் பல்வேறு பாகங்களில் இருந்தும் பழைய மாணவர்கள் வந்து கூடி விழாவினைச் சிறப்பித்தார்கள். கொழும்பு பழைய மாணவர் சங்கமும் தவறாது தமது பிரதிநிதிகளை அனுப்பியிருந்தார்கள்.

கல்லூரியின் 150 வது ஆண்டு நிறைவு சம்பந்தமான பல்வேறு கட்டுரைகளை பத்திரிகைகள் சஞ்சிகைகள் தாங்கி வந்தன. Sun என்ற ஆங்கில பத்திரிகையில் யூன் 5 1989 லும், The Island பத்திரிகையில் யூன் 24 1989 லும் 'சஞ்சீவி' என்ற பத்திரிகையில் 17. 6. 89 லும் கல்லூரி சம்மந்தமான கட்டுரைகள் வெளியாகின. அவ்வாறாக 'ஜீவசக்தி' என்னும் சஞ்சிகையில்வெளிவந்த திரு. க. பூரணம்பிள்ளை அவர்களின் கட்டுரை வேறோரிடத்தில் தரப்படுகிறது.

150 வது ஆண்டு நிறைவு விழாக்கள் தற்போதைய மாணவர்களுக்கு கல்லூரியின் மகிமையை உணர்ந்துகொள்ள நல்ல வாய்ப்பினை வழங்கியது. உலகெங்கும் இருக்கும் பழைய மாணவர்களின் கவனத்தை ஈர்த்து கல்லூரி சமூகம் பெருமை கொள்ளும் வண்ணம் ஆக்கிய பெருமை பொதுவாக இங்கிலாந்து, கனடா, அவுஸ்ரேலியா ஆகியநாடுகளில் இயங்கும் பழைய மாணவர் சங்கங்களுக்கும் குறிப்பாக கொழும்பு பழைய மாணவர் சங்கத்திற்குமுரியது. அவர்களுக்கு கல்லூரி தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

ஞானம் மினிரட்டும்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் வரிசையிலே

திரு. டி. பி. நைல்ஸ் (1861 — 1868)
திரு. சாமுவேல் ஹென்ஸ்மன் (1868 —)
திரு. ஜே. சி. ரி. ஷெராட் (1875 —)
திரு. எஸ். ஏ. போல்பிள்ளை
திரு. ஸ்ரீபன் கணபதிப் பிள்ளை (1912 வரை)
திரு. இ. ஏ. ஏப்ரஹாம் (1912 —)
திரு. சி. பி. தாமோதரம் (1915 — 1943)
திரு. கே. பூரணம்பிள்ளை (1943 — 1967)
திரு. எஸ். இரத்தினசபாபதி (1967 — 1971)
திரு. சி. இராஜதுரை (1971 — 1973)
திரு. பி. ஏகாம்பரம் (1973 — 1975)
திரு. டபிள்யு. என். எஸ். சாமுவேல் (1975 — 1985)
திரு. எஸ். பி. பாலசிங்கம் (1985 — 1993)
திரு. க. நடராஜா (தற்போதைய அதிபர் — 1993-1997)

Stamp Bulletin

Department of Posts,
Lotus Road,
Colombo - 01,
SRI Lanka.

The Philatelic Bureau of the Department of Posts, will issue a new postage stamp in the denomination of 75 cents to mark the 150th Anniversary of Hartley College, Point Pedro, on 5th June, 1989.

Hartley College founded in 1838 is one of the brightest stars in the educational firmament of Sri Lanka today.

Beginning as an Elementary English School she attained Senior Secondary status by the turn of the century with a progress that was phenomenal.

The secret of this success was the vision and the mission of her founder his successors and her teachers.

The founder was the Rev. Peter Percival, M. A., D. D. a distinguished scholar, who later became the Professor of Oriental Studies at the University of Madras.

The college, first, named Wesleyan Mission Central School and Christ Church School four decades later, got the present name in 1917 in honour of the Rev. Marshall Hartley who laid the foundation for a science laboratory.

Thirteen Principals assisted by resourceful teachers have served the college gloriously rivalling each other in their devotion and dedication.

Of these, three merit honourable mention by the length versatality and significance of their service - First, Mr. J. C. T. Sherrad who rendered germane and yeoman service as Headmaster and Assistant Teacher (1875-1915). Second Mr. C. P. Thamotheram who raised the college to the height of excellence in Science, Mathematics and Games (1915-1943). Third Mr. K. Pooranampillai who gave the college's fame a multi - faceted dimension 1943-1967).

Hartley has withstood many a vicissitude-a fatal epidemic in 1850, two world wars, a cyclone in 1960. Now she is a refugee displaced from her hallowed Precincts by military operations and housed at Puttalai M. V. 3km. away.

Yet by dint of the resourcefulness of her teacher and the intelligence and industry of her pupils she remains resplendent in the academic field true to her motto "Fiat Lux" while her distinguished alumni, adorning the top echelons of scholarly disciplines and professions both at home and abroad are keeping her Gold and Blue Flag flying as high as ever.

ISSUED ON 5th OF JUNE 1989



Issue of a New Stamp and a First Day Cover to Commemorate the 150th Anniversary of Hartley College, Point-Pedro.

A MEMENTO TO MARK THE TER-JUBILEE CELEBRATIONS OF HARTLEY COLLEGE



FIRST DAY COVER — ISSUED ON 5TH JUNE 1989



Issue of a New stamp and a First Day Cover to Commemorate the 150th Anniversary of Hartley College, Point Pedro.

Excerpts from the speeches made after the dinner held at Hotel Taj Samudra on 10th June 1989 in connection with the Ter Jubilee Celebrations of the college and the Golden Jubilee Celebrations of HC P.P.A. Colombo Branch.

The Chief Guest Justice Mr. H. D. Thambiah, Judge of the Supreme Court

I am really amazed that despite the recent set back of displacement from its original place, noises in the battle fronts, tension and turmoil, death and destruction, curfews and hartals, Hartley College has preserved its spirit of compounding of honour, leadership and all the noble qualities it has stood for during its existence of one hundred and fifty years.

There are two sacred calls in life. One is the priesthood and the other is teaching. I am happy that I was in the teachlng profession at one time. It is a rewarding experience to be a devoted teacher. I still consider my life at Hartley as a teacher as a landmark in my life. I can never forget that. I cannot resist mentioning infact I am amazed that 14 students who sat for the G.C.E. (O/L) Examination secured distinctions in all the eight subjects, while 18 students obtained in Seven subjects each.

True to its motto "Fiat Lux", Hartley keeps the torch of teaching and of learning aglow and burning. Unlike the mortals, an institution and an educational institution grows from strength to strength as age goes on. Hartley has demonstrated this to all of us. I wish Hartley more successes in its achievements in the years to come."

Professor A. Thurairajah, President of the Hartley College Past Pupils' Association (Colombo Branch)

Education is a noble profession. I am myself a teacher. The teaching profession demands of the holder unstinted devotion and dedication. The profession in the past was indeed noble. Today it is distressing to note that some who have taken to this profession have become shirkers- Some teachers remain in the staffroom and do not teach. Such attitude is detrimental to the cause of Education and these teachers must leave the noble profession and look for something else.

Another distressing factor is private tuition. The tutories coach students for Examinations only and do not impart Education. We have seen students securing University Admissions with four A's finding life at the University very difficult for them. In the Universities, a student who has had a mere examination coaching cannot be a success. Only those who have had the basics of education can survive at the University. A University student has to think of his own and work on his own to a great extent. The tutories are no substitute for schools.

It is in the schools that a student can inculcate the basics of life and learning.

With the introduction of the Mid-day meal scheme, I would appeal to the authorities to reintroduce the double Session system. The Midday Meal Scheme is taking a lot of shool hours sports must be actively encouraged once again as otherwise we will be producing only book-worms who are physical weakings.

Mr. K. Pooranampillai,
Former Principal of the College

Hartley is celebrating its 150 th year of existence. Out of the 150 years nearly 90 years were held by three Principals - J. C. T. Sherrard 37 years, C. P. Thamotheram 28 years and self 24 years. I had the longest connection with Hartley - 8 years as a student, 6 years as Asst. Master and 24 years as principal. It was this system that made educational institutions to prosper. Tradition, institution alisation and values were implanted and reinforced. Today principals are changed off and on and the school loses the leadership. Greeks say that a knife must cut. A knife with a golden blade and ivory handle is nice to look at but it won't cut. Today most people are appointed to the chair of principalship on the colour and views of the person on the political sphere. This will ruin education. Daniel Webster, the American scholar said that if one works on grass it would dry up and die; if one works on marbles it would perish, if one works on temple it would perish, but if one works on mind it develops and the job is rewarding.

Today students are being used as guinea pigs in the amateurist experiment in education. Everytime a Government changes and sometimes even when a Minister of Education is changed within the same Government. This sorry state of affairs must come to an end, if education is to have any meaning.

Mr. S. P. Balasingam,
Principal of the College

Only a few who occupied the chair of principalship were called and known as principals. Today the word principal is an adjective qualifying the odd incumbent of the post.

Hartley has a tradition of its own both in education and discipline. That tradition was established by great principals like J. C. T. Sherrard, C. P. Thamothiram and K. Pooranampillai. I am not a principal, I am only a trustee of this great tradition.

Today student teacher relationship is not like that of the good old days. But still Hartley strives to preserve atleast a semblance of the past.

In those days if a boy is seen in the Principal's Office it means that the boy is in trouble. Nowadays if a boy is seen in the Principal's Office it means that the principal is in trouble.

Even the parental control over children has become a remote control.

Now almost one third of our staff are women. Those days women teachers were very few. They too were recruited on condition that they should not marry. If they marry it is for recreation and not for procreation. If it is for procreation it can only be in the vacation.

Mr. K. B. Ratnayake, a distinguished old boy and M.P. for Anuradhapura District

Three things condition the success of education. They are a sacrificing and willing teachers, an obedient set of students willing to learn and an encouraging Past Pupils' Associations. Hartley is fortunate to have all the three. Hartley has shown concretely during the last few years that buildings alone do not make a school. I wish my alma mater more successes in the future.

Mr. Chella Padmanathan, the Secretary of the P.P.A.

Mr. Chella Padmanathan thanked all those who participated in the function and who helped in various ways to make it a success. He also made an earnest appeal to all Hartleyites in Colombo and elsewhere in the country who are not members of the Association to become life members.

ஹாட்லியின் 150-வது வருடம்

HARTLEY TER - JUBILEE

திரு. க. பூரணம்பிள்ளை
முன்னாள் ஹாட்லிக் கல்லூரி அதிபர்

பருத்தித்துறையிலுள்ள ஹாட்லிக் கல்லூரி முன்னர் உவெஸ்லியன்மிஷன் மத்திய பாடசாலை என்ற பெயருடன் 1838-ம் ஆண்டு கலாநிதி பீட்டர் பேர்சிவல் (Dr, Peter Percival) என்ற மெதடிஸ்ட் பாதிரியாரால் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு நான்கு வருடங்களுக்கு முன்னதாகவே இவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை ஆரம்பித்திருந்தார். கலாநிதி பீட்டர் பேர்சிவல் ஒரு தலை சிறந்த கல்விமானாவார். இவர் ஆறுமுகநாவலரின் உதவியுடன் சுவிசேஷத்தைத் (Bible) தமிழில் மொழிபெயர்த்தார். சென்னை சர்வகலாசாலை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மேலைத்தேய கல்வி முறைகளுக்கு பேராசிரியராகத் திகழ்ந்தார். இவரது உருவச்சிலை இன்றும் சர்வகலாசாலை அலுவலகத்தில் இருப்பதாக அறியப்படுகிறது.

பருத்தித்துறை மத்திய பாடசாலை யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் ஆரம்பப் பாடசாலையாக விளங்கியது. 8-ம் வகுப்பிற்கு மேற்பட்ட கல்விக்காக மாணவர்கள் யாழ்ப்பாணம் செல்ல வேண்டி இருந்தது. ஆரம்பத்தில் பருத்தித்துறையில் வாழ்ந்து வந்த பாதிரிமார்களே இப்பாடசாலையின் தலைவர்களாக இருந்து வந்தனர். அப்பாடசாலைத் தலைவர்களில் குறிப்பிடத்தக்க தமிழர்கள் பின்வருபவர்கள், திரு சாமுவேல் ஹென்ஸ்மன் (Mr. Samuvel Hensman), டி.பி நைல்ஸ் (Rev. D. P. Niles) என்போர் 1861 இலிருந்து 1868-ம் ஆண்டு வரையும் இப்

பதவியை வகித்தனர். அன்றைய யாழ்ப்பாணப் பாடசாலைகள் போலவே இப் பாடசாலையும் குறைந்த மாணவர்களைக் கொண்டதாகவே இருந்து வந்தது. அக் காலத்தில் நிலவிய கொலரா நோயே இதற்குரிய காரணமாக இருந்த போதிலும் திரு. நைல்ஸ் அவர்கள் இதனைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார். ஆங்கிலத்திலும், தமிழிலும் மிகவும் பாண்டித்தியமுடைய இவர் சிறந்த ஒரு நிர்வாகியுமாவார். மத்திய கல்லூரி எதிர் நோக்கிய எதிர்ப்புக்கள் யாவற்றையும் தாக்குப்பிடிக்க இவரது உதவி நாடப்பட்டது.

திரு. ஜே. சி. ஷெரட் (J. C. Sherrard) என்பவரது பெயர் அடுத்துக் குறிப்பிடத்தக்கதாகும். இவர் இப்பாடசாலையுடன் 40 ஆண்டுகள் (1875—1915) தொடர்புடையவராவார். 25 வருடங்களாகப் பாடசாலையின் தலைவராக விளங்கி பாடசாலையுடன் நீண்ட தொடர்புடைய காரணத்தினால் கிராம மக்கள் இப்பாடசாலையை 'ஷெரட் பாடசாலை' என அழைத்தனர். இதனது உயர்ந்த நிலை காரணமாக இதனது தரம் உயர்த்தப்பட்டது. கல்கத்தா சர்வகலாசாலை பிரவேசப் பரீட்சைக்கான மாணவர்களை இப்பாடசாலை தயார்படுத்தியது. திரு. இ. எஸ். போல்பிள்ளை (B.A.) அவர்கள் அதிபராகவும் திரு. ஷெரட் முதல் உதவியாளராகவும் இருந்தனர். திரு. போல்ப்பிள்ளை இறந்ததும் திரு. எஸ். எஸ். கணபதிப்பிள்ளை (B. A.) 1907-ம் ஆண்டிலிருந்து 1912-ம் ஆண்டு வரை அதிபராக இருந்தார். திரு. கணபதிப்பிள்ளையவர்கள் நியாயதுரந்தரராக (Lawyer) சென்றதும், திரு. இ. எஸ். ஏபிரகாம் (B. A.) அவரிடத்தை நிரப்பினார். அவரும் ஒரு வருடத்தின் பின்னர் தமது கிராமத்திற்கண்மையில் இருக்கும் விருப்புடன் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் அதிபராகச் சென்றார்.

அடுத்து அதிபராக வந்த திரு. சி. பி. தாமோதரம் (B. A.) நீண்ட காலமாக (1915—1943) மிகப் பிரபல்யமாக இருந்தார். திறமையான பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றதன் காரணமாக இது இடைத்தரப் பாடசாலையின் நிலையை எய்தியது. இதன் பின்னர் இப்பாடசாலை 1917-ம் ஆண்டில் ஹாட்லிக் கல்லூரி என்ற பெயரைப் பெற்றது. கல்லூரியின் தரவுயர்விற்குத் தேவையான விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கான நிதியினை இங்கிலாந்தின் மெதடிஸ்ட் மிஷனின் வெளிநாட்டு மிஷன்களின் செயலாளர் என்ற ரீதியில் அதனைப் பெற்றுக் கொடுத்த வணக்கத்திற்குரிய திரு. மார்ஷல் ஹாட்லி (Rev. F. Marshall Hartley) என்பவரின் ஞாபகார்த்தமாக இக்கல்லூரிக்கு இப்பெயரிடப்பட்டது.

இக்கல்லூரியின் கேம்பிரிஜ் பரீட்சையின் பெறு பேறுகள் மிக நன்றாக விருந்தன. 1923-ம் ஆண்டில் திரு. கே. ஆழ்வாப்பிள்ளை என்பவர் கேம்பிரிஜ் சிரேஷ்ட பரீட்சையில் 5 விசேட சித்திகளுடன் சித்தியடைந்து சர்வகலாசாலைக் கல்லூரிக்கான புலமைப் பரிசிலைப் பெற்றார். திரு. எஸ். நடராசா என்பவரே முதன் முதலில் ஹாட்லி கல்லூரியிலிருந்து விஞ்ஞான மாணியில் பெற்ற பெறு பேறுகளின் காரணமாக புலமைப் பரிசில் பெற்று இங்கிலாந்து சென்றவராவார். இவரே பின்னர் கணிதபாடத்தின் ஆசிரியராக சர்வகலாசாலைக் கல்லூரியில் இருந்தார். திரு ஆழ்வாப்பிள்ளை கலைமாணிப் பரீட்சையில் முதலாம் பிரிவிலும், கணிதத்தை முதன்மையாகக் கொண்ட விசேட கலைமாணிப் பிரிவில் முதல் வகுப்பிலும் தேறிப் புலமைப்பரிசில் பெற்று இங்கிலாந்து சென்றார். உணவு மந்திரியின் செயலாளராக இருந்த இவர் வெவ்வேறு நாடுகளின் அரிசி உற்பத்தி பற்றிய தரவுகளை நினைவில் வைத்திருப்பதில் விற்பன்னராக இருந்தார்.

சர்வகலாசாலைக் கல்லூரியின் முதல் 25 வருடங்களிலும் ஹாட்லிக் கல்லூரியிலிருந்து இங்கிலாந்து சென்றவர்கள் 11 பேரென சொல்லப்படுகின்றது. அவர்களுள் திரு. க. கணபதிப்பிள்ளை (தமிழ்ப் பேராசிரியர்) திரு. எம். கிட்ணபிள்ளை, திரு ஆர். கே. கந்தையா (ஹார்வெல் பெரிய பிரித்தானியா, திரு. சி. யே. எலியாஸ்ஸர் (கணிதப் பேராசிரியர், சர்வதேச விருதுகள் பல

பெற்றவர்; கணிதத்திலே அதிக புள்ளிகள் பெற்ற சாதனையாளர்). திரு. எஸ். சண்முகநாதன் (ஆராய்ச்சியாளர். கனடா) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். திருவாளர் தாமோதரம் அவர்கள் 1943-ம் ஆண்டு இளைப்பாறியதும், திருவாளர் க. பூரணம்பிள்ளை அப்பொறுப்பினை ஏற்றார் (1944 1967) திரு. க. பூரணம்பிள்ளை அவர்கள் மாணவர் கல்லூரியிலும், வகுப்பிலும் குறைவாக இருப்பதையே விரும்பினார். மாணவர்கள் தனித்துவமான கவனத்திற்கு உட்படுத்தப்பட வேண்டுமெனவும், முற்று முழுதான வளர்ச்சியில் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும், இவையே மாணவர்கள் கடின உழைப்பு. நன்நடத்தை விளையாட்டுத்திறன் உடையவர்களாக வருவதற்கு வாய்ப்பளிக்கும் எனவும் கருதினார். இக்காலத்தில்தான் ஹாட்லிக் கல்லூரி மாணவரான எஸ் தயாநிதி என்பவர் பேராசிரியர் எலியஸ்ஸர் கணிதபாடத்தி பெற்றிருந்த புள்ளிகளை விட மேலதிகப் புள்ளிகளைப் பெற்றார். திரு ஏ. துரைராஜா என்பவர் பௌதீகவியலில் தனது முத்திரையைப் பதித்தார். பௌதீகத் துறையின் தலைவராக பேராசிரியர் துரைராஜா பேராதனியப் பல்கலைக் கழகத்திலிருந்து பின் திறந்த பல்கலைக் கழகத்தில் உயர்ந்த பதவியை வகித்து வருகின்றார். இவருடைய காலத்தில் நாடகப், பேச்சுப் போட்டி, பாடசாலைகளுக்கிடையே நடந்த கட்டுரை, கவிதை, சிறுகதை ஆகிய துறைகளில் மாணவர்கள் பெரிதும் ஈடுபட்டுப் பெயர் பெற்றனர். நாடகம். எழுதுவது பாடசாலை வாழ்வில் ஒரு அங்கமாகத் தொடங்கியது விளையாட்டுத்துறையிலும் ஹாட்லி தன்னுடைய பங்கைக் காட்டியது. 1963-ம் ஆண்டில் ஹாட்லி கல்லூரியினது 'கிரிக்கட்' குழுவே வடமாகாணத்தின் சிறந்த குழுவெனத் தெரிவு செய்யப்பட்டது.

கல்லூரி ஆசிரியர்களிலும் பல விசுவாசமான ஆசிரியர்கள், பழைய மாணவர்களான திரு. ஆர். எம். குணரத்தினம், திரு பி. ஏகாம்பரம், திரு எஸ். பி நடராசா திரு. டபிள்யூ. என். எஸ் சாமுவேல். ஆகியோர் அடங்கியிருந்தனர். அரசாங்கம் பாடசாலையைப் பொறுப்பேற்ற பின்னர் பழைய மாணவர்கள் பலர் அதிபர்களாக வரக்கூடிய பெருவாய்ப்பினைப் பெற்றனர். திரு. எஸ். இரத்தினசபாபதி (M. Sc.), திரு. பி. ஏகாம்பரம், தி டபிள்யூ. என். எஸ். சாமுவேல் ஆகியோர்களே அவர்களாவர். தற்போது அதிபராக இருக்கும் திரு. எஸ். பி. பாலசிங்கம், ஹாட்லிக் கல்லூரியின் பிரசித்தி பெற்ற மாணவ சகோதரர்கள் நால்வரில் இளையவராவார். பாடசாலை பருத்தித் துறைக்கு இரண்டு மைல்களுக்கப்பால் தற்காலிக கொட்டகையில் நடைபெற்றுக் கொண்டிருப்பினும் மிகத் தீரத்துடன் பாடசாலையினது தரத்தினையும் கட்டுக்கோப்பினையும் காப்பாற்றி வருகின்றார். அண்மையில் நடந்த ஆயுதப்படையினரின் செயற்பாடுகள் காரணமாக பாடசாலைக் கட்டிடங்கள் யாவும் இடிபாடுகள் அடைந்த நிலையில் காணப்படுகின்றன. 2000 மாணவர்களைக் கொண்ட இவ்வராங்கப் பாடசாலை இவற்றின் மத்தியிலும் பெறுபேறுகளை பெரு. திறமையுடன் பெற்றுள்ளது. வடமாராட்சி லிபரேசன் ஒப்பரேசனுக்கு (Liberation—operation) உட்பட்டிருந்தும், சடுதியான ஆசிரியர்கள் மாற்றத்தினாலும், அதிபர் மாற்றத்தினாலும் பாதிப்புற்றிருந்தும், 1987-ம் ஆண்டு நடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை ஹாட்லி கல்லூரி மாணவர்கள் பெற்றிருந்தனர்.

ஹாட்லி கல்லூரி இவ்வருடம் தன் 150-வது வருடத்தைப் பூர்த்தி செய்கின்றது. பாடசாலை கட்டிடங்கள் இடிந்த நிலையிலிருக்கும் இத் தருணத்தில் இப்படி ஒரு பொருத்தமான விழா ஒன்றினை எப்படி? எங்கே? எவ்வாறு? நடாத்துவது என்ற கேள்விகள் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச்சபை அங்கத்தவர் ஆகியோர் மனதிலே இருந்து வருகின்றன. பாடசாலையினது பெயருக்கேற்ப புதிய கட்டிடங்கள் முன்னிருந்த இடத்திலேயே அமைத்துக் கொடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை, கௌரவ கல்வி அமைச்சரும், அவரது செயலாளரும் கொடுத்துள்ளனர். இடிபாடுகளிலிருந்து எவ்வாறு பெயர் பெற்ற பீனிக்ஸ் (Phoenex) எழுந்ததோ அதே போன்று ஹாட்லி கல்லூரியின் எதிர்காலமும் மிக்க பிரகாசமானதாகவும், புகழ் பெற்றதாகவும் இருக்க வேண்டுமென நம்புவோம்

Biographical sketches of our Principals for the past fifty years

K. Pooranampillai –
Principal : 1944 – 1967

K. Pooranampillai was born in Thunnalai, about four miles from Point pedro. He was the son of S. S. Kanapathipillai, a former Principal and grandson, on the mother's side, of J. C. T. Sherrard, another Head of the school. His younger brother, Theivananthampillai, Reader in Linguistics and English at the Universities of Kuala Lampur and Fiji, also studied at Hartley. Pooranampillai was an Assistant Teacher at Hartley under C. P. Thamotheram for eleven years. His period of twenty four years as principal was marked by re-organisation and consolidation.

During this period, there were many educational changes. The mother tongue was made the medium of instruction from the Kindergarten to the University. The Assisted School System was abolished and they had to choose between becoming private Schools and becoming free Schools and later, Government Schools.

Soon after Hartley became a free school, faced with the rush of pupils, Pooranampillai decided, with the approval of the Governing Body, that Hartley should continue to be a two-form entry school, that no class division should have more than 35 pupils, and that the total enrolment should not exceed 650. Hartley thus became a Selective School.

The Principal also took a Period a week in each of the lower forms of the school doing English, and also in the top forms doing current affairs. He came to know his pupils at entrance and in the final year, and impressed on them the ideals and values of life. The Tuesday School Assembly Talks contributed to the educative process. The talks were on Discipline, Self Discipline, punctuality, planning, Streamlining, Courtesy, Helpfulness, Sportsmanship etc. Stories were told illustrating the cardinal virtues, and of the lives of Saints and greatmen.

He started the Prefect System and thus gave training in leadership. Besides the Literary Associations, other School Societies were organised. The Tamil Manram, the Science Association, the History & Politics Society, the Photographic Society, the Drama Society-thus giving Pupils experience in organisation and leadership.

At the Term Examinations, instead of ranking pupils according to the totals of marks scored, the Grading system (Grades I, II, III, IV, F) was introduced. Under the old system,

pupil who failed in the tool or compulsory subjects, could still top a class. Under the new system, to obtain a Grade, pupils had to pass in the compulsory subjects and get the required average of marks Also under the old system, real competition was confined to the first three pupils. Under the Grading system, any number of pupils could be in Grade I. In one year in the S.S.C. / G.C.E. O/L class, there were as many as ten pupils in a class division, in Grade I. Thus the motivation for effort was widespread.

The importance of written work in class was recognised. One written exercise a week had to be done in five period subjects ; and in three period or two period subjects, one written excercise had to be done in a fortnight. This ensured that pupils had enough practice preparing for school Certificate Examinations which were mostly written ones. In the School Calender, along with other dates, the dates when Exercise Books were to be sent to the office for supervision were given. The Principal, Vice-Princpal and the Senior Assistants shared the task of supervision. Supervision Reports were in Triplicate, one for the Principal, the second for the teacher, and the third for the Supervisor's file. Systematic supervision ensured good results. In 1952, a team of ten Inspectors under the Divisional Officer of Education did " a full-dress inspection " and their report read: " This is a good school, where work is well done and efficiently supervised ".

In 1953, Hartley celebrated the "centenary" of the founding of the school, and the foundation for a three-storey block was laid. It was to house the Science Laboratories and to be named "The Thamotheram Memorial Block."

Hartley had a loyal staff, all of whom were hardworking. Pooranampillai's idea was that at least 50% should be past pupils and at least 25% should be from other schools, so that the school benefited by new traditions and practices.

In sports and athletics, he wanted as many pupils as possible to participate. Coaching in the basics of cricket was given to every pupil admitted to the lowest class. In Athletics, Pooranampillai felt that every pupil should contribute to the final ranking of Houses. There were two Athletic Meets: there was the dual competition meet for selecting the first three in each item. Preceding this was a Meet when every pupil had to take part in a race (100 yards), a jump (long jump) and a throw (cricket ball). The final ranking of the Houses was decided by the totals to the points scored at the two Meets. In Games, there were inter-house matches in three levels.

When in 1965, Hertley became a Government School, Pooranampillai felt unhappy at the delays caused by red-tape, and was planning to retire. However, he accepted an invitation from the Management of St. John's College, Jaffna a private school. There he served for nine years, making his mark there also, as an administrator and educationist.

He and his wife now live in England, with their daughters, dividing their time between them.

S. Ratnasabapathy
Principal : 1967–1970

Ratnasabapathy was born in Thambachetty, about a mile from Hartley College. He grew up in a happy home and was attached to his parents especially his mother. His father, Subramaniam, a Surveyor took great interest in the education of his children. Every night, he got the sons to revise the day's lessons and to prepare the next day's lessons. It is no wonder that the children excelled in studies, and, incidentally brought fame to Hartley. Ratnasabapathy, the elder son, went to the Colombo University College and got an Honour's Degree in Mathematics, and followed up passing the M. Sc. Examination. The younger son, Shanmugathasan topped the B.Sc. Honours pass list, and got the Mathematics Scholarspih to London. Later, he got a job in Canada doing research in Atomic Fission.

While waiting for the B.Sc. Examination results, Ratnasabapathy spent his time teaching in a night school, without pay. He was spartan in his life, but he had the spirit of service strong in him. "To myself a heat of flint, to fellow man a melting heart" seemed to be his motto. He was considerate and helpful to his subordinates. Later, he taught at Ananda College, Colombo, St. Anne's College, Kurunagala. In recognition of his excellence as a teacher, he was appointed Vice-Principal at Nugawatte Central College in the Central province. He was later Principal of Science College, Matale, for a quite some time.

The Science College was a new kind of school: it had classes from Grade 9, and prepared pupils for the G.C.E O/L and A/L Examinations. Promising pupils from neighbouring schools (which were not adequately equipped for science teaching) were sent to Science College. Recognising Ratnasabapathy's merits and devotion to teaching, the Member of Parliament, Matale, Bernard Aluvihare, gave him full support. Ratnasabapathy equipped the laboratories of the Science College with the best apparatus so that the visitors from abroad were taken to Science College, Matale, as a model.

Ratnasabapathy had an educatioal philosophy, all his own. A teacher should do his best for all the pupils. He had further duty by the gifted pupils to stretch them to the utmost. This he did by giving extra classes to the brighter ones. And many, when they went to the University, found that in the A/L classes, Ratnasabapathy had covered a great deal of the University Syllabus.

He was so wedded to his work that he did not get married. On one of his visits to Point Pedro, he realised that his parents were now old and growing feeble. He felt it his duty now to look after them and to get nearer home. When there was a vacancy at Government Central College, Nelliyady (four miles from Point Pedro),

he got himself transferred there. It is said that parents of pupils at Government College, Matale, organised a meeting to protest against his transfer. But when they learnt that Ratnasabapathy himself had wanted the transfer, and that he wanted the transfer to be near his parents, they converted the meeting to bid him farewell and to express their appreciation of his selfless service.

In 1967, Ratnasabapathy came to Hartley College. Hartley was a selective school and the pupils were studious after his own heart. During his time as Principal, Hartley's pupils excelled in Mathematics, many of them were admitted to the Engineering faculties in Peradeniya and Katubedde. Some did so well they won scholorships tenable at the Cambridge universities in England.

When he retired from Hartley prematurely, as per Government policy of retiring all over 55 years of age, private schools in Jaffna invited him to join their staff. But he wanted to be with his parents. He had the satisfaction of being with them in their last days. He spent his retirement also by helping pupils in their studies. He died in May 1995, of heart attack, at the age of 82. According to his wish, body was handed over to the Medical Faculty of the University of Jaffna. Yet another mark of his devotion to education.

C. Rajadurai – Principal : 1971 – 1973

C. Rajadurai, who succeeded S. Ratnasabapathy as Principal at Hartley was one of a family of Hartleyites. His father D. N. Chinniah studied at Hartley, so did his other sons – Balasingham and Durairajah. Balasingham was Captain of soccer at Hartley and later became Principal of the Borstal School of Atchuvely. Durairajah was an Attorney-at-law.

Rajadurai played soccer for Hartley and on completing the Matriculation Examination, joined the University College, Colombo, to prepare for the B.Sc. Degree of London University. At the University College, he won soccer colours, and in his last year captained the soccer Team.

After obtaining the degree, he rejoined Hartley as a teacher. He taught physics and Mathematics, and also coached the soccer team. He was popular with his colleaques and with his pupils. Under his coaching, the school team reached a high standard.

In the later forties, the Education Department was organising what are called Central schools or Madhya Maha Vidyalayas in the big towns and electorates. To attract qualified teachers, the Government offered "Special Posts", ie higher salaries. Rajadurai was one of those selected for a speciál post. He was posted to Buwanwela Government Central College and caught the eye of Dr. N. M. Perera, the L. S. S. P. leader and M. P. for Ruwanwela soon. Rajadurai rose to be Principal of Canagaratnam Madhya Maha Vidyalaya (Stanley College), Jaffna.

When Ratnasabapathy retired from Hartley College, Rajadurai was selected to succeed. Things began to hum

both in the academic and sports sides. The Hartley soccer team came to be considered a formidable one.

Unfortunately, Rajadurai did not stay long at Hartley. After the second world war, many African countries were decolonised, and the countries wanted to provide education for all. Rich in petro - dollars, the Education Departments of these countries offered high salaries. Rajadurai was one of those attracted by "greener pastures".

He was appointed to a remunerative post, but fortune seems to have deserted him. He met with a motor car accident while waiting at a junction for the traffic lights to change, another car ran into his from behind. His car seats had no head rests, and he suffered serious neck - injury. He had to give up his post in Nigeria, and undergo surgery, in Sri Lanka as well as in Australia, where his children had migrated. He passed away in 1991 in Australia.

P. Ahamparam – Principal 1973 – 1975

P. Ahamparam was from Puloly South, about two miles from Point Pedro. He was a past pupil of Hartley, and so were his two elder brothers and a younger brother. Thanikasalam retired as Regional Director of Education; Kanagasabapathy was the Secretary, Cement Corporation when he passed away and Satchithanantham retired as Education Officer. As a pupil, Ahamparam was both intelligent and studious. On completing the school studies and qualifying for exemption from the London Matriculation Examination, he joined the University College, Colombo. In his third year there, the University College got the charter to be a University, and Ahamparam was among the first batch of graduates of the University of Ceylon.

His first appointment as a teacher was to St. Michael's College, Batticaloa. Later, when Hartley needed a Chemistry teacher he came over in March 1944 his subjects for the degree being double Mathematics and Chemistry. He was a person of wide interests and contributed greatly to the life of the school. In 1951, he was appointed Prefect of Games in succession to S. A. Rajaratnam, who died that year.

Ahamparam proved an ideal prefect of Games, because first and foremost he was an educationist. He insisted on members of the school teams obeying the rules of the school and doing their best in studies as well. The aim of school games, he would emphasise was to train in sportsmanship : to play fair, to be fair to the opponents and to face victory and defeat with an equal mind.

It is to his credit that while he laid emphasis on sportsmanship, he also raised the level of performance of our teams. Our cricket teams lost to the teams of the older schools in Jaffna. He reorganised the plan of training : coaching in the basics of cricket began with the youngest pupils in school, at the age of 8. In 1963, the first set coached this way was declared the "Best School Cricket

Past Principals of Hartley College

J. C. T. Sherrard
1878 — 1906

K. Pooranampillai
1943 — 1967

S. Ratnasabapathy
1967 — 1971

P. Ahamparam
1973 — 1975

The following were the Principals during the years mentioned against their names :-

1. D. P. Niles (1861 — 1868)
2. Samuel Hensman (1868 —)
3. S. A. Paulpillai (1906 —)
4. S. Kanapathipillai (1906 — 1912)

(Contd.)

5.	E. A. Abraham	(1912 — 1915)
6.	C. P. Thamotheram	(1915 — 1943)
7.	C. Rajadurai	(1971 — 1973)
8.	W. N. S. Samuel	(1975 — 1985) — photo appears else where
9.	P. Balasingam	(1985 — 1993) — photo appears else where

Staff – Ter Jubilee Year 1988



Team in the North". We had arrived, and it was a proud day for him.

He was one of the early batches to do the Diploma-in-Education at the University of Ceylon, and he got top marks in Psychology. He had a sound grasp of the aims and ideals on education, and proved equal to task of being Head of a School. As principal of the Government Central College at Vantharomoolai in the Eastern Province, he made his mark. An English missionary working in Province said to me, " A Hartleyite there is making things hum". Among other things he said that Ahamparam had gone to the School Hostel and had sat up late at night and caught some senior students who had gone to a late cinema show in Batticaloa. He also set about the task of re-organising the studies and sports activities at the school. Later, he was sent to Skandavarodaya College at Chunnakam.

While at Skanda, Ahamparam's wife died suddenly and he had the added responsibility of looking after his children. Fortunately, he got a transfer to Hartley College, Point pedro, where his relations live. Great things were expected of him there, but circumstances necessitated his accepting an invitation to teaching in Transkye, Africa. From there, he was able to send his children to suitable educational institutions. In the fullness of time, he retired from Transkye, and went to live with his daughters in New Zealand. There he passed away in 1991.

W. N. S. SAMUEL — Principal 1975 – 1985

W. N. S. Samuel came from Saththanai, Karaveddi, about four miles from Point pedro. His father, Sithamparapillai, too was a Hartleyite and worked as a clerk in the Government Service, but died early, leaving behind his wife and their only child, Samuel. The members of the family had been Christians, and Samuel's mother would have liked the son to be a Minister in the Methodist Church. But as things turned out, he brought his pastoral gifts to the service of the pupils he taught.

W. N. S. as he came to be called, completed his School Certificate studies at Hartley, and joined the Collegiate Department of Jaffna College, Vaddukoddai, to prepare for the Arts Degree of London. His subjects were English, Tamil and History. On completing his degree, he taught for a while at Sacred Heart College, Karaveddi, and joined Hartley in 1953. He fitted into the life of the school quite easily, and was found to have a flair for guiding problem pupils. Accordingly he was appointed "Counsellor" and given time in the school time-table for the pupils to meet him for guidance in regard to their studies and problems.

He served under principals Pooranampillai, Ratnasabapathy, Rajadurai and Ahamparam. When Ahamparam left to go to Africa, Samuel became principal. He was one of those who threw themselves into their

work so deeply that they felt happy when the school did well and miserable when the results were not to their expectations. He was happy that Hartley's results at Examinations were good and Hartley's athletes performed well at Inter School Meets.

Samuel's period is notable for the erection of two blocks of buildings. The Thamotheram Memorial Block was for the housing of the Science Laboratories, and the foundation had been laid as early as 1953, when Hartley celebrated its "centenary". The other building erected was the Pooranampillai Block for the teaching of Handwork and Physical education.

Unfortunately for Samuel, in his term of office, the Sri Lankan army occupied the Pooranampillai Block and a number of class-rooms in their fight against the Tamil Militants. In one of their forays towards Valvettiturai, a group of soldiers were ambushed, and some were killed. In retaliation, some set fire to the school library (consisting of over ten thousand volumes) and a number of other class rooms.

The loss of several class-rooms, some used by the army, and some destroyed by the fire, necessitated the shifing of some classes to the Puttalai Government School, Puloly, two miles away. A special word of thanks is due to the Principal of the Puttalai School, C. Tharmalingam, for accomodating and helping his alma mater in this emergency. The upper classes met in Puttalai and the Middle functioned in the class-rooms in Point Pedro Under P. Balasingham.

Samuel lost his wife and he had four sons to look after. The elder sons were studying Accountancy, Medicine and Computer science. The youngest had weak eye sight and was studying music. Samuel felt that he had a duty by them and specially by the youngest. So, on reaching the minimum age of retirement he went to Madras, India, to be with his youngest studying in the College of Music. While there, he fell ill and died. He was buried at Vellore, S. India and a tomb marks his grave.

P. BALASINGAM
Principal 1985 - 1993

காப்பாளர்:- திரு. கே. நடராஜா (அதிபர்)
பொறுப்பாசிரியர்கள் :- 1) மா. இராஜேஸ்காந்தன் 2) வி. பரராஜசிங்கம்
தலைவர்:- வி. சிவலோகநாதன் உபதலைவர் :- க. தேதீஸ்வரன்
செயலாளர்:- கே. அற்புதராஜ் உபசெயலாளர் :- வி. காண்டீபன்
பொருளாளர்:- கே. குமணன்
பிரதிநிதிகள்:- 12 ஏ ரி. சிவசக்தி, எஸ். சுகந்தன்
12 பி எஸ். சாரங்கா, சி. சிறீகஜேந்திரா
12 சி ஜி. தங்கரூபன், சி. விஜயாலயன்
12 டி எஸ். பாலபவன், கா. விஜயரூபன்

ஏறக்குறைய நூற்றுஐம்பது மாணவர்களை அங்கத்தவர்களாக கொண்ட எமது உயர்தர மாணவர் மன்றத்தின் 1994ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை சமர்ப்பிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் பேணும் வகையிலும் உயர்தர வகுப்பு மாணவர்களின் ஆளுமையை வளர்க்கும் வகையிலும் சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், கவிஅரங்குகள், பட்டிமன்றங்கள், நாடகங்கள் போன்ற பல ஆக்கபூர்வமான அம்சங்கள் மன்ற கூட்டங்களில் நடைபெற்றன. ஆக்கபூர்வமான திட்டங்கள் பல திட்டப்பட்டிருந்தும் துர் அதிஷ்டவசமாக எமது பகுதியில் அடிக்கடி இடம் பெற்ற அமைதிஇன்மை காரணமாக அவற்றை நடைமுறைபடுத்த முடியவில்லை.

இதன் காரணமாக கடந்த சில ஆண்டுகளாக ஒன்று கூடல் நிகழ்வுகளை நடத்த முடியாது போனது மனவருத்தத்திற்குரியது.

1995 ஆம் ஆண்டு மாணவர்களாகிய நாம் மனமுவந்தளித்த ஒன்று கூடலிலும் மதிய போசன விருந்திலும் பிரதமவிருந்தினராக திரு. திருமதி மா. நடராஜசுந்தரம் அவர்கள் கலந்து கொண்டு எம்மைச்சிறப்பித்ததுடன் ஒரு சொற்பொழிவுமாற்றி எம்மை எல்லாம் மகிழ்ச்சிக்குள் ஆழ்த்தினார்.

பிரதம விருந்தினராகிய மா. நடராஜசுந்தரமவர்கள் யாழ்பல்கலைகழக முகாமைத்துவ துறைத்தலைவராவார். பாடசாலை வளர்ச்சிக்கு அரும்பாடுபடும் பழையமாணவர்களில் இவரும் ஒரு குறிப்பிடத்தகு பங்கு வகிக்கின்றார்.

எமது மன்றத்தின் வளர்ச்சிக்கு பக்க பலமாக நின்று அரும்பாடுபட்ட அதிபர், ஆசிரியர்கள், சகமாணவர்கள் எனப்பலரும் இங்கு பாராட்டப்பட வேண்டியவர்கள். குறிப்பாக எமது மன்றத்தின் பொறுப்பாசிரியர்களாகிய திரு. இராஜேஸ்காந்தன் திரு. வி. பரராஜசிங்கம் என்பவர்கள் இங்கு குறிப்பிடத்தக்கவர்கள்.

இவ்வாறு பலவாக இயங்கிவந்த எமது மன்றத்தின் நிறைவில் 1994-07-27 புதன் கிழமை நடந்த ஒன்றுகூடல் சிறக்க ஆக்கமும் ஊக்கமும் தந்த அனைவருக்கும் நன்றிகள் கூறகடமைப்பட்டுள்ளேன்.

உருண்டோடும் உலகத்திலே உயர்தர மாணவர் மன்றம் இனிதே இனியும் வளர இறைவனை வேண்டுகின்றேன்.

06-06-1995

தலைவர்
வி. சிவலோகநாதன்

வணிக மாணவர் மன்றம்

நூற்றி ஐம்பது வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட வரலாற்றைக் கொண்ட எமது கல்லூரியின் வணிகத்துறையின் வயது 17 வருடங்கள் கடந்த நிலையிலேயே காணப்படுகிறது. அதிலும் எமது வணிக மாணவர் மன்றத்தின் வயது ஐந்து வருடங்கள் மட்டுமே. எமது மன்றத்தின் வயது சிறிதாயினும் அதன் சாதனைகள் வியக்கத்தக்கனவாகவும் பாராட்டத்தக்கனவாவுகம் உள்ளன.

வணிகத்துறை மாணவர்களதும் ஆசிரியர்களதும் முயற்சியால் இம்மன்றம் 1992 மாசிமாதம் 19ம் திகதி நிறுவனரீதியாக தோற்றுவிக்கப்பட்டது. இம்மன்றத்தின் தோற்றத்திற்கு எமக்கு ஊக்கமும் ஒத்துழைப்பும் வழங்கிய எமது முன்னாள் அதிபர் திரு. பொ. பாலசிங்கம் அவர்களை எமது மன்றம் என்றும் நினைவு கூர்ந்து நிற்கும்.

நிறுவன ரீதியாக மன்றம் தோற்றுவிக்கப்படுமுன்னரும் வணிகத்துறை மாணவர்களின் செயற்பாடுகள் வகுப்பறை மட்டத்தில் நிகழ்ந்துள்ளன. குறிப்பாக வணிகத்துறை சார்ந்த வெளி நபர்கள் வரவழைக்கப்பட்டு கருத்தரங்குகள் நடாத்தப் பட்டுள்ளதோடு மாணவர்களுக்கு பாடரீதியான சில விடயங்கள் கல்லச்சில் பதிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டது. இவ்வாறு எமது துறைசார்ந்த மூத்த ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் செயற்பாடே வணிக மாணவர் மன்ற தோற்றத்திற்கு உந்து சக்தியாக அமைந்தது.

மன்றம் தோற்றுவிக்கப்பட்டதும் மன்றத்திற்கான நிதியை தமது மதிய உணவு முத்திரைகள் மூலம் பெற்றமை மாணவர்கள் இம்மன்ற வளர்ச்சியில் காட்டிய அக்கறையை புலப்படுத்துகின்றது. மன்றம் காலத்திற்கு காலம் கருத்தரங்குகள், வணிகப்புதிர்ப்போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், பட்டிமன்றங்கள் போன்றவை நடாத்தி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குவித்திட்டதோடு மாணவர்களிடையே எழுத்தாற்றல் பேச்சாற்றல் கூட்டுமுயற்சி ஆகியவற்றை வளர்ச்சியடைய செய்தது.

மன்றம் உருவாக்கிய வணிகர் செய்திப் பலகை வணிகத்துறை மாணவர்களை மட்டுமன்றி கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவரையும் கவர்ந்த அம்சமாகும். வாரந்தோறும் கொழும்பிலிருந்து எமது பழைய மாணவர்களின் உதவியுடன் வணிகச் செய்திகள் சேகரிக்கப்பட்டு இங்கே பார்வைக்கு இடப்பட்டன.

காலத்துக்குக் காலம் மன்றம் வணிக விழாக்களை நடாத்தி மாணவர்களையும் இதில் பங்குபற்றச் செய்து துறைசார்ந்த வெளிநபர்களையும் அழைத்து மாணவர்கள் ஆளுமை வளர்ச்சியிலும் வணிகத்துறை சார்ந்த நடைமுறை விடயங்களில் மாணவர் அறிந்து பயன் பெறவும் மன்றம் அயராது உழைத்தது. இதில் பின்வருவோர் பின்வரும் விடயங்கள் பற்றி பேசி இருந்தனர்.

	பெயர்	விடயம்
1)	திரு. மா. சின்னத்தம்பி [விரிவுரையாளர் யாழ் / பல்கலைக் கழகம்]	வெளிநாட்டு வியாபாரம்
2)	திரு. தே. ஜெயராம் [விரிவுரையாளர் யாழ் / பல்கலைக்கழகம்]	தனியார் மயமாக்கல்
3)	திரு. தேவராஜா [முகாமையாளர் இலங்கை வங்கி, நெல்லியடி]	மகளீர் பொற்கணக்கு

4)	திரு. எஸ். தில்லைநாதன் [முகாமையாளர் இலங்கை வங்கி பருத்தித்துறை]	இலங்கை வங்கியின் அண்மைக் காலப் போக்கு
5)	திரு. எஸ். கமலசேகரம் [முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி பருத்தித்துறை]	
6)	திரு. எஸ். இரட்ணசபாபதி [கூட்டுறவு பரிசோதகர்]	இலங்கையின் கூட்டுறவின் வளர்ச்சி
7)	திரு. கே. சிவப்பிரகாசம் [உதவி தொழில் ஆணையாளர்]	இலங்கையில் ஊழியர் தொடர்பான சட்டங்கள்

எமது மன்றத்தால் சஞ்சிகை ஒன்று வெளியிட வேண்டுமென்ற அவா 24/10/94 இல் "வணிகவியலாளன்" எனும் நாமத்தால் வெளியிடப்பட்டதுடன் நிறைவேறியது. இச்சஞ்சிகை வெளியிடுவதற்கு நமக்கு பலவகையிலும் ஒத்துழைப்பு வழங்கிய அதிபர் திரு. க. நடராசா பாராட்டப்பட வேண்டியவர். மிகவும் இக்கட்டான ஒரு கால கட்டத்திலும் மன்ற உறுப்பினர்களின் அயராத உணர்ச்சியே இச்சஞ்சிகை தோற்றம் பெற காரணமாக அமைந்தது. அடுத்த இதழ் வெளியீட்டில் மன்றம் மிகுந்த அக்கறை காட்டி அதற்கான நிதியை சேகரித்துள்ள போதும் நாட்டுச் சூழ்நிலை காரணமாக வெளிவரவில்லை. வெகுவிரையில் மன்றம் இதனை நிறைவேற்றும்.

வணிகத்துறை வகுப்புக்கள் இருமடங்காக அதிகரித்துள்ளதால் எமது மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் தற்போது அதிகரித்துள்ளது. எனவே எதிர்காலத்தில் மன்றத்தின் செயற்பாடுகள் மேலும் சிறப்புற அமையும் என்பதில் எமக்கு தளராத நம்பிக்கை உண்டு.

— வணிக மாணவர் மன்றம் —

ஹாட்லிக் கல்லூரியின் சாரணிய வரலாறு

ஹாட்லிக் கல்லூரியில் 1920-ம் ஆண்டு முதன் முதலாக Mr. N. M. Vannigasinghe என்ற ஆசிரியரால் சாரணியம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் சாரணியம் 1912-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னர் பின்வரும் ஆசிரியர்கள் சாரண ஆசிரியர்களாகக் கடமை புரிந்துள்ளனர்.

Messers:	S. A. Rasaratnam	Messers:	J. W. N. Mcclelland
,,	S. M. Thamboe	,,	A. R. Joseph
,,	V. Sabanayagam	,,	W. R. Aruliah
,,	W. W. Somaratna	,,	Sam. Thambipillai
,,	M. Shanmuganathan	,,	S. Vinayagalingam
,,	D. R. Arumainayagam		

1971-ஆம் ஆண்டில் இருந்து Mr. T. Ratnasingam சாரண ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார்.

1983-ஆம் ஆண்டு Mr. T. Rajalingam சாரண ஆசிரியராகக் கடமையாற்றினார். 1983-இல் நடைபெற்ற தேசிய சாரண ஜம்பொரியில் ஹாட்லிச் சாரணர்கள் கலந்து கொண்டனர்

1986 இல் Mr. A. Ravidranathan Mr. T. Ratnasingam ஆகியோர் சாரண ஆசிரியர்களாகக் கடமையாற்றினார்.

1988 இல் "காட்லிக் கல்லூரிசாரணர் குழு ஆலோசனைச்சபை" அமைக்கப்பட்டது.

Hartley College Scout Group Committee

Patron – Mr. P. Balasingam
President – Mr. A. Ravidranathan
Viee President – Mr. S. Ariyalingam
Secretary – Mr. N. Gunaseelan
Treasurer – Mr. R. Balendra

Members of Executive Committee –

Messers S. Sundaramoorthy, S. Sivakrishnamoorthy, T. Ratnasingam
,, C. Jothiravi, V. Paramaguru, K. Ganesalingam
,, P. Muthukumarasamy.

1991 இல் குழு ஆலோசனை சபை புனரமைக்கப்பட்டது.

தலைவர் – Mr. A. Sivanathan
காரியதரிசி – Mr. V. Pararajasingam
பொருளாளர் – Mr. R. Balendra
குழுச்சாரண ஆசிரியர் – Mr. A. Ravindranathan
சாரணஆசிரியர் – Mr. S. Ariyalingam

1992 இல் காட்லிக் சாரணர்கள் தொண்டமானாறில் நடந்த மாவட்ட சாரணர் விழாவில் (Scout District Rally) பங்குகொண்டனர். குருளைச் சாரணியம் செல்வி. மேரிவதனா செபமாலை, செல்வி. இ. சுப்பிரமணியக் குருக்கள், செல்வி. சாந்தினி மாணிக்கவாசகம் ஆகியோருடைய பொறுப்பில் ஆரம்பிக்கப்பட்டது.

காட்லிக்சாரணர்கள் ஆய்வுப்பிரயாணம், கோயில் திருவிழாக்களில் சேவைப்பாசறை, வீதிப்பாதுகாப்பு, பாடசாலையில் விருந்தினரை வரவேற்றல், சைக்கிளோட்டப் போட்டி, பாசறை, விளையாட்டுப்போட்டியில் கடமை, சமூகசேவை, அணித்தலைவர் பயிற்சி, மாவட்டசாரணர்விழா ஆகியவற்றில் பங்கு கொண்டுள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் மாசிமாதத்தில் பேடன் பவல் நினைவு தினத்தையும் வேறு மாதத்தில் சமய நிகழ்ச்சியையும் நடத்தி வருகின்றனர்.

1993 மாசிமாதத்தில் காட்லிச்சாரணர்கள் 42 பேர் சைக்கிள் பிரயாணம் ஒன்றை மேற்கொண்டு குடத்தனைக்குச் சென்றனர். பின்னர் வரணியில் பாசறை அமைத்து சாரணிய நிகழ்ச்சிகளை நடத்தினர்.

22. 02. 93 இல் பேடன் பவல் நினைவு தினத்தைக் கொண்டாடினர். பேச்சுக்கள், கவிதை, பாட்டு, நாடகங்கள், கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. செல்வி ஆறுமுகம் ஆசிரியரின் நெறிப்படுத்தலினால் நாடகங்கள் மிகவும் சிறப்பாக இருந்தன. T. V. Show ஒன்றும் நடைபெற்றது.

1993 யூலை மாதத்தில் சிதம்பராக் கல்லூரியில் நடைபெற்ற அணித்தலைவர் பயிற்சி முகாமில் எமது சாரணர்கள் பங்கெடுத்தனர்.

1993 ஒகஸ்ட் மாதத்தில் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை ம. வி. இல் நடைபெற்ற மாவட்ட சாரணர் விழாவில் 45 சாரணர்கள் பங்கு பெற்றுக் கொண்டனர்.

1993 செப்ரெம்பரில் குருளைச்சாரணர்களிற்கான சின்னம் சூட்டுவிழா நடைபெற்றது. சாரணர்களின் பெற்றார்களும் அழைக்கப்பட்டனர். (28. 09. 93) வல்லிபுர ஆழ்வார்சுவாமி கோயில் கொடியேற்ற வைபத்தில் சேவைப்பாசறை அமைத்து அரும் பணி செய்தனர்.

93 நவம்பரில் நீச்சல் பயிற்சி சாரணர்களிற்கு வழங்கப்பட்டது.

93 நவம்பரில் சைக்கிள் பிரயாணம் ஒன்றை மேற்கொண்டனர்.

17. 11. 93 அன்று ஓய்வு பெற்ற அதிபர் பொ. பாலசிங்கம் அவர்கட்கு சாரணர்களால் தேநீர் விருந்துபசாரம் அளிக்கப்பட்டது.

1994 ஆம் ஆண்டில்

94 மாசிமாதத்தில் ''சாரணியக்குழு ஆலோசனைசபை group Committee'' புதுப்பிக்கப்பட்டது.

போசகர் – அதிபர்	Mr. K. Nadarajah
தலைவர் –	Mr. A. Sivanathan
காரியதரிசி –	Mr. S. Ragavananthan
பொருளாளர் –	Mr. R. Balendra
குழுச்சாரண ஆசிரியர் –	Mr. A. Ravindranathan (P. 4) (Group Scout Leder) (Phase 4 Trained)
சாரண ஆசிரியர்கள் –	Messers S. Ariyalingam (P. 4) " S. Satkunarajah (P. 2)
உதவிச்சாரண ஆசிரியர்கள் –	Messers V. Pararajasingam (P. 1) R. Balendra (P. 1)
குழு அங்கத்தவர்கள் –	Messers E. Nagandrarajah ,, K. Thavanesan

குருளைச் சாரண ஆசிரியர் – செல்வி எம். வி. செபமாலை

உதவி ஆசிரியர் – செல்வி. இ. இரட்ணசாமி

94 பங்குனி மாதத்தில் பேடன் பவல் நினைவு தினம் கொண்டாடப்பட்டது. பேச்சு, கவிதை, பாடல், நாடகங்கள், T. V. Show என்பன இடம்பெற்றன.

சித்திரை 94 இல் 1992, 1993, 1994 ஆம் ஆண்டுகளிற்கான புள்ளி விபரப்படிவங்கள் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டன.

23. 04. 94 இல் சாரணர்கள் தில்லையம்பலப்பிள்ளையார் கோவிலுக்குச் சென்று பாசறை அமைத்து சாரணிய வாழ்க்கை வாழ்ந்தனர்.

25. 04 இல் வல்லிபுரக்கோவில் பயிற்சிப்பாசறை அமைக்கப்பட்டது.

94 யூலையில் மணற்காட்டில் காட்லிக் சாரணர்கள் பாசறை அமைத்தனர்.

94 ஒக்டோபரில் கைதடி நவில் பாடசாலையில் நடைபெற்ற 3 நாள் பயிற்சிப்பாசறையில் எமது பாடசாலைச் சாரணர்கள் 25 பேர் கலந்து கொண்டனர்.

டிசம்பர் 94 இல் நெல்லியடி எம். எம். வி இல் நடைபெற்ற அணித்தலைவர் பயிற்சி முகாமில் சாரணர்கள் பங்குகொண்டனர்.

காட்லிக்கல்லூரி நூலகத்தில் பல சாரணிய நூல்கள் வைக்கப்பட்டுள்ளன. கொழும்பில் இருந்து " இலங்கைச் சாரணர் என்ற பத்திரிகையை சாரணர் பெற்று வருகின்றனர். காட்லிக்கல்லூரி இலங்கைச் சாரண சங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. (5. 5. 94) இல. 2305 வாழ்க சாரணியம்

A. Ravindranathan
(Group Scout Leader)
No. 721 (1994)

The Interact Club — 1994

The Interact Club of our College was inaugurated in September 1994 by the Rotary Club of Jaffna. The main aim of the club is to help others

Patron : Mr. K. Nadarajah
Staff Advisors : Mr. V. Suriyanathan
Mr. V. Pararajasingam
Mr. T. Sivasri
President : Int. T. Wesley Thevasuthar
Vice President : Int. K. Thulasithas
Secretary : Int. K. Uthayarajah
Treasurer : Int. N. Balamurali

Board of Directors

Club Service : Int. B. Muralitharan
Finance : Int. K. Pratheepan
International Understanding : Int. B. Kandeepan
Community Service : Int. S. Sasikumar
Sergeant at Arms : Int. B. Sathiyakumar

Editors

Int. N. Balabawan Int. R. Ramesh

We have a strength of 75 members. We have our General Body meetings on Thursdays and Executive Committee meetings once a month.

Three projects were undertaken and completed by Club during the year.

1. A fence was put up around a part of the school boundary and also trees planted in the school compound protected from stray cattle.
2. The new pathway to the College premises at the east end of the College was cleared for use by the A/L students.
3. The School Playground was cleared and prepared for the Athletic Meets. Office bearers and some Interactors participated in the Leadership conference organised by the Rotary Club of Jaffna on 8th October 1994.

We hope to undertake more projects that are useful to our College and community next term.

I wish to thank our Patron and the Staff advisors for their guidance and support.

I also wish to express my sincere gratitude to our Rotary Governor, Interact Chairman, Interact District Committee, Rotary Advisor and Rotarians who helped in various ways and the members of the clubs for their co-operation.

BELIEVE IN WHAT YOU DO - DO WHAT YOU BELIEVE IN.

Secretary

உ

ஓம் சாயிராம்

நாடகமன்ற அறிக்கை

வரலாற்றில் எமது பணி

நீண்டகால வரலாற்றுப் பாரம்பரியத்துடன் கல்வித்துறையிலும், பிறதுறைகளிலும் பல சாதனைகளைப் படைத்து முன்னணிப் பாடசாலையாக திகழ்ந்துகொண்டிருக்கும் எமது கல்லூரி நாடகத் துறையிலும் தனது காத்திரமான பங்களிப்பைச் செய்து வருகின்றது.

இந்நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் ஆங்கில ஆசிரியராகக் கடமை புரிந்த அழகு வால்ரன் ஆங்கில இயக்கியத்தில் மிகுந்த புலமை மிக்கவர். குறிப்பாக ஷேக்ஸ்பியரது பல நாடகங்களை ஆங்கிலத்தில் நிகழ்த்தி ஆங்கில வசன நாடகங்களை எமது பகுதிக்கு அறிமுகப்படுத்தியவர். இவரது ஆங்கில நாடகங்களால் கவரப்பட்ட பலர் அவற்றைத் தமிழில் மொழிபெயர்த்து நிகழ்த்தி வடமராட்சிப் பகுதியில் தமிழில் வசன நாடகப் போக்கிற்கு வித்திட்டனர். இவ்வாறு 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து காலத்துக்குக் காலம் பல ஆசிரியர்கள் மாணவர்களுடன் இணைந்து நாடகத்துறைக்கு வளமூட்டி வருகின்றார்கள்,

1990இல் தனது 150ஆவது ஆண்டு விழாவில் (1838—1988) கல்லூரியில் "ஆச்சி சுட்ட வடை" என்ற சிறுவர் நாடகம் நவீன நாடக உத்திகளுடன் மேடையேறி, வடமராட்சி நாடகத்துறையில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. இதுபற்றி 23-03-90 திசை வாரஇதழில் டொக்ரர் எம். கே. முருகானந்தன் 'இரு பாடசாலை நாடகங்கள் சில அவதானிப்புகள்' என்ற தலைப்பில் விமரிசனம் செய்திருந்தார்.

"ஆச்சி சுட்ட வடை" குழந்தை சண்முகலிங்கத்தின் மூலப்பிரதியை அடிப்படையாகக் கொண்டது "The Last Warning" என்ற ஆங்கில நாடகத்தை கல்லூரி ஆசிரியர்களில் ஒருவரான எஸ். சுந்தரமூர்த்தி எழுதியிருந்தார்.

சிறுவர் நாடகத்தில் 7ஆம் ஆண்டைச் சேர்ந்த 21 மாணவர்கள் பங்குபற்றினார்கள். அதிக எண்ணிக்கையான சிறுவர்களை மேடையேற்றினாலும் அவர்கள் ஒருமித்த உணர்வுடன் நடித்தும் பாடியும் விளையாடியும் திறமையைக் காட்டினார்கள். ஆடலுக்கும், பாடலுக்கும் விநோத நிகழ்ச்சிகளுக்கும் நிறைய வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்ததினால் சிறுவர்கள் உச்சாகத்துடன் இயற்கையாக நடித்தார்கள்.

ஆங்கில நாடகம் கருத்திற்கு முக்கியத்துவம் அளித்தது. மரங்களை அழித்து இயற்கை வளங்களை குலைத்து விடக்கூடாது என்ற நல்ல கருத்தை வலியுறுத்தியது. அழகான வசனங்களை பெரும்பாலும் சரியாக உச்சரித்தார்கள். இதனைத் தமிழ்ப்படுத்தியதினால் பயன்பாடு அதிகமாகும் வாய்ப்பு உள்ளது.

90ஆம் ஆண்டு சிவராத்திரி விழாவின் போது புலோலி பசுபதீஸ்வரர் ஆலயத்திலும், தம்பசிட்டி மாயக்கைப் பிள்ளையார் ஆலயத்திலும் 'ஆச்சி சுட்ட வடை' பல்லாயிரக்கணக்கான ரசிகர்களின் முன் மேடையேறியது. நவீன நாடக உத்திகளும் சிறுவர் நாடகப் பண்புகளும் வடமராட்சியில் முதற் தடவையாகப் பரந்துபட்டு வேரூன்றத் தொடங்கியது எனலாம். 1994ம்

ஆண்டு மீண்டும் புதிய மாணவர்களைக் கொண்டு ஞான சம்பந்தர் கலை மன்ற ஆண்டு விழாவிற்காக நிகழ்த்தப்பட்டதுடன் 7 தடவைகள் மேடையேறியது.

பின்னர் சிவராத்திரிக்கு புலோலி பசுபதீஸ்வரர் ஆலயத்தில் வருடாவருடம் நாடகங்களை கல்லூரி நாடக மன்றம் வழங்கி வருகின்றது. இதில் ஆசிரியை செல்வி வ. ஆறுமுகத்தின் புராண, இதிகாச நாடகங்கள் சிறப்பாக நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

எமது கல்லூரியில் 93ஆம் ஆண்டு பரிசளிப்பு விழாவிற்காக ''சத்திய சோதனை'' என்னும் நவீன நாடகம் நிகழ்த்தப்பட்டது. கலாநிதி ஞானகுமாரின் அருளம்பல சுவாமிகள் புத்தக வெளியீட்டு விழாவிலும் திறந்த வெளி அரங்கில் நிகழ்த்தப்பட்டது. மீண்டும் 95ஆம் ஆண்டு கோட்ட மட்ட கலை விழாவில் நிகழ்த்தப்பட்டு மொத்தமாக 10 தடவைகள் மேடையேறியது. கல்வி சார்ந்த பிரச்சனை நவீன நாடக உத்திகளுடன் பொதுமக்கள் மத்தியிலும், மாணவர் மத்தியிலும் அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடக்கூடியதொன்றாகும். இந்த நாடகம் பற்றியும் டொக்ரர் எம். கே. முருகானந்தன் அவர்கள் மல்லிகைச் சஞ்சிகையில் சிறப்பான விமர்சனம் ஒன்றை எழுதி இருந்தார். 'மேடை ஏறாத மணி விழாவும் மேடை பல காணும் நாடகமும்" என்ற தலைப்பில் இந்த விமர்சனம் அமைந்திருந்தது. இலங்கையில் சிறப்புமிக்க நாடக ஆசிரியர் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் மணிவிழா ஆண்டில் மிக்க பொருத்தப்பாட்டுடன் இக்கட்டுரை வெளிவந்து ஒரு வரலாற்றுக் கடமையையும் செய்துவைத்தது. '' எண்பதுகளின் ஆரம்பம் முதல் இன்று வரை ஈழத்தமிழ் நாடக உலகில் எல்லா அம்சங்களிலும் அடிப்படைச் சக்தியாக விளங்கிவரும் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் பிரதியாக்கத்தை திறந்தவெளி அரங்குபோன்ற வெறித்த அரங்கு. அங்கு சோடனைகளோ அலங்காரங்களோ சீன்களோ கிடையாது. நடிகர்கள் யாவருக்கும் ஒரே விதமான உடையலங்காரம், கறுத்த ஜீன்சும் முழுக்கை வெள்ளைச் சேர்ட்டும் தான்- குரல்களின் ஏற்றத் தாழ்வுகளாலும், காத்திரமான அங்கவீச்சு அபிநயங்களாலும் எட்டத்தே நிற்கும் பார்வையாளர்களுக்கும், தாம் சொல்ல வந்த, காட்ட வந்த சேதிகளை புரிய வைத்தார்கள் அந்த இளம் நடிகர்கள்.

நரிகளாகவும், பரிகளாகவும் அணுகுண்டாகவும், பூமியாகவும், எரிமலையாகவும் அவர்களே வளைந்து நெளிந்தனர், உருண்டு திரண்டனர், துள்ளிப் பாய்ந்தனர். சுழன்றனர், சீறிப் பாய்ந்தனர், வெடித்துச் சிதறினர். இந்நாடகத்தில் நடிகர் உரைஞர் பாடுனர் முதலிய நவீன நாடகத்தின் முக்கிய பிரிவினர் இருந்தபோதும் நாடகம் செல்லும் வேகத்தில் அவர்கள் யாவரும் சங்கமமாயினர். எல்லாரும் எல்லாமாய்க் கரைந்தனர். ஆயினும் நாடகம் எழுந்து நின்றது '' இந்நாடகம் ஞானசம்பந்தர் கலைமன்றம், சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம் என்பவற்றிலும் மேடையேறியது.

92ஆம் ஆண்டில் ''ஒரு பூனையின் விலையென்ன'' என்ற சிறுவர் நாடகமும் குறிப்பிடக்கூடியதொன்றாகும். பாடசாலை மேடையேற்றத்தின் பின்னர், அறிவோர் கூடல் ஆண்டுவிழாவிலும் ஞானசம்பந்தர் கலை மன்ற ஆண்டுவிழாவிலும் மேடையேறியது. மந்திரவாதியாக நடித்த அ. ஜெகேந்திராவும், தெனாலிராமனாக நடித்த ம. மயூரனும் நல்ல நடிகர்களாக இனம்காட்டிக் கொண்டனர்.

93ஆம் ஆண்டில் அதிபர் பொன். பாலசிங்கம் அவர்களின் பிரியாவிடை வைபத்தின்போது கலாநிதி பி. மௌனகுருவின் ''தப்பி வந்த தாடி ஆடு'' நாடகம் சிறப்பாக நிகழ்த்தப்பட்டது. பல்வேறு இடங்களில் குறிப்பாக துன்னாலை வல்லியானந்தம் பாலர் பாடசாலையிலும், ஞானசம்பந்தர் கலைமன்றத்திலும் வட இந்து மகளிர் கல்லூரியிலும் என 6 தடவைகள்

இந்நாடகம் மேடையேறியது. இந்நாடகம் பற்றி நாட்டுக்கூத்து கலைஞர் ஆர். எஸ். ஆனந்தன் தனது விமர்சனக் கட்டுரையொன்றில் குறிப்பிடுகையில் "சிங்கம் அரங்கத்தில் எட்டடிமானம் போட்டு ஆடிவருகிறது. முறையான திக் திக் தா போட்டு கால்கள் அசையாவிட்டாலும், உண்மையான நாட்டுக்கூத்து ஆட்டத்தைச் சிறுவர்களுக்கான அளவில் வெளிக்காட்டுகின்றது. வடகோடி இராசகூத்தாட்டத்தின் இறுதியாட்டத்தை அதாவது 3ம் கால ஆட்டத்தில் வரவை வைத்தது மிக்க கம்பீரமாக இருந்தது. அரங்கில் அனைவரினதும் பார்வை தாடி ஆட்டின் மீது பதிந்திருந்ததை நான் காணக்கூடியதாக இருந்தது. எல்லா மிருகங்களையும் உற்றுக் கவனித்து எல்லாவற்றையும் உள்வாங்கி அந்தந்த மிருகங்களைப் போல் கொண்டு வந்து தனக்குரிய ஆட்டத்தை ஆடுவதைக் கவனிக்கும் போது அந்த மாணவனின் (ச விமலேஸ்வரா) ஆக்கத் திறமையையும் கற்பனை ஆற்றலையும், பகுத்துப் பார்க்கும் திறமையையும் ஒருங்கே வெளிக் கொண்டுவருவதில் நெறியாளர் வெற்றி கண்டுள்ளார் என்றுதான் கூறவேண்டும்.

இதேவேளை 93ஆம் ஆண்டு ஆங்கில தினவிழாவில் சுந்தரமூர்த்தியவர்கள் எழுதிய 'The Raveal' என்ற ஆங்கில நாடகமும் இடம் பெற்றது. 90களில் சிறுவர் நாடகங்களையும், நவீன நாடக்ங்களையும் ஆங்கில நாடகங்களையும் ஆசிரியர் பா. இரகுவரன் அவர்கள் நெறியாள்கை செய்திருந்தார்.

நாடகங்களுக்கான பின்னணி இசையாக ஆர்மோனிய இசையை 90, 92ஆம் ஆண்டுவரை ஆசிரியை செல்வி த. சரோஜா அவர்கள் வழங்கினார். பின்னர் இவரது மாணவன் இ. இராகவன் வழங்கிவருகிறார். மிருதங்க இசையை வ. ரமணா, சி. ஞானபாலன், இ. யோகேஸ்வரன் ஆகியோர் வழங்கிவருகின்றனர். வ. இராஜ்குமாரின் ஓகன் இசையும் நாடகத்துக்கான மனநிலையைச் சிருஷ்டிப்பதில் பெரும் பங்குவகித்தது.

ச. இராகவானந்தன் ஆசிரியர் பின்னணிப் பாடகராக தன்குரல் இனிமையாலும், எஸ். சற்குணராசா ஆசிரியர் ஒப்பனைத் திறமையாலும் நாடகங்கள் பலவற்றை சிறக்க வைத்துள்ளனர்.

200 க்கு மேற்பட்ட மாணவர்கள் நாடக நிகழ்வுகளில் பங்கேற்று பன்முகப்பட்ட ஆழுமை விருத்தியை பெற்றுள்ளனர். நாடகம் ஒருவலிமையான ஊடகம் அகருத்து வெளிப்பாட்டுக்கும், பொழுது போக்கிற்கும் உடல் திறன், மனமுதிர்வு; போன்றவற்றை பெற்றுக்கொள்ளவும் வழிகோலுகிறது. மாணவர்களின் பல்வேறு நலன்களையும் கருத்திற்கொண்டு கல்லூரி நாடகமன்றம் எதிர்காலத்தில் பல்வேறு திட்டங்களை நோக்காகக் கொண்டு இயங்கிவருகிறது.

ஹாட்லிக் கல்லூரி நாடகமன்றம்
செயற்குழு

அறிவின் விளைவு ஞானம்
பண்பாட்டின் விளைவு பூரணத்துவம்
ஞானத்தின் விளைவு பூரணவிடுதலை
கல்வியின் விளைவு நல்லொழுக்கம்

சைவ மன்ற அறிக்கை - 1994

கல்லூரியில் பயிலும் மாணவர்களிடையே சைவமத அறிவையும் ஒழுக்கத்தையும் வளர்ப்பதற்காக அமைக்கப்பட்டு நற்பணிகள் பலவற்றை சைவமன்றம் இற்றை வரை ஆற்றிவந்துள்ளது. 1991ஆம்ஆண்டு வரை சைவமன்ற நிர்வாகசபை ஆசிரியர்களிடையே தெரிவுசெய்யப்பட்டு ,நெறிப்படுத்தப்பட்டு வந்தது. இந்நடவடிக்கையில் மாணவர்களைப் பங்கு கொள்ளச் செய்வதற்காகவும் அவர்களின் ஆளுமையை வளர்ப்பதற்காகவும் பொறுப்பாசிரியர் ஒருவரின் மேற்பார்வையில் 1992ஆம் ஆண்டு முதல் நிர்வாகசபை மாணவர்களிடையே தெரிவுசெய்யப்பட்டது. ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் வகுப்புப் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களிடையே தலைவர், உபதலைவர், இணைச் செயலாளர், பொருளாளர் என்ற வகையில் நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது. சைவமாணவர்கள் அனைவரும் இம்மன்றத்தில் அங்கத்துவம் வகிப்பதால் மன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் ஒரு வருடத்திற்கு ரூ 6/- அங்கத்துவப் பணமாகச் செலுத்தவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சைவமன்றம் பாடசாலை நடைபெறும் வெள்ளிக்கிழமை நாட்களில் பூரணம்பிள்ளை மண்டபத்தில் ஆண்டு 9க்கு மேற்பட்ட மாணவர்களுக்கும், தாமோதரம்பிள்ளை மண்டபத்தில் ஆண்டு 6, 7, 8 மாணவர்களுக்கும் பிரார்த்தனைகளை ஒழுங்கு செய்தது. இப்பிரார்த்தனையில் பஞ்சபுராணம் ஓதல், சிவபுராணம் ஓதல் மாணவர்களின் சைவநற்சிந்தனை ஆகியன வழமையாக நடைபெற்று வந்தன.

ஆண்டு தோறும் பாடப்பெற்ற தலமாகிய திருக்கேதீச்சவரத்தில் 6ம் நாள் உற்சவத்தின் இரவு உபயத்தை பாடசாலை சார்பில் 1990ஆம் ஆண்டுவரை சைவமன்றம் மேற்கொண்டது. 1991ஆம் ஆண்டின் பின்னர் நாட்டில் சுமுகமற்ற நிலை காரணமாக செய்யமுடியாத நிலை ஏற்பட்டது.

ஆண்டுதோறும் மகாசிவராத்திரி தினத்தன்று பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலயத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கல்லூரி மாணவர்களின் நிகழ்ச்சிகளை சைவமன்றம் ஒழுங்குசெய்து கொடுத்துள்ளது. இவ்வகையில் பின்வரும் நாடகங்கள் அரங்கேறின.

1992 — 'இசையும் கதையும்'
1993 — 'ஆட்கொண்ட பிரான்'
1994 — 'சொல்வேந்தர்.'

இந்நிகழ்ச்சிகள் மக்களின் பாராட்டுக்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆண்டுதோறும் அகில இலங்கை ரீதியாக சைவபரிபாலன சபையால் ஆண்டுரீதியாக நடாத்தப்படும் சைவசமய பாடப்பரீட்சையில் எமது கல்லூரி மாணவர்களைப் பங்கு கொள்ளச் செய்வதிலும் சைவமன்றம் ஈடுபட்டது. இதன்பேறாக பெருமளவான மாணவர்கள் நற்சான்றிதழ்களைப் பெற்று பெற்றதுடன் பின்வருவோர் அகில இலங்கைரீதியான பரிசில்களைப் பெற்று பாராட்டுக்களைப் பெற்றனர்.

1993 ஆண்டு 8 மூன்றாம் பரிசு செல்வன் தருமலிங்கம் காண்டீபன்

1994 ஆண்டு 10 மூன்றாம் பரிசு செல்வன் கனகரட்ணம் சத்தியமூர்த்தி

அத்துடன் 1995 ஆம் ஆண்டு வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் நடாத்திய சைவசமய அறிவுப் பரீட்சையிலும் எமது கல்லூரி மாணவர்கள் பங்குபற்றி சான்றிதழ்களைப் பெற்று பாராட்டையும் பெற்றனர்.

ஆண்டுதோறும் சைவமன்றத்தினால் நவராத்திரி விழா கொண்டாடப்பட்டது. இந்நாட்களில் பத்து நாட்களும் வாணி பூசை நடைபெற்று சகலகலாவல்லிமாலை ஓதப்படுவதுடன் மாணவர்களது நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது. இறுதிநாள் சிறப்புச் சொற்பொழிவுகளும் நடைபெற்றது. இவ்வகையில் பின்வரும் சிறப்புச் சொற்பொழிவாளர்களால் சிறப்புச் சொற்பொழிவாற்றப்பட்டன.

1993 — திரு.ச. விநாயகமூர்த்தி (சிரேஷ்ட போதனாசிரியர், யாழ்.பல்கலைக் கழகம்)

1994 — திரு. த. கலாமணி விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகம்)

இந் நவராத்திரி விழாவை முன்னிட்டு மாணவர்களிடையே நல்ல பயிற்சிகளை ஏற்படுத்தும் வகையில் கீழ்ப்பிரிவு (ஆண்டு 6, 8) மத்தியபிரிவு (ஆண்டு 9, 11) மேற்பிரிவு (ஆண்டு 12, 13) என மூன்று பிரிவுகளாகப் பிரித்து மாலை கட்டுதல் புள்ளிக் கோலம் இடுதல், பண்ணிசைப் போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி ஆகியன நடாத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இப்பரிசில் வழங்கும் நிகழ்ச்சி பிற்பட்ட ஒருநாளில் ஏற்படுத்தப்பட்டு அந்நாளில் ஒரு சிறப்புச் சொற்பொழிவாளரை அழைத்து அவரது சொற்பொழிவைத் தொடர்ந்து அவர்களால் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இவ்வகையில் பின்வருவோர் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.

1993 — சுவாமி சித்ரூபானந்தா
— ஸ்ரீசாரதா சேவாச்சிரமம் பருத்தித்துறை

1994 — செல்வி அ. கனகரட்ணம்
— அதிபர் வட இந்துமகளிர் கல்லூரி,
பருத்தித்துறை.

சைவமன்றம் சமய அறிவைப் பெருக்கும் நோக்குடன் பெரியோர்களது குருபூசை தினங்களையும் கொண்டாடியது. இக் குருபூசைகளில் மாணவர்களின் நிகழ்ச்சியுடன் பின்வரும் சிறப்புச் சொற்பொழிவாளர்களால் சிறப்புச் சொற்பொழிவும் ஆற்றப்பட்டன.

1992—ஸ்ரீராமகிருஷ்ணர் நினைவுதினம்
— திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்கள்
(ஆசிரியர், அல்வாய் சின்னத்தம்பி வித்தியாசாலை)

1993— திருஞானசம்பந்தர் குருபூசை
— திரு. த. சிவகுமாரன் அவர்கள்
(ஆசிரியர், யாழ் இந்துக்கல்லூரி)

1994— மாணிக்கவாசகர் குருபூஜை
— திரு. சி. வேலாயுதம் அவர்கள்
(அதிபர், கரணவாய் மகாவித்தியாலயம்)

இவ்வகையில் மாணவர்களிடையே சமய நூல்களை வாசிக்கும் பழக்கத்தை தூண்டும் வகையில் சமயநூல் கண்காட்சி ஒன்றினை எமது கல்லூரியில் பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா அவர்கள் நடாத்தினார். இவ்வைபவத்தை ஆரம்பித்து வைத்த சுவாமி அவர்கள் கல்லூரிக்கு பல ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்பாக வழங்கியதுடன் குறைந்தவிலையில் ரூ. 8000/- க்கு மேற்பட்ட புத்தகங்கள் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் விற்பனை செய்யப்பட்டது.

மேலும் கல்லூரியின் அயலில் அமர்ந்துள்ள ஆலயங்களில் கும்பாபிஷேகம் நடைபெற்றபோது மாணவர்களிடமிருந்தும் ஆசிரியர்களிடமிருந்தும் நிதி சேகரித்து வழங்கப்பட்டது. இவ்வகையில் கல்லூரி மைதானத்தின் அருகில் அமைந்துள்ள ஆலடிப்பிள்ளையார் கோவிலில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து நடைபெற்ற மண்டலாபிஷேகத்தில் ஒருநாள் கல்லூரி சார்பில் பொறுப்பேற்று இனிதே நிறைவேற்றியது.

இவ்வாறு சைவமன்றப் பணிகள் செவ்வனே நடைபெற்று வருகின்றது. இவை சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு நல்கிய

அதிபர், ஆசிரியர்கள், நிர்வாகசபை உறுப்பினர்கள் மாணவர்கள் ஆகியோருக்கும் சிறப்புச் சொற்பொழிவுகளை வழங்கிய சிறப்புச் சொற்பொழிவாளர்களுக்கும், ஒத்துழைப்பு நல்கிய மற்றும் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொறுப்பாசிரியர்: திரு. ஆ. சிவநாதன்

நிர்வாகசபை — 1992 — 1994

		1992	1993	1994
தலைவர்	:–	செ. வைகுந்தன்	ஐ. முருகதாஸ்	ஜே. முகுந்தன்
உப தலைவர்	:–	—	—	க. குகனேசன்
இணைச் செயலாளர்கள்	;–	ரீ. அரவிந்	மு.பொ.கு. முகுந்தன்	எஸ். அன்பழகன்
		இ. இரஞ்சிதன்	சோ. கனகசுந்தரம்	ஜி. பாலபவன்
பொருளாளர்	:–	எஸ். ஜெயபாஸ்கர்	இ. சசிகரன்	ரீ. முருகானந்தன்

அகில இலங்கை சைவபரிபாலன சபை
சமய பாடப் பரீட்சை

1992

		ஏ	பி	சி
ஆண்டு	6	03	24	76
	7	22	42	69
	8	77	10	04
	9	38	20	19
	10	24	44	12
	11	30	39	07

1993

		ஏ	பி	சி
ஆண்டு	6	56	38	29
	7	15	48	4[illegible]
	8	72	23	12
	9	97	.13	05
	10	09	36	45
	11	06	25	46

அகில இலங்கைப்பரிசில் ஆண்டு 8 - மூன்றாம் பரிசு:-

தர்மலிங்கம் காண்டீபன்

1994

		ஏ	பி	சி
ஆண்டு	6	40	49	33
	7	30	56	38
	8	88	24	09
	9	86	25	11
	10	73	34	06
	11	43	25	18

செயலாளர்.

கிறிஸ்தவ மாணவ மன்றம்

கிறிஸ்தவ மாணவ மன்ற சார்பில் இவ் வறிக்கையை வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

இம்மன்றம் கல்லூரியின் ஆரம்ப காலங்களிலிருந்தே இயங்கிவருகின்றது. ஆயினும் அண்மைக்காலங்களில் நாட்டின் சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட நெருக்கடிகள் காரணமாக சுமூகமாக தொடர்ந்து இயங்க முடியாமற் போனமை மிகவும் மனவருத்தத்திற்குரியதாகும். எனினும் கல்லூரி அதிபரினதும், கிறிஸ்தவ ஆசிரியர்களினதும் ஊக்குவிப்பினால் மீண்டும் துளிர்விட்டு மிளிரத் தொடங்கியமை பெருமகிழ்ச்சிக்குரியதாகும். மன்றத்தை மீண்டும் புத்துயிர் பெறச் செய்வதில் முனைப்பாக நின்றுழைத்த திருமதி. இ. செல்வராசா ஆசிரியை அவர்களையும் செல்வி மே. செபமாலை ஆசிரியை அவர்களையும் நாம் இவ்விடத்தில் குறிப்பிடுவது சிறந்தது.

மாணவர்களிடையே இறைபக்தியை வளர்க்கவும் கிறிஸ்தவம் பற்றிய ஆழமான அறிவைப் பெறவும் கிறிஸ்தவ மதிப்பீடுகளை தாமும் கடைப்பிடித்து மற்றவர்களுக்கு வெளிப்படுத்தவும், ஆன்மீக காரியங்களில் ஈடுபடவும் நற்பண்புள்ள பிரசைகளாக வளரவும் ஆளுமையை விருத்தி செய்யவும் இம்மன்றம் பெரிதும் துணைபுரிகின்றது. பிரதி வெள்ளிக்கிழமைதோறும் மன்ற அங்கத்தவர்கள் ஒன்று கூடுவர். அவ்வேளை வழிபாடுகள் நடாத்தப்படும். வழிபாட்டின் போது போதகராலோ, ஆசிரியராலோ அருளுரை வழங்கப்படும். தொடர்ந்து கிறிஸ்தவ பாடற்பயிற்சியும், மன்ற கலை நிகழ்வுச் செயற்பாடுகளும் இடம் பெறும்.

வருடம் தோறும் கிறிஸ்மஸ் விழாவும் உயிர்ப்பு விழாவும் இம்மன்றத்தினால் கொண்டாடப்படும் பிரதான விழாக்களாகும். அன்று கிறிஸ்தவ மாணவர்களால் கலை நிகழ்ச்சிகள் நடாத்தப்படும். 1992ம் ஆண்டு கிறிஸ்மஸ் விழாவின் போது செல்வி. மே. செபமாலை ஆசிரியை அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் நடாத்தப்பட்ட 'காணிக்கை' என்ற நாடகம் பலரின் பாராட்டைப் பெற்றதென்பது குறிப்பிடத்தக்கது. விழாக்களின் முடிவில் கல்லூரி ஆசிரியர்களும் மன்ற அங்கத்தினரும் தேநீர் விருந்துபசாரத்தில் கலந்து மகிழ்வர். வருடாந்தம் யாழ். மாவட்டத்தில் நடைபெறும் பொதுவான 'கரோல்' பாடல் நிகழ்ச்சிகளில் எம்மன்ற அங்கத்தினர் பங்குபற்றி வருகின்றனர்.

எமது மன்ற அங்கத்தவர்களும் மெதடிஸ்த சபையினரும், மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை கிறிஸ்தவ மாணவ ஒன்றிய அங்கத்தினரும் இணைந்து வருடாவருடம் ஆவணி 29ம் நாள் மெதடிஸ்த தினத்தைக் கொண்டாடி வருகின்றோம். முன்னர் இந்நாள் கல்லூரியின் தினமாக சிறப்பாகக் கொண்டாடப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

மன்ற அங்கத்தினர் பரீட்சைகளில் சித்தியெய்தி சிறந்த பெறுபேற்றினைப் பெற்று பெருமை சேர்ப்பதுடன் ஏனைய இணைச் செயற்பாடுகளிலும் தமது திறன்களையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்தி வருகின்றனர். இத்தகைய செயற்பாடுகள் மூலம் மன்ற அங்கத்தினர்கள் கிறிஸ்தவ வாழ்விற்குச் சான்றாக வாழ்ந்து வருகிறார்களென்று கூறுவதில் மகிழ்வடைகின்றோம்.

செயலாளர்

ஆசிரியர் சங்கத்தின் ஒரு தசாப்தகால நினைவலைகள்

பூாம் பூத்த காட்லியின் ஆசிரியர் சங்கத்தின் தலைமையை காலத்துக்குக் காலம் பொறுப்பேற்று வழிநடத்திய திறமை மிக்க தலைவர்கள் பலர் இன்றைய இளைய தலைமுறையில் திரு. எஸ். அரியலிங்கம் தலைமையை ஏற்று நடத்திச் செல்வது குறிப்பிடத்தக்கது. இன்றைய போர்க்காலச் சூழலில் சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் பல இடர்ப்பாடுகளை நாம் சந்திக்க நேரிடினும் இயன்றவரை ஆசிரியர்களின் நலன்களை பொறுப்புடன் கவனித்து வருகிறோம்.

காட்லி ஆசிரியர் சங்கத்தின் கடந்த 10 ஆண்டுகால நடவடிக்கைகளை பின்நோக்கிப் பார்க்கும்போது மறைந்த சக உறுப்பினர்களை நினைவு கூர வேண்டியவர்களாகிறோம். அதில் முன்னாள் அதிபர் டபிள்யு. என். எஸ். சாமுவேல், மூத்த ஆசிரியரும், பகுதித்தலைவருமான திரு. கே. விநாயகம் பிள்ளை ஆங்கில ஆசிரியை திருமதி. குல சேகரம் போன்றோர் எம் நெஞ்சைவிட்டு அகலாத சந்தனக் கட்டைகள்.

ஆசிரியர் சங்க நிர்வாகத்தைப் பொறுப்பேற்போர் ஆசிரியர்களிடையே என்றும் நட்பை வளர்க்க அரும் பாடுபட வேண்டும் என்பார் முன்னாள் அதிபர் திரு. பொன். பாலசிங்கம் அவர்கள். அவர் நட்பின் மூலமும் தனக்கே உரித்தான நகைச்சுவை மூலம் கல்லூரி முகாமைத்துவத்தைச் சிறப்பாகச் செய்தார் என்பது நாமெல்லாம் அறிந்த விடயம். இதுஓர் புதிய பரிமாணம், அன்னார் அதிபராக இருந்த ஒரு தசாப்த்த காலத்தில் கல்லூரிக்கு ஏற்பட்ட பல தரப்பட்ட சோதனைகளை தன் சிரிப்பாலும் நட்பினாலும் ஆளுமையாலும் சாதனைகளாக்கினார். அவற்றிற்கெல்லாம் ஆசிரியர் சங்கம் தன்னாலான ஒத்துழைப்பை உறுதியுடன் வழங்கிவந்துள்ளது.

1985 இல் கல்லூரியை திடீரென இராணுவத்தினர் ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து அயற் கிராமமான புற்றளைக்கு இடம் பெயரவேண்டி ஏற்பட்டது. முதல் 1989 பிற் பகுதிகளில் பழைய இடத்துக்கு மீளும் வரை மாணவர், ஆசிரியர் நலன்களைக் கருத்திற் கொண்டு சங்கம் பெரும் தொண்டாற்றியுள்ளது. கல்வி வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் சிற்றுண்டிச்சாலையை அமைத்து அதை சிறப்புற நிர்வகித்து வந்தது. விளையாட்டுத்துறைக்கென, மறைந்த சக ஆசிரியர் திரு. எம். இராமகிருஷ்ணன் ஞாபகார்த்தமாக வெற்றிக் கிண்ணமொன்றையும் கொடுத்துதவியது குறிப்பிடத்தக்கது.

திரு. ஆர். இராஜரத்தினத்தின் (பீ ரி) விருந்துபசாரத்தின் பின் அந்நியப்படைகளின் மிலேச்சத்தனமான தாக்குதலினால் இரத்தம் சிந்திய சங்க ஆசிரியர்களின் ஓலங்கள் என்றும் அவர் தம் இதயங்களில் அழியாத கோலங்கள். இடிபாடுகள் இடர்பாடுகளுக்கு மத்தியில் கல்லூரி மாதாவிடம் மீண்டும் சேர்ந்து கொண்டபோது அடிப்படை வசதிகள் அற்ற அருவருப்பான ஆசிரியர் அறையில் நாம் பட்ட அவலங்கள் அநேகம் எமது கஸ்டங்களைப் புரிந்து கொண்டு கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் ரூ 12000ஐ வழங்கி ஆசிரியர் அறையை செப்பனிட்டுத் தந்தது கல்வித் தேவை அறிந்து எமக்களித்தமறக்க முடியாத உதவி.

ஆசிரியர் சங்கத்தைப் பொறுத்தவரை விளையாட்டுத்துறையில் அதன் செயற்பா

டுகள் தனித்துவமானவை. ஏனைய கல்லூரிகளின் ஆசிரியர் சங்கங்களுடனும், கல்லூரி மாணவ தலைவர்களுடனும் துடுப்பாட்டம் உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களில் நட்புரீதியான போட்டிகளை நடாத்துவது வழக்கம். இப்போட்டிகளின் மூலம் ஆசிரியர்களின் உடல், உள நலன்களை விருத்தி செய்யக்கூடியதாக இருந்திருக்கிறது. அண்மைக்காலங்களில் இத்துறையில் போதிய அளவு அக்கறை காண்பிக்கப்படாதது விசனத் துக்குரியதே, இருப்பினும் வருங்காலங்களில் இதற்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கப்படும்.

ஆள்பாதி ஆடைபாதி என்பர் உடையும் வெள்ளை உள்ளமும் வெள்ளை அவர்தான் இன்றைய அதிபர் திரு. கே. நடராஜா. நடையில் ராசா எதிலும் நிதானமாக மென்மையாக நடைபதிக்கும் இவர் பொறிக்கும் ஒவ்வொரு எழுத்துக்களும் ஆசிரியர் மீது கொண்ட வாஞ்சையும் சங்கம் பெற்ற சீதனங்கள்.

நன்றி

பா. ஜெயகோபால்
செயலாளர்
ஆசிரியர் சங்கம்.

ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் (தாய் சங்கம்) சங்க அறிக்கை

1984-09-01ம் நாளிலிருந்து சோகப்பாதையில்...

145 ஆண்டு காலப் பாரம்பரியம், வளர்ச்சி, சாதனைகள் எல்லாம் மேற்கூறிய நாளில் சாம்பாராக்கப்பட்டதுடன் ஹாட்லியின் வரலாற்றுத் திருப்புமுனை சோகப் பாதையில் ஊர்ந்து நடக்கத்துவங்கியது. நூல் நிலையம் இருந்த நிலையிலிருந்து இல்லாமல் ஆக்கப்பட்டதுடன் கட்டிடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு கல்லூரி வளவிலிருந்து வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டு கையில் கிடைத்ததுடன் ஏதிலிகளாக ஆசிரியரும் மாணவரும் அகதிகளாக இடம் பெயர்ந்தனர். சகல வளங்களும் அழிக்கப்பட்டு நெற்றிப் பொட்டிலடிக்கப்பட்டு இரத்தக்கண்ணீர் வரவழைத்த வரலாற்றைக் கூறுவதே எமது நோக்கம். எமது மன்றமும் இக்காலை ஏதும் செய்ய முடியாமற்போய் பின்னர் உதறிக்கொண்டெழுந்து உறவை நெருக்கிக் கொண்டு வேண்டுவனவெல்லாம் செய்வதும் தார்மீகக் கடமைகளாகும்.

கல்லூரியின் வடக்கெல்லையில் முகாமொன்று அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்பையும் மீறி நூல் நிலையம் எரியூட்டப்பட்டது. அதிபர் திரு. W. N. S. சாமுவேல் அவர்கள் முயற்சியால் சிலவற்றைக் காப்பாற்ற முடிந்தது. கல்விப்பணிப்பாளர் அரசஅதிபர் ஆகியோரைச் சந்தித்தும் மீளமைக்க நிதி ஒதுக்கியும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட மறுப்புத் தெரிவிக்கப்பட்டமையால் 1985ல் கல்லூரி வளவிலிருந்து வெளியேற வேண்டியேற்பட்டது. இரண்டு மாதகாலம் உயர் வகுப்புக்களை மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடத்தியபின் நிரந்தரமாக புற்றளை மகா வித்தியாலயத்துக்கு எல்லா வகுப்புக்களையும் நடத்த கிடைத்த தளபாடங்களுடன் செல்லவேண்டியேற்பட்டது. எமது கல்லூரி மாணவர்களின்பால் அக்கறை கொண்டு அகதிகளான எமக்குப் புகலிடமளித்த இரு பாடசாலைகளினதும் அதிபர்கள் ஆசிரியர்கள் என்றும் எமது நன்றிக்குரியவர்கள்.

இதனிடையே நூல் நிலையம் எரியூட்டப்பட்டு அதனால் உணர்வுத் தீப்பிழப்பின் உச்சியில் இருந்த ஹாட்லிச்சமூகம் (பெற்றோர், பழையமாணவர், நலன்விரும்பிகள்,

சமூக நிறுவனங்கள்) கல்லூரியை இயங்க வைக்க எல்லா வசதிகளையும் செய்ய முன்னின்றது. முதற்படியில் நின்றவர்கள் பட்டயக் கணக்காளர் திரு. அ. சோமசுந்தரம் பிள்ளை, குகன் ஸ்ரூடியோ திரு. அ. நாகரத்தினம் ஆவார்கள். பின்னர் யாழ். பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த எமது பழையமாணவர் ரூ. 23,000/- சேகரித்தும் வல்வை உடுப்பிட்டி இளைஞர்கள் ரூ. 40000/-ம் லயன்ஸ் கழகத்தினர் புத்தகங்கள் சேர்த்தும் பேருதவி புரிந்தனர். Saturday Review ஆசிரியர் திரு. காமினி நவரத்னவும் போற்றுதற்குரியவர். புலோலி பகுதியில் சில பெரியோர் சேர்ந்து ரூபா 40000/- சேர்த்து பிரஜைகள் குழுவினர் மூலம் புற்றளையில் வகுப்பறைகளை நிருமாணித்துக் கொடுத்தனர். போருட் நிறுவனப் பொறியியலாளர் எமது பழைய மாணவர் திரு. மரிக்கார் தட்டச்சு இயந்திரத்தையும் தமிழர் புனர்வாழ்வுக் கழக செயலாளர் திரு. ப. அரவிந்தன் Roneo இயந்திரம், இரும்பு அலுமாரிகள், Show Case என்பவற்றையும் வழங்கினர், இவையெல்லாம் காலத்தால் செய்யப்பட்ட ஞாலப்பெரிய கடமைகள் என பேருவகை அடைவோம்.

இக்கால கட்டத்தில் அதிபர்களாகப் பொறுப்பேற்ற திருவாளர்கள் பொ. பாலசிங்கம், க. நடராசா எஞ்ஞான்றும் வரலாற்று நாயகர்களாக மதிக்கப்படவேண்டியவர்கள், கற்பனைக்கு அப்பாற்பட்ட துணிச்சலுடன் கடமை செய்தவர்கள் என்பதையும் ஏற்கவேண்டும். கல்வித்தரம் ஏனைய நிகழ்வுகள் குன்றாமல் நடைபெற ஒத்துழைத்த அனைத்து ஆசிரியர்களும் போற்றுதற்குரியவர்கள்.

திரு. அ. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் Cambridge Biological Society ஆல் Man of Achievement சிறப்புப்பெற்றதையும் பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தராக நியமிக்கப்பட்டதையும் ஒட்டி சிறப்பு நிகழ்வு ஒன்றை மன்றம் நடத்தியது. 150ம் ஆண்டு நிகழ்வுகள் லண்டன் கிளை, கொழும்புக் கிளை, தாய்ச்சங்கம் என்பவற்றால் 1988ம் ஆண்டில் நடத்தப்பட்டன. லண்டனில் 2-10-88ல் திரு. A. T. S. இரத்தினசிங்கம் தலைமையில் முன்னாள் அதிபர் C. P. தாமோதரம் அவர்களின் மகன் C. J. T. தாமோதரம் அவர்களையும் திரு. க. பூரணம்பிள்ளை அவர்களின் மூத்த மகள் திருமதி சாந்தி. அருளானந்தம் அவர்களையும் அழைத்துச் சிறப்பு நிகழ்வை நடத்தினர். கொழும்புக் கிளையினர் 75சத தபால் முத்திரையும், நினைவு மணிக்கூடு, கல்லூரிச் சின்னத்துடன் வெளியிட்டு தமது பங்கைச் செய்ததோடு முத்திரை வெளியீட்டை தாய்ச்சங்கம் கல்லூரியில் 5-6-89ல் நடத்த ஒழுங்குகளையும் செய்து தந்தனர். தாய்ச்சங்கமும் 1990ம் ஆண்டு பெப்ருவரி மாதம் மீண்டும் கல்லூரிக்கு வந்த பின்னர் மூன்று நாட்கள் நிகழ்வாக சிறப்புற நடத்திய போது கொழும்புக்கிளை செயற்குழு உறுப்பினர் வருகை தந்து விழாவுக்கு பெருமை சேர்த்தனர்.

''ஹாட்லிக் கப்'' உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கால் லண்டன் கிளையின் உதவியுடன் 150ம் ஆண்டு நிகழ்வுகளின் போது நடத்தப்பட்டது.

ஐந்து ஆண்டு பாவிக்கப்படாமலிருந்த விளையாட்டு மைதானத்தை சர்வோதய நிறுவனம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்து தந்தது. பருத்தித்துறை நகராட்சி மன்றம் பருத்தித்துறை, புலோலி, கட்டைவேலி, நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கல்லூரி மீளச் சென்றபோது அவ்வப்போது பல உதவிகளைச் செய்தன.

திரு. சி. சிவபாதம் (பழைய மாணவர்) ரூபா பத்தாயிரம் கல்லூரிக்கு வழங்கி வட்டி மூலம் ஆண்டு தோறும் 'Do You Know' போட்டியை நடத்தி மாணவர்களிடையே பொதறிவை வளர்க்க கேட்டுக்கொண்டுள்ளார்.

முன்னைய காலங்களில் என்னென்ன வசதிகளை வளங்களை மாணவர்கள் பெற்றார்களோ அதனளவு இல்லாவிடினும் அதன் ஒரு பகுதியையாவது தற்போது மாணவர்கள் பெற்றிடவேண்டி 'Extra Curricular Artivities Fund' என்ற பெயரில் நிதியம் ஒன்றைத் துவங்கியிருக்கிறோம்.

1) தாய்ச்சங்கம்
2) கொழும்புக் கிளை
3) லண்டன் கிளை
4) அவுஸ்திரேலியா
(i) விக்ரோறியாக் கிளை
(ii) நியூசவுத்வேல்ஸ் கிளை
5) கனடாக் கிளை

எல்லாக் கிளைகளும் தொடர்ந்து இயங்கி அவ்வப்போது கோரிக்கை விடுகின்ற போது நிதிபொருள் உதவிகளை செய்து வருகின்றன. தற்போதுள்ள சூழலில் பெரியளவில் நிதி சேர்ப்பதென்பது எம்மண்ணில் மிகவும் துர்ப்பாக்கியமானது. எனவே உடைந்த கோட்டையை மீண்டும் கட்டி எழுப்ப ஒவ்வொரு கல்லாக எடுத்துத் தரும் படி எல்லாக் கிளையினரையும் அன்புடன் வேண்டுகிறோம். நூல் நிலையம், விளையாட்டுத்துறை, நீர்விநியோகம் மேலும் தேவைகளையும் நிறைவேற்ற ஓரளவு முயன்றிருக்கிறோம். 1985ல் கைவிடப்பட்ட எல்லா நிகழ்வுகளும் 1990ல் மீண்டும் தொடங்கப்பட்டு நடந்து வருகின்றன. (கிரிக்கெட், உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம், சாரணியம் நூல் நிலையம் விஞ்ஞான கூடம்) உடனுக்குடன் கொழும்புக்கிளையும் நிதியாக ஏனைய கிளைகளும் உதவி செய்து வருகின்றன. நூலகவாரம் செப்ரம்பர் 1ம் நாள், ஆசிரியர்தினம் ஒக்ரோபர் 6ம் நாள், பேராசிரியர் துரைராசா நினைவு ஜூன் 14ம் நாள் விளையாட்டுப்போட்டி ஜூலை முதல் சனி என்பவற்றையும் கொண்டாடி கல்லூரி தினத்தையும் கொண்டாட எண்ணியுள்ளோம்.

Hartley Institute என்ற கல்விசார் நிறுவனம் கல்லூரியை விட்டு விலகிய மாணவர்களுக்காக நடத்தப்படுகின்றது. இதன் ஆரம்பத்துக்கும் செயற்பாட்டுக்கும் சிங்கப்பூரில் உள்ள எமது பழைய மாணவன் கலாநிதி A. S. இராசேந்திரன் அவர்கள் பெரிதும் பக்கபலமாக இருப்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். இது போன்று பல்வேறு காலங்களில் பல்வேறுபட்ட உதவிகளை பழைய மாணவர், பெற்றோர், நலன்விரும்பிகள் ஆகியோரிடமிருந்து பெற்றுக்கொண்டு கல்லூரிக் கோட்டை வளர்ந்து வருகிறது.

1985–1994 வரையிலானகாலத்தில் எமது மன்றச் செயற்குழுவில் இயங்கி எல்லாக் காலத்திலும் செயற்பாடுகளின்போது அதீத ஈடுபாடு கொண்டு இயங்கி வந்த அனைவர்க்கும் நன்றி கூறுகிறோம்.

இக்கால கட்டங்களில் எம்மை விட்டு நிரந்தரமாகப் பிரிந்து விட்ட முன்னாள் அதிபர்கள் ஆசிரியர்கள் பற்றிக் குறிப்பிடாமல் விட முடியாது. அதிபர்களான அமரர்கள் C. இராஜதுரை P. ஏகாம்பரம் W.N. S. சாமுவேல், S. இரத்தினசபாபதி ஆகியோரின் கல்லூரியுடனான ஈடுபாட்டினை ஒவ்வொருவரும் தெரிந்து கொண்டு நினைவு கூரவேண்டுகிறோம். ஆசிரியர்களாயிருந்த அமரர்கள் K. விநாயகம்பிள்ளை H. E. அருளம்பலம், K. சிவபாதசுந்தரம், M. சண்முகநாதன், A. M. ஸ்பென்சர், K. பாலச்சந்திரன் பண்டிதர் க. வீரகத்தி திருமதி குலசேகரம் ஆகியோரையும் மனதில் இருத்தி அஞ்சலி செய்வோம்.

ஹாட்லிக் கல்லூரி
பழைய மாணவர் மன்றம்

இதய பூர்வமாக காரியங்களைச் செய்பவனுக்கு இறைவனும் உதவி புரிகிறான். உன்னால் இயன்றவரையில் நற் செயல்களைச் செய்.

சுவாமி விவேகானந்தா.

Hartley College Past Pupils Association Victoria Branch, Australia

The Hartley College Past Pupils Association (HCPPA) (Victoria Branch) was formally inaugurated on the 27th June' 91. The event was the culmination of a series of informal discussions held among old Hartleyites living in Victoria who shared the view that given the large number of ex- Hartleyites living in Victoria and that number growing, an association of former Hartleyites would help to bring together friends and mates of childhood days who once had a common umbilical chord. While everyone supported the idea enthusiastically, it was left to a few to do all the leg-work to translate an idea to reality. Professor Eliezer, the late Mr. Maheswaran, the young Rathan who had just then arrived to study medicine on a scholarship Dr. Thirugnanasunderalingam were some of the key players who took on the role of mid-wives to bring into existence the Association. Professor Eliezer, easily one of the very distinguished old students of Hartley College was elected as the first President and the late Mr. Maheswaran, another jewel in the Hartley crown, was elected to be the first Secretary cum Treasurer. The first year for any voluntary organisation is a testing time and Hartley College Past Pupils Association was no exception to this. The first executive committee tackled the teething problems remarkably well and with the co-operation of and support from many Hartleyites succeeded in laying the foundations for a vibrant and robust Association.

The Association which is now 4 years old has been steadily growing in numbers and presently has a membership of 75. This number is very impressive when you compare it to the membership of other past pupils associations of Sri Lanka active in Australia. The Association's activities have become a regular events in the social calender of the members. Sporting activities and Bar-B-Q parties are organised on a regular basis and these events have been a popular draw-card enabling members to get together to talk of good old times, reminisce and exchange news of mutual interest. These regular rendezvous do also serve to provide opportunity for children of members to get to know each other and establish a new net-work. Annual General meetings are invariably accompanied by either a lunch or dinner and this event has been a great success in the past. The Association has established a distinct identity for itself and is well-known not only in the State of Victoria but also in many of the other states in Australia. The Association actively participates along with other organisations in activities organised by and for the benefit of the Sri Lankan community living in Victoria.

One of the objectives of the Association is to raise funds for the development of the alma mater in particular to assist identified projects which aims to improve the quality of services provided by the college, especially the one off projects which wouldn't require big scale funding and for which funds are not available from other sources. In the pursuit of this objective the association launched a fund raising campaign. From funds raised from this campaign a certain sum of money was remitted to the college in 1993. Since then some more funds have been collected and the Association plans to provide financial assistance to the College, in response to a request from them, to purchase two computers, a video deck and a television. The fund raising is on-going, at least as long as there is a need for it.

Last year HBPPA joined a few of the other past pupil's associations of Jaffna schools to participate in a Jaffna schools past pupils 'Get-Together'. A proposal to make this an annual event is under consideration by the various associations and could well be the precursor to a federation of past pupils associations of all Jaffna schools. A positive outcome will undoubtedly enhance the value and status of all past pupils associations, Hartley included.

Judged by the level of support it has received in the past, it is reasonable to assume that the Hartley College Past Pupils Association (Victoria Branch) will grow from strength to strength fulfilling the aspirations of its founders to be a model outpost of one of the greatest and foremost teaching institutions of Sri Lanka.

C. Kathirgamanathan
Past President,
HCPPA, Victoria Branch.

கொள்கையற்ற அரசியல்,
நற்பண்புகள் இல்லாத கல்வி,
மானுடநேயம் இல்லாத விஞ்ஞானம்,
அறவொழுக்கம் அற்ற கல்வி,
ஆகியவை பயனற்றதும், நேர்முகமான ஆபத்தானவையுமாகும்.

Hartley College Past Pupils Association, Victoria Branch. Management Committee for years 1991, 1992, 1993 & 1994.

Year 1991

President :	Prof. C. J. Eliezer
Vice President :	Mr. C. Kathirgamanathan
Secretary/Treasurer :	Mr. A. Maheswaren
Committee Members :	Mr. C. Mahendran
	Mr. S. Radhan
	Mr. S. R. Sivasubramaniam
	Dr. K. Thirugnanasundaralingam
Hon. Auditor	Mr. S. Ganeshananthan

Year 1992

President :	Mr. C. Kathirgamanathan
Vice President :	Mr. S. Nadarajah
Secretary/Treasurer :	Mr. T. Prabhaharan
Committee Members :	Mr. N. Sivakumar
	Mr. S. Parameshwaran
	Mr. C. Mahendran
	Dr. V. K. Samuel
Hon. Auditor	Mr. S. Ganeshananthan

Year 1993

President :	Mr. C. Kathirgamanathan
Vice President :	Dr. S V. Kasynathan
Secretary/Treasurer :	Mr. J. Jeyakumar
Committee Members :	Mr. K. Sivarajah
	Mr. T. Prabhaharan
	Dr. V. K Samuel
	Mr. K. S. Anandaganeshan
Hon. Auditor	Mr. S. Ganeshananthan

Year 1994

President :	Dr. S. V. Kasynathan
Vice President :	Mr. C. Mahendran
Secretary/Treasurer :	Mr. K. S. Anandaganeshan
Committee Members :	Mr. K. Sivarajah
	Mr. T. Thangaratnam
	Mr. M. Madanasenarajah
	Mr. K. Ketheesuran
Hon. Auditor	Mr. T. Prabhaharan

ஹாட்லிக் கல்லூரி அபிவிருத்திச் சங்கம்

1983 - 1987

1984

தலைவர் :- அதிபர்.

செயலாளர் :- திரு. வி. சேதுநாயகம்.

பொருளாளர் :- திரு. மு. இராமகிருஷ்ணன். (1983 – 1985)
,, N. சர்வானந்தா. (1986 – 1987)

ஆசிரிய பிரதிநிதிகள். திரு. V. சிவசிதம்பரம். திரு. சி. கிருஷ்ணமூர்த்தி.
,, N. சர்வானந்தா

ஏனையோர்: திரு. S. கணேசமூர்த்தி. திரு. C. சிவராஜலிங்கம்.
'' N. வேலும்மயிலும். '' K. சிவக்கொழுந்து.

பேராசிரியர்: V. K. கணேசலிங்கம். திருமதி. S. சுப்பிரமணியம்
திரு. S நந்த கோபால் திரு. S. லோகநாதன்.

12 - 02 - 1983 இல் பூரணம்பிள்ளை மண்டபத் திறப்பு விழா சிறப்புற நடைபெற்றது. துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையமும் ஒரு சோடி மல சல கூடங்களும் கட்டி முடிக்கப் பட்டன.

19 - 02 - 1984 இல் நடை பெற்ற பொதுக் கூட்டத்துக்கு 64 அங்கத்தவர்கள் சமுகமளித்தனர். இக்காலப் பகுதியில் 10 செயற்குழுக் கூட்டங்கள் நடை பெற்றன. 1984ம் ஆண்டுக்குப் பின் யாழ் குடா நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களினாலும், பருத்தித் துறையிலும் அதனைச் சூழவுள்ள கிராமங்களிலும் நடை பெற்ற அசம்பாவிதங்களினாலும் பொதுக் கூட்டம் நடாத்த முடியாமற் போயிற்று. எனினும் பொதுக் கூட்டத்துக்கும் செயற்குழுக் கூட்டங்களுக்கும் சமுகமளித்த அங்கத்தவர்களுக்கு மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இக்காலப் பகுதியில் எமது மாணவர்கள் ஆரம்பத்தில் மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியா சாலையிலும் பின்பு ஓரளவு நிரந்தரமான நிலையில் புற்றளை மகா வித்தியாலயத்திலும் கல்வியைத் தொடர்வதற்காக மாற்றம் செய்யப்பட்டனர். புற்றளை மகா வித்தியாலயத்தில் வகுப்பறை வசதிகள் போதாமையாக இருந்ததால் பெற்றோர்களும் பழைய மாணவர்களும் தாமாகவே முன் வந்து வகுப்பறைகளையும் தளபாட வசதிகளையும் செய்து தந்தனர். முன்னோடியாக நின்று செயற்பட்ட பெற்றோருக்கும் பழைய மாணவர் சங்கச் செயற்குழுவிற்கும் எமது நன்றிகள்.

1975ம் ஆண்டு முதல் அதிபராகப் பணிபுரிந்த திரு. W. N. S. சாமுவேல் 1985ம் ஆண்டு இளைப்பாறினார். அவருக்குப் பின் 1968ம் ஆண்டுமுதல் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. பொ. பாலசிங்கம் அதிபராக நியமிக்கப்பட்டார். அவர்களது பிரியாவிடை வைபவத்திலும் வரவேற்பு வைபவத்திலும் எமது சங்கம் பங்கு கொண்டது.

இறுதியாக அதிபர், செயற்குழு உறுப்பினர், ஏனைய உறுப்பினர்கள் ஆகியோருக்கும் எமது நன்றிகள்.

வி. சேதுநாயகம்
செயலாளர்.

ஹாட்லிக் கல்லூரி அபிவிருத்திச் சபை

1992 - 1994

தலைவர் :- அதிபர்

செயலாளர் :- திரு. வி. சேதுநாயகம். (பழையமாணவர்)

பொருளாளர் :- திரு. வ. பரராசசிங்கம். (ஆசிரியர்)

உறுப்பினர் :- திரு. பா. சுப்பிரமணியம், (1992) பழையமாணவர் (பெற்றார்
,, சொ. தவராசா, (பெற்றார்)
Dr. மு. க. முருகானந்தன், பழையமாணவர் (பெற்றார்)
திரு. சி. ஞானேந்திரன். ஆசிரியர்
திருமதி. இ. செல்வராசா, ஆசிரியர்
திரு. மா. நடராச சுந்தரம். பழையமாணவர்
,, சி. நடராசலிங்கம், பழையமாணவர்
கலாநிதி நா. ஞானகுமார் ,, நலன்விரும்பி
திரு. K. கணபதிப்பிள்ளை (1993) ,, (பெற்றார்)

மேற்படி அபிவிருத்திச் சபை அங்குரார்ப்பணக் கூட்டம் 25 - 07 - 1992ல் நடைபெற்றது. எட்டுக் கூட்டங்கள் நடை பெற்றன. கூட்டங்களுக்குச் சமுகமளித்த உறுப்பினர்களுக்கு எமது நன்றி.

இருபது வருடங்களுக்கு மேலாக ஆசிரியராகப் பணிபுரிந்த திரு. K. நடராசா அதிபராக நியமனம் பெற்றதை அபிவிருத்திச் சபை வரவேற்றது. இளைப்பாறிய அதிபர் திரு. பொ. பாலசிங்கத்துக்கு எளிய முறையில் பிரிவுபசாரவைபவம் ஒன்றையும் நிகழ்த்தியது.

இரண்டு நேரப் பாடசாலை வைப்பதனால் ஏற்படும் கஷ்டங்களை 1994ல் அதிபருக்கு எடுத்துக் கூறி ஒருநேரப் பாடசாலையாக நடத்துவதற்குரிய ஆலோசனையை வழங்கியது.

வி. சேதுநாயகம்
செயலாளர்.

Functions Organised by Hartley College P. P. A.
(Parent Body)

Ter Jubilee Celebration and Prize Giving — 1990



Chief Guest Mr. K. Pooranampillai – emeritus Principal.

Prize Giving 1991

Chief Guest Mr. D. R. Arumaynayagam
President HC P.P.A. and ADE (Eng) Zone 1

HC P.P.A bids Farewell to Mr. & Mrs. K. Pooranampillai on their leaving for UK.

HC P.P.A bids farewell to retiring Principal Mr. P. Balasingam



Mr. D. R. Arumaynayagam, President - Speaks

Prof. A. Thurairajah, President HC. P.P.A (Colombo Branch)



Donating two Laboratory Demonstration Tables — 1994

Hartley College P.P.A. (Parent Body) bids farewell to
Prof A. Thurairajah and Mrs. A. Thurairajah



Hartley College P. P. A (Colombo Branch) - 1938 – 89



Hartley College P.P.A. (Parent Body) — 1993 – 94

In Memoriam

Mr. C. Rajadurai

Mr. C. Rajadurai hailed from a very respectable family and felt proud to call himself an "Alvayan" - Alvai being his village.

A Hartleyite, always optimistic, cheerful, warm hearted and a sincere friend. He had an assortment of friends and moved with politicians and bureaucrats in much the same way as he mingled with those at the grassroot level. He was always at ease making himself quite at home wherever he went. He was unruffled at all times.

